REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 செப்டெம்பர் 16 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN 92
வரு. 92 இல. 221 | Monday 16, September, 2024 | 16 பக்கங்கள் | 50/-

### ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு
## 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மதுபானசாலைகளுக்கு பூட்டு




ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 21 ஆம் மற்றும் 22 ஆம் திகதிகளில் அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படுமென மதுவரித் திணைக்களம் 06

# இலங்கை இன்னும் பொருளாதார ஆபத்திலிருந்து மீளவில்லை



## சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

### எதிர்வரும் தேர்தலில் மக்கள் அதனை தீர்மானிக்க வேண்டும் - IMF தெரிவிப்பு

இலங்கை இதுவரை பயணித்த பாதையில் பல முன்னேற்றங்களை அடைந்துள்ளது. ஆனாலும் நாடு இன்னும் பொருளாதார ஆபத்திலிருந்து மீளவில்லை எனவும் சிரமங்களுக்கு மத்தியில் கிடைத்த வெற்றிகளைப் பாதுகாப்பது முக்கியம் எனவும் அதனை எதிர்வரும் தேர்தலில் இலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டுமெனவும் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கொசெக் (Julie Kozack) தெரிவித்துள்ளார். கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் உரையாற்றிய ஜூலி கொசெக் 06

### ஏனைய மக்களுக்குள்ள சகல வரப்பிரசாதங்கள் உட்பட
# பெருந்தோட்ட மக்களுக்கு சகல உரிமைகளையும் பெற்றுக்கொடுப்பேன்



## அடுத்த 05 வருடங்களில் அரசியல், சமூக புரட்சி




### நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி
## 2024 இரண்டாம் காலாண்டில் 4.7 வீத வளர்ச்சியாக பதிவு
### பொருளாதார மறுசீரமைப்பே காரணம்



2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், இலங்கை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாகவும் இத்தொகை 2022 ஆம் ஆண்டிலிருந்து ஆறு காலாண்டு பொருளாதாரத்துடன் ஒப்பிடுகையில், தொடர்ந்து நேர்மறை வளர்ச்சியின் நான்காவது காலாண்டின் வளர்ச்சியென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். நாட்டில் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார மறுசீரமைப்பின் மூலம் 06

### மீலாதுன் நபி தினம்
## அனைத்து முஸ்லிம்களுக்கும் அர்த்தமுள்ளதாக அமையட்டும்
### ஜனாதிபதி ரணில் வாழ்த்து

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறப்பை நினைவுகூரும் வகையில், மீலாதுன் நபி தினத்தை உலகெங்கிலுமுள்ள முஸ்லிம் சமூகத்துடன் இலங்கை முஸ்லிம்கள் சகோதரத்துவத்துடன் கொண்டாடுகின்றனர்.

இந்த மீலாதுன் நபி தினம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அர்த்தமுள்ளதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமைய பிரார்த்திக்கிறேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மீலாதுன் நபி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் அவர் 06

### தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை
## பெறுபேறுகளை 40 நாட்களுள் வெளியிடலாம் என தெரிவிப்பு



2024 ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் 40 நாட்களுக்குள் வெளியிடக்கூடியதாக இருக்குமென பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை நேற்று (15) நிறைவடைந்ததை தொடர்ந்து, ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர,

இவ்வாண்டுக்கான பரீட்சை நாடளாவிய ரீதியில் 2,849 பரீட்சை நிலையங்களில் 3,23,841 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றியதாக கூறினார்.

புலமைப்பரிசில் பரீட்சை குறித்து மாணவர்களிடம் கேட்டு அவர்களை சிரமப்படுத்தக் கூடாதெனவும் பெற்றோரிடம் அவர் 06

## G.C.E O/L பரீட்சை பெறுபேறுகள் இரண்டு வாரங்களில் வெளியீடு
### 2024 G.C.E A/L பரீட்சை நவம்பர் 25 இல்



கா.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இன்னும் இரு வாரங்களுக்குள் வெளியிடப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனை 06

### தேர்தலில் கள்ள வாக்கு அளித்தால்
## ஒரு வருடகாலம் சிறை ரூ. 2 இலட்சம் அபராதம்



ஜனாதிபதித் தேர்தலில் கள்ள வாக்களிப்பில் ஈடுபடும் நபர்களுக்கு 2023 ஆம் ஆண்டு 21ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், ஒரு வருடகால சிறை தண்டனையும் 02 இலட்சம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் அதிகமான 06

### 18 ஆம் திகதி நள்ளிரவின் பின்
## சமூக ஊடகங்கள் மீது கடும் கண்காணிப்பு



ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் நிறைவடைந்ததன் பின்னர் சமூக வலைதளங்களூடாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களைத் தடுப்பதற்கு விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அமைதியான காலத்தில் எந்த பிரசாரமும் செய்யக்கூடாது என்பதை சட்டம் உறுதி செய்வதாகவும், ஆனால், சிலர் சமூக வலைதளங்களை பயன்படுத்தி 06

## தேர்தல் முறைப்பாடுகள் இதுவரை 3,828 பதிவு
### தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு



ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக இதுவரை 3,828 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் 14 ஆம் திகதி வரையிலேயே இந்த முறைப்பாடுகள் 06

### தோட்டத் தொழிலாளர்களுக்கு
## 350 ரூபாவையும் நிச்சயம் CWC பெற்று கொடுக்கும்



### செந்தில் தொண்டமான் உறுதி

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,350 ரூபா சம்பள உயர்வை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் விரைவில் எஞ்சிய 350 ரூபா கொடுப்பனவையும் பெற்றுக்கொடுப்போமெனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர், 06

### தேர்தல் பிரசாரங்களில் சிறுவர்கள்
## விசாரணைகளை ஆரம்பித்துள்ள சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அரசியல் பிரசாரங்களில் பல்வேறு அரசியல் கட்சிகளும் சிறுவர்களை ஈடுபடுத்துவது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இதுதொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது விஷேட 06

### நிறுவனங்களின் ஊழியர்களுக்கு
## வாக்களிக்க விடுமுறை வழங்குவது கட்டாயம்

அரச, தனியார் மற்றும் (semi government) அரை அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வாக்களிப்பதற்காக கட்டாயம் விடுமுறை வழங்கவேண்டுமென பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. ஒரு நிறுவனத்தின் தலைவர் இந்த சட்டத்துக்கு இணங்காமல், ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கவில்லையெனில், 06

## ஐ.ம.ச. வன்முறையை தூண்டிய கட்சி அல்ல
### சிலர் அதனை ஏற்படுத்த முயற்சி - சஜித்



ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் வன்முறையை தூண்டியதில்லை. ஆனால், இந்த நாட்களில் வன்முறையை ஏற்படுத்த முயற்சிகள் இடம்பெறுவதாக அநுரகுமார திசாநாயக்க மற்றும் மேலும் சிலர் கூறி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் 06

## நகரம், கிராமம் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் சமமான கல்விமுறை
### 2030 இல் 2 இலட்சம் IT பொறியியலாளர்கள் – அநுரகுமார திசாநாயக்க



நகரத்துக்கு ஒரு வகையான கல்வியும் கிராமத்துக்கு ஒரு கல்வியும் கற்பிக்கப்படும் கட்டமைப்பை மாற்றி, அனைவருக்கும் சமமான கல்வியை வழங்க நடவடிக்கை எடுப்போம். 2030 ஆம் ஆண்டில் 02 இலட்சம் தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்களை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்வோமென தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் 06

## நாட்டை மாற்றும் திட்டம் எங்களிடமே உள்ளது
### நாமல் ராஜபக்ஷ



நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவதற்கும் நாட்டை மாற்றுவதற்குமான திட்டம் தம்மிடமே உள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற தொகுதி கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் 06

## நாட்டின் ஏமாற்று அரசியலுக்கு நாம் முற்றுப்புள்ளி வைப்போம்
### திலித் ஜயவீர



தாம் முன்வைத்திருப்பது வாக்குறுதிப் பத்திரமல்ல எனவும் மாறாக களத்தில் யதார்த்தமாக்கக் கூடிய மூலோபாய வேலைத் திட்டத்தையே முன்வைத்திருப்பதாகவும் சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

அக்குரஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் 06



92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# வடக்கு மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு மட்டுமன்றி அபிவிருத்தி பிரச்சினைக்கும் தீர்வு




லோரன்ஸ் செல்வநாயகம்

- சஜித் அல்லது அனுரவிடம் வடக்குக்கான தீர்வு கிடையாது
- தேசிய காணி ஆணைக்குழு மற்றும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு (TRC) நிறுவப்படும்
- காணாமல் போனோரின் பிரச்சினைக்கு அடுத்த 05 வருடங்களில் முழுமையான தீர்வு
- மாகாண சபைகளுக்கு எதிராக அனுரகுமார தெற்கில் பெரும் போராட்டம் முன்னெடுத்தார்
- தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் நம்பிக்கை இழந்திருந்தபோது அனைவருக்கும் எதிர்பார்ப்பை அளித்தது நான்தான்.
- IMF திட்டத்தை தொடராவிட்டால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையக் கூடுமென IMF எச்சரித்தது.

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

வடக்கின் விடயங்களை அரசியல் பிரச்சினைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. அப்பிரதேசத்திற்கு அபிவிருத்தியும் அவசியம். இல்லையெனில் ஏனைய மாகாணங்கள் முன்னேறுகையில் வடக்கு பின்தங்கிவிடும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். வடக்கின் அபிவிருத்தியை போன்றே அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மாகாண சபைகளை வலுப்படுத்தி அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக தனது கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கியுள்ளதாகவும், மத்திய அரசாங்கத்திற்கு உதவும் வகையில் 9 மாகாண சிற்றரசுகளின் கீழ் அபிவிருத்தி வேலைத்திட்டம் துரிதப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். தேசிய காணி ஆணைக்குழு மற்றும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு (TRC) ஸ்தாபிக்கப்படும் எனவும் நவாஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக எதிர்வரும் 5 வருடங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் (14) நடைபெற்ற "ரணிலால் இயலும்" வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மக்கள் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.



முன்னாள் விவசாய அமைச்சர் அனுரகுமார எவ்வாறு தென்னிலங்கையில் மாகாண சபைகளுக்கு எதிராக மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்தார் என்பதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இன்று யாழ்ப்பாணம் வந்து மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் இந்த விடயங்கள் தொடர்பில் மக்களுக்கு உறுதிமொழி அளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

கடந்த பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைத்து மக்களும் நம்பிக்கை இழந்திருந்த நிலையில் அவர்களுக்கு நம்பிக்கையை வழங்குவதற்காக தாம் பாடுபட்டதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். "இயலும் ஸ்ரீலங்கா" திட்டத்தின் மூலம் நாட்டின் எதிர்காலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தற்பொழுது நாட்டின் பொருளாதார வாயில்கள் திறந்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்தை வலுவாக தொடராவிட்டால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையக்கூடும் என சர்வதேச நாணய நிதியம் நேற்று விடுத்த எச்சரிக்கையை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தைப் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும் எனவும் தெரிவித்தார்.

இன்னும் 03 வருடங்களுக்கு இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் எவராலும் உடைக்க முடியாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, வடக்கை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமொன்று வடக்கிற்கு அவசியம் எனவும் சஜித் பிரேமதாசவிடமோ அனுரகுமாரவிடமோ அதற்கான தீர்வு இல்லை எனவும் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

எப்பொழுதும் நான் யாழ்ப்பாணம் வருகிறேன். தேர்தல்களின் போதும் வந்து மக்கள் மத்தியில் உரையாற்றியுள்ளேன்.ஏனைய வேட்பாளர்களுக்கு தேர்தல் காலத்தில் மாத்திரம் தான் யாழ்ப்பாணம் நினைவு வருகிறது. ஆனால் எனக்கு தேர்தல் காலத்திலும் வந்து உங்களை சந்திக்க முடிகிறது. 1978 முதல் இங்கு வந்துள்ளேன். அந்த சமயம் யாழ் மாநகநகர சபை, யாழ் பிரதேச சபை, சாவகச்சேரி நகர சபை, பருத்தித்துறை நகர சபைக்கும் போட்டியிட்டது. சாவகச்சேரி பகுதி எனக்கு வழங்கப்பட்டிருந்தது. அன்று தொடக்கம் இங்கு வருகிறேன். இன்று எனக்கு வாக்குக் கோரி வந்துள்ளேன்.



நீங்கள் உணவின்றி இருந்த போது அதற்கு தீர்வு வழங்கினேன். கேஸ், பெற்றோல்,உரம். மருந்து இல்லாதபோது நான் அவற்றைப் பெற்றுக் கொடுத்தேன்.

எந்த எதிர்பார்ப்பும் இன்றி இருந்த உங்களுக்கு எதிர்பார்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன். எதிர்காலத்தையும் உருவாக்கினேன். தற்பொழுது பொருளாதாரத்தை மீட்டிருக்கிறேன். மக்களுக்கு வாழும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அது 2019 போன்ற நிலைமையல்ல. அந்த நிலைமைக்கு நாம் செல்ல வேண்டும். இன்றுள்ள நிலைமை மாறலாம்.வீழ்ச்சியடையலாம். அது குறித்து ஐஎம்எப் எச்சரிக்கை விடுத்துள்ளது. தற்போதைய நிலைமை நன்றாக உள்ளது. ஆனால் இந்தப் பாதையில் செல்லாவிட்டால் மீண்டும் சரிவு ஏற்படலாம் என எச்சரித்துள்ளது. இதே பாதையில் தொடர்ந்து செல்வதற்காகவே உங்களிடம் வாக்கு கோரி வந்துள்ளேன்.

அநுரவுக்கும் சஜித்துக்கும் இன்றுள்ள முறைமையை மாற்றி தமது முறைப்படி செல்ல வேண்டும். வாழ்க்கைச் சுமையை குறைப்பதாகவும் வரியை குறைப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். அவ்வாறு செய்தால் ஐஎம்.எப் உதவி கிடைக்காது. அந்த நிலையில் வீழ்ச்சி ஏற்படும். நான் ஐஎம்எப் உடன் கலந்துரையாடி ரூபாயை பலப்படுத்தினேன். 370 ரூபாயாக இருந்த டொலரின் பெறுமதி இன்று 300 ரூபாயாக குறைந்துள்ளது. பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. இன்னும் விலைகள் குறைய வேண்டும். மக்களுக்கு இன்னும் நிவாரணம் வழங்க வேண்டும். எமக்கு கடன் வழங்க வேண்டாம் எனவும் பணம் அச்சிடக் கூடாது எனவும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. இந்த நிலையில் நிதி திரட்டவே வரி அதிகரிக்கப்பட்டது. வரி அதிகரித்ததால் தான் வருமானம் அதிகரித்து ரூபாயின் பெறுமதி உயர்ந்தது. அதனால் ஓரளவு நிவாரணம் வழங்க முடிந்தது.



முதலீட்டாளர்கள் முதலீடுகளை ஆரம்பிக்கும்வரை இளைஞர் யுவதிகளுக்கு சில வாய்ப்புகளை வழங்க வேண்டும். அடுத்த வருடம் ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புகளை வழங்க இருக்கிறோம். விவசாய நவீனமயமாக்கலையும் மேற்கொள்ள இருக்கிறோம். உலக சனத்தொகை இரண்டு பில்லியன்களால் உயர இருக்கிறது. அதில் சிறு குழுவுக்காவது உணவு வழங்கும் நிலையை உருவாக்க வேண்டும். பழமையான விவசாய முறைகள் அன்றி நவீன விவசாய முறைகளின் ஊடாக உற்பத்தி அதிகரிக்கும், வருமானம் உயரும்.

உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்க இருக்கிறோம். நவாஸ் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக காணமல் போனோர் தொடர்பான பிரச்சினையை 5 வருடங்களில் நிறைவு செய்ய இருக்கிறோம்.

தமிழர் பிரச்சினையை தீர்ப்பதோடு தமிழ் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் தீர்க்க இருக்கிறோம். பெண்களை வலுவூட்டும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம்.குடும்ப வன்முறைகளை தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். குடிபோதையில் வந்து மனைவியை அச்சுறுத்தினால் அந்தக் கணவரை பொலிஸில் நிறுத்தமுடியும். அரசியல் பிரச்சினைக்கு மாத்திரம் அன்றி அபிவிருத்தியும் மேற்கொள்ள இருக்கிறோம். காங்கேசன்துறையில் முதலாவது முதலீட்டு வலயம் உருவாக்கப்படும். இரண்டாம் கட்டம் பரந்தனிலும் மூன்றாம் கட்டம் மாங்குளத்திலும் ஆரம்பிக்கப்படும். பாரிய அபிவிருத்தியை ஏற்படுத்த இருக்கிறோம்.

சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான ஹோட்டல் வசதிகள் இங்கு போதாது. அவற்றை ஆரம்பிக்க வேண்டும்.படகுச்சவாரிகளை ஆரம்பிக்க வேண்டும். புலிகள் காலத்தில் படகோட்டியவர்கள் இருக்கிறார்கள்.அவர்களுக்கு வருமான வழியாக இருக்கும்.

இங்கு டிஜிட்டல் வலயமொன்றையும் உருவாக்க இருக்கிறோம். யுத்தத்துடன் தொடர்புடையவர்களை இணைத்துக் கொண்டு நவீன விவசாயத்தை முன்னெடுக்க இருக்கிறோம்.அவர்களுக்கும் எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எமது கடற்றொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டும்.

பூகரில் சூரிய சக்தி மின்உற்பத்தி நிலையம் ஆரம்பிக்க இருக்கிறோம். அரசியல் பிரச்சினைக்கு தீர்வும் அபிவிருத்தியும் சமமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அநுர குமார முன்னர் மாகாண சபை முறைக்கு எதிராக போரடினார். தெற்கில் பாரிய யுத்தம் செய்தனர். அதற்கு எதிரானவர்களிடம் உறுதி மொழி பெற்றனர். தமிழ் மக்களை அச்சுறுத்தியதற்கு எதிராக நாம் யாழ்ப்பாணத்தில் அநுரவை விமர்சித்திருந்தேன். அதற்கு அவர் எனக்கு ஏசியுள்ளார். நான் ஏதாவது தவறாகச் சொன்னேனா? சுமந்திரன் தான் அவரை பாதுகாக்கிறார்.

நான் பொருளாதார பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பினால் அவரால் பதில் வழங்க முடியாது.அவர் என்னை விவாதத்திற்கு அழைத்தார். ஆனால் இதுவரை அதற்கான அழைப்பு கிடைக்கவில்லை.

நான் கேட்கும் கேள்விகளுக்கு அவரால் பதில் வழங்க முடியாது. சஜித்தைப் பற்றி சொல்வதற்கு எதுவுமில்லை.அவரை பற்றி எனக்கு நன்கு தெரியும். இந்த இரு வேட்பாளர்களினாலும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வராது.

எமது திட்டங்களினால்தான் யாழ்ப்பாணத்தை முன்னேற்ற முடியும். இங்கு பாரிய மாகாண சபைக் கட்டடமொன்று உள்ளது. இந்தக் கட்டடம் போதுமானதல்ல. அதனை பலப்படுத்த நாம் நிதி ஒதுக்குவோம். யாழ்ப்பாணத்திற்கு பலம் வாய்ந்த பொருளாதரம் அவசியம்.

சிந்தித்து வாக்களியுங்கள். தவறினால் கேஸும் இல்லை. யாழ்ப்பாணத்துக்கு அபிவிருத்தியும் இல்லை" என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.





# நட்பு வட்டாரங்களிலிருந்து அறவிடாமல் இரத்து செய்த கடனை மீளப் பெறுவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

அரச வங்கி கட்டமைப்புக்குள் பெரும் செல்வந்தர்கள் மற்றும் கோடீஸ்வரர்கள் பிணையின்றி பெற்றுக் கொண்ட கடனை நட்பு வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு இரத்து செய்யப்பட்டதாக கேள்விப்படுகின்றோம். இதுகுறித்து நாம் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது அது இரகசிய விடயங்கள் அவற்றை வெளியிட முடியாது என்று கூறப்பட்டது. அரசாங்கம் அப்படி கூறினாலும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக இவ்வாறான திருட்டுத்தனமான கொடுக்கல் வாங்கல்களையும் கடன் இரத்து செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியளையும் வெளியிடுவோம். அநீதியான முறையில் இவ்வாறான சலுகைகளை பெற்றுக் கொண்டவர்கள் அனைவரும் அந்தக் கடன் தொகையை மீள செலுத்த வேண்டியேற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் வங்கித் துறையில் பணியாற்றுகின்றவர்களின் 'ஐக்கிய வங்கியாலாளர்களின் மாநாடு' (14) கொழும்பில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாதாரண பொது மக்களுக்கு ஒரு சட்டமும், நட்பு வட்டார தொடர்புகள் உள்ள செல்வந்தர்களுக்கு வேறு ஒரு சட்டமும் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு இடமளிக்க முடியாது. சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறையாளார்களின் சொத்துக்களை ஏலத்தில் விடுவதற்கு முடியுமாக இருந்த போதிலும், நட்பு வட்டார கோடீஸ்வரர்களின் சொத்துக்களை ஏலத்தில் விடுவதற்கு அரசாங்கத்தினால் முடியாமல் போயிருக்கின்றது. இவை அனைத்தும் சட்ட ரீதியாக இடம்பெற வேண்டும். அனைவருக்கும் சட்டத்தை சமமான முறையில் செயற்படுத்த வேண்டும். செல்வமும் அதிகார தொடர்புகளும் இருக்கின்றது என்பதற்காக கடன்களை இரத்து செய்கின்ற யுகத்தை நிறைவு செய்ய வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



எமது நாட்டில் காணப்படுகின்ற வரி சூத்திரம் அசாதாரணமான முறையில் செயற்படுகின்றது. சில வருடங்களுக்கு முன்பு காணப்பட்ட வரிமுறை தொடர்பில் வரி ஆணைக்குழு அறிக்கையில் உள்ளது. வரி ஆணைக் குழு அறிக்கையின் பிரகாரம் எமது நாட்டின் வரி வருமானத்தில் 80 வீதமானவை மறைமுகமாகவும் 20 வீதமானவை வெளிப்படையாகவும் அறவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. மறைமுகமான வரி பிற்போக்கான வரியாக உள்ளது. இந்த வரியானது, சம்பாதிக்கின்ற வருமானத்தின் அளவு எதுவாக இருந்தாலும் சமமாக செலுத்தப்பட வேண்டும். 20 வீத வெளிப்படையான வரியானது, வருமானத்தின் அளவுக்காக பெறப்படுகின்ற வரியாகும். அண்மைக்கால அரசாங்கங்கள் எதுவும் இந்த கணிப்பு முறையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டாலும், ஐக்கிய மக்கள் சக்தி இந்த முறையை மாற்றும் என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கம் தேவைக்கு அதிகமாகவும் வரியை அறவிடுகின்றது. உழைக்கும்போது அறவிடப்படுகின்ற வரி தற்பொழுது அதிகரித்துக் காணப்படுகின்றது. தன்னிச்சையாக இந்த அரசாங்கம் வரியை அதிகரித்து விட்டு, தூக்கத்திலிருந்து திடீரென விழித்துக் கொண்டது போல வரியை குறைப்போம் என்று கூறுகின்றது. தேர்தல் காலத்தில் கூறுகின்ற இந்த விடயங்கள் தேர்தல் உருட்டுக்களாகும். போட்டியின் போது வர்த்தமானிகளும் அமைச்சரவை பத்திரங்களும் முன் வைக்கப்படுகின்றன. ஜனவரியில் செய்ய வேண்டிய வேலைகளை தற்போது செய்து பலன் இல்லை என எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தார்.

தற்பொழுது 6 36 வீதம் வரை வரி அறுவிடப்பட்டாலும், அதனை 1 24 வீதம் வரை குறைப்போம். இதன் போது நாங்கள் பொறுப்புடன் செயல்படுவோம். அரசாங்கத்தின் வருமானம் உள்நாட்டு உற்பத்தியில் ரணசிங்க



பிரேமதாசவின் காலத்தில் 21 வீதமாகவும் 2019 இல் 12 வீதமாகவும் காணப்பட்டது. கோட்டாபய ராஜபக்சவின் வரி சலுகை காரணமாக 8 வீதம் வரை அது குறைவடைந்தது. எனவே ரேட்டிங் நிறுவனம் எமது நாட்டை கீழ் மட்டத்தில் வைத்திருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக பொறுப்பான அரசாங்கம் என்ற வகையில் நடைமுறைக்கு பொருத்தமான வகையில் வரி சுமையை குறைப்போம் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 செப்டெம்பர் 16 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவனி 31
ராகுகாலம் : காலை : 7.33 - 9.03வரை
சுபநேரம் : பகல் : 12.03 - 1.33வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## பொய் வாக்குறுதிகள் வழங்கும்
# அநுரகுமாரவுக்கு ஒருபோதும் ஆட்சியமைக்க பலம் கிடையாது
## பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

**கண்டியிலிருந்து லோரன்ஸ் செல்வ நாயகம்**

மக்களுக்கு பொய் வாக்குறுதிகளை வழங்கி நாட்டை ஆட்சி செய்யப்போவதாக பிரசாரங்களை மேற்கொண்டு வரும் அநுரகுமார திசாநாயக்கவுக்கு ஆட்சியமைப்பதற்கான எந்தவொரு பெரும்பான்மை பலமும் கிடையாது எனவும்அநுரவின் கட்சியில் பாராளுமன்றத்தில் வெறும் மூன்று எம்பிக்களே உள்ளனர் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

எனவே அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாக்குறுதிகளை மட்டுமே வழங்க முடியுமே தவிர, எந்த சட்டங்களையும் அவரால் நிறைவேற்ற முடியாது என தெரிவித்த பிரதமர், பொறாமையை அடிப்படையாக வைத்து செயற்படும் இத்தகைய தலைவர்களுக்கு நாட்டு மக்கள் ஒருபோதும் ஆதரவளிக்கக்கூடாது எனவும் வலியுறுத்தினார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கண்டியில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர்,

நாடு நெருக்கடியில் இருந்தபோது அராஜகத்தை ஏற்படுத்தி செயற்பட்டவர்கள் தற்போது மக்களிடம் வாக்கு கேட்டு வந்துள்ளனர். அவர்களால் இந்த நாட்டை ஆட்சி செய்ய முடியாது. அதற்கான பலம் அவர்களுக்கு பாராளுமன்றத்திலும் கிடையாது.

சட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்களிடம் மூன்றே மூன்று உறுப்பினர்கள் மட்டுமே உள்ளார்கள். இந்நிலையிலேயே தங்களால் நாட்டை கட்டியெழுப்ப முடியும் என அவர்கள் மக்களுக்கு பொய் வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர்.

இது அவர்கள் பொறாமை நிமித்தம் மேற்கொள்ளும் செயலாகும் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இம்முறை தேர்தலில் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். தங்களது எதிர்காலத்தையும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் நாட்டின் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி வேட்பாளர்கள் ஒருவரை ஒருவர் ஊக்குவித்து பிரசாரங்கள் செய்வது தடை

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், மற்றொரு வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையில் பிரசாரம் செய்வதானது தேர்தல் சட்டத்துக்கு முரணானதென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்காக வேட்புமனு சமர்ப்பித்துள்ள சில வேட்பாளர்கள், பிற வேட்பாளர்களுக்காக அல்லது அவர்களை ஊக்குவிக்கும் வகையில், பிரசாரம் செய்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், இது முற்றிலும் தேர்தல் சட்டத்துக்கு முரணானது என்பதால் இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமெனத் தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இவ்வாறு சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் செயற்பாடுகள் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்துள்ளன.




அதன்படி, இதுவரை வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிக்குள், தங்களுக்கு அருகிலுள்ள தபால் அலுவலகத்துக்குச் சென்று வாக்காளர் அட்டையை பெற்றுக்கொள்ளுமாறு தபால் திணைக்களம் கோரியுள்ளது.

எவ்வாறாயினும், வாக்காளர் அட்டையின்றி, ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய செல்லுபடியாகும் ஆவணங்களைச் சமர்ப்பித்து வாக்களிக்க முடியமெனவும் தேர்தல் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# அமைதியாக நடைபெற்று முடிந்த தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை

நாடளாவிய ரீதியில் நேற்று (15) காலை 9.30 மணிக்கு ஆரம்பமான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை அமைதியான முறையில் நடைபெற்று முடிந்துள்ளது.




இப் பரீட்சைக்கு சுமார் 03 இலட்சத்து 23 ஆயிரத்து 879 மாணவர்கள் தோற்றியிருந்ததுடன், 2,849 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் நடத்தப்பட்டிருந்தன. அதன்படி, நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஆர்வத்துடன் மாணவர்கள் பரீட்சையை எதிர்நோக்கியிருந்தனர்.

இறுக்கமான நடைமுறைகளுடன் மிக அமைதியான முறையில் இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைகள் நடைபெற்றதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குருநாகல் முன்னாள் மாநகர சபை முதல்வருக்கு வாக்களிக்க தடை

குருநாகல் மாநகர சபை முன்னாள் முதல்வர் துஷார சஞ்சீவ விதாரணவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பல குற்றச்சாட்டுக்களை கருத்திற்கொண்டு, 2024 ஆம் ஆண்டு முதல்



2032 ஆம் ஆண்டு வரையிலான 07 வருட காலத்துக்கு எந்தவொரு தேர்தலிலும் வாக்களிக்க முடியாதவாறு தடை விதிக்க தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

# வன்முறை அரசியலை ஒழிக்க ஜனாதிபதி ரணிலால் மட்டுமே முடியும்

வன்முறை அரசியலை நாட்டிலிருந்து இல்லாதொழிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே முடியும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வக, மேல் மாஓல பிரதேசத்தில் நேற்று (15) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களாக, வன்முறைகள், துன்பம் மற்றும் மரண ஓலங்களை நாங்கள் அனுபவித்திருக்கிறோம். அண்மைக் கால வரலாற்றில் வடக்கு, தெற்கு வன்முறை அரசியலால் விலைமதிப்பற்ற மனித உயிர்கள் ஏராளமாக அழிக்கப்பட்டுள்ளன.

1989 பயங்கரவாதத்தின்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்த வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், பயங்கரவாத சகாப்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர், ஜே.வி.பி படிப்படியாக ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்தது. அவர்கள் ஒருபோதும் வன்முறையில் ஈடுபடவில்லை. கடந்த தேர்தல்களில் அமைதியாக கலந்து கொண்டனர். ஆனால் இது நாடகம் என்பது 2022 ஆம் ஆண்டு மே 9 ஆம் திகதியன்று நடந்த ஜனநாயக விரோதப் போராட்டத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டது.





அத்துடன், தற்போது இவர்கள் இலங்கையை பங்களாதேஷாக மாற்ற முயற்சிக்கின்றனர். பங்களாதேஷ் மிகவும் சிறப்பாக ஆளப்பட்ட நாடு. இன்று போராட்டக்காரர்களால் அவர்கள் ஆழமான பள்ளத்தில் வீழ்ந்துள்ளனர். தண்ணீர், எரிவாயு, எண்ணெய், மின்சாரம் இல்லாத நாடாக மாறியுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்களது 251 நிறுவனங்களை திரும்ப பெற்றுள்ளனர். அந்தப் பாதுகாப்பின்மை நிலையை இலங்கை பெறாதிருக்க வேண்டுமானால், செப்டம்பர் 21 திகதியன்று மக்கள் சிந்தித்து செயற்படவேண்டும்.

இரண்டு வருடங்களாக இந்த நாட்டை பாதுகாப்பாக கொண்டு வந்து, நாட்டின் பொருளாதாரத்தையும் உங்களை பலப்படுத்தி வரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, உங்கள் மற்றும் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை மேலும் பாதுகாப்பதற்கான ஆணையை நீங்கள் வழங்க வேண்டும் என அவர் தெரிவத்தார்.

# வறுமை ஒழிப்பை மையப்படுத்திய கொள்கையை அமுல்படுத்துவதே இலக்கு
## ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ

வறுமை ஒழிப்பை மையப்படுத்திய அரச கொள்கையை அமுல்படுத்துவதே தனது பிரதான இலக்கு என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மஹியங்கனையில் நேற்று (15) நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், மேலும் தெரிவிக்கையில்,



சமுர்த்தி பெறுபவர்களை, சமுர்த்தி பெறபவர்களா மட்டுமல்லாது, அவர்கள் வருமானம் ஈட்டுபவராக, தொழில்முனைவோராக மற்றும் வேலைவாய்ப்பிலுள்ள இளைஞர்களாக மாற்றப்படுவர்.

எங்களால் உங்கள் பொருளாதாரத்தை உயர்த்த முடியும். உங்களுக்காக ஒரு அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டம் எங்களிடம் உள்ளது. துரதிஷ்டவசமாக 2015இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கு அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த விருப்பம் இல்லை. பழிவாங்கும் எண்ணமே அவர்களுக்கு இருந்தது.

சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்கள் பற்றி நான் கூறப்போவதில்லை. நாம் போரை முடித்துவிட்டோம். மீண்டும் ஒரு முறை நாட்டைப் பிரிக்கவும் 13 காணி அதிகாரங்களையும் பொலிஸ் அதிகாரங்களையும் வழங்க அனுமதிக்க மாட்டோம். மீண்டும் அச்சுறுத்தப்பட்ட கிராமத்திற்குள் அடைத்து வைக்க நாம் அனுமதிக்கப்போவதில்லை. இந்த செய்தியை உங்கள் கிராமத்திற்கு எடுத்துச் செல்லுங்கள்.

உங்கள் அரசியல் கட்சி, உங்கள் அரசியல் பலம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன.

எனவே, 21 ஆம் திகதி சிந்தித்து வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## ஜனாதிபதி தேர்தல் பணிகள் பூர்த்தி
# தேர்தலை சுதந்திரமாக, நீதியாக நம்பகத்தன்மையுடன் நடத்த தயார்

தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நம்பகத்தன்மையுடனும் நடத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் சட்ட ரீதியாக மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் தொடர்பான சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள், பணிப்புரைகளை வெளியிட்டுள்ளதோடு, அது குறித்து பொதுமக்களையும் வெகுஜன ஊடகங்கள் ஊடாக அறிவுறுத்தியுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

எனினும், தேர்தல் ஆணைக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு புறம்பாக, பல்வேறு தரப்பினரும் அமைப்புகளும் தேர்தல் செயன்முறை தொடர்பாக, முக்கியமாக வாக்கு அடையாளமிடப்படும் விதம், வாக்குகளையும் விருப்புகளையும் எண்ணும் விதம், தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்தல் மற்றும் பிரசார நடவடிக்கைகள் சார்ந்த பணிகள் குறித்து தெரிவிக்கும் கூற்றுகளும் அபிப்பிராயங்களும் ஊடகங்கள் வாயிலாக பிரசாரம் செய்யப்படுவதை அவதானிக்க முடிவதாகவும் ஆணைக்குழு கூறியுள்ளது. இவ்வாறான விடயங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அறிவித்தல் அல்லவெனவும் அவ்வாறான கூற்றுகள் எவையும் செல்லுபடியற்றவை எனவும் அவை தொடர்பான பொறுப்பு தமது ஆணைக்குழுவுக்கு இல்லை எனவும் தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, தேர்தல் தொடர்பிலான அனைத்து விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புக்களை தேர்தல் ஆணைக்குழு வெளியிடுவதனால், வேறு நபர்களோ அமைப்புகளோ வெளியிடும் கருத்துக்களையும் அறிவுறுத்தல்களையும் பொருட்படுத்த வேண்டாமென பொதுமக்களை தேர்தல் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.




# ஜனாதிபதி தேர்தலில் அச்சுறுத்தல்: பொது வேட்பாளருக்கு பொலிஸார் கடிதம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அச்சுறுத்தல்கள் தொடர்பாக தமிழ் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு பிரதி பொலிஸ் மா அதிபரால் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடுவதால் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன் மற்றும் எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் அதிருப்தியில் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



மேலும், பொதுமக்கள் சந்திப்பு மற்றும் நிகழ்வுகளின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்போது அது குறித்து அவதானம் செலுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# வாக்காளர்களுக்கு ரூ.5000; வர்த்தகர் கைது
## மூதூர் பிரதேசத்தில் சம்பவம்

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை ஆதரிக்கக் கோரி தலா 5000 ரூபா வீதம் விநியோகித்த வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர். கிண்ணியா பிரதேசத்தைச் 26 வயதுடைய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து நபரொருவரின் வீட்டில் சந்தேகநபர் பணம் விநியோகித்ததாக மூதூர் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், ஜனாதிபதி வேட்பாளரை விளம்பரப்படுத்துவதற்காக மக்களுக்கு தலா 5,000 ரூபாவை விநியோகித்துள்ளதுடன், எதிர்காலத்தில் அரசியலுக்கு வரும் நோக்கில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 31ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 12




# பொருளாதாரம் தொடர்பில் பொறுப்புடன் செயற்படுவது அவசியம்

ஜனாதிபதி தேர்தல் களம் உச்சளவில் சூடுபிடித்துள்ளது. நாளை மறுதினம் 18 திகதி இரவு நள்ளிரவுடன் தேர்தல் பிரசாரங்கள் நிறைவு பெறவும் உள்ளன.

இந்நிலையில் இத்தேர்தல் பிரசார களத்தைப் பொதுவாக எடுத்து நோக்கினால் முன்னொரு போதும் இல்லாத வகையில் இம்முறை பொருளாதாரம் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இத்தேர்தலின் பிரதான அபேட்சகர்களாக விளங்குபவர்களின் பிரசார மேடைகளிலும் கூட்டங்களிலும் இதனைப் பரவலாக அவதானிக்க முடிகிறது. அத்தோடு சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை மேற்கொண்டுள்ள பொருளாதார மேம்பாட்டு உடன்படிக்கை குறித்தும் அதிகம் கலந்துரையாடப்படுகின்றன. கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களுடன் ஒப்பிடும் போது இந்நிலைமை முதற்தடவையாகவே ஏற்பட்டிருக்கிறது.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் இந்நாடு கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. வங்குரோத்து நிலையை அடைந்தது. அந்த நெருக்கடியினால் நாடும் மக்களும் கடும் பாதிபபுக்களுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்தார்கள். அதனால் அன்றைய அரசாங்கமும் ஆட்சியாளர்களும் செய்வதறியாது பதவிகளை விட்டு வெளியேறினர்.

அந்த இக்கட்டான சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றார். அத்தோடு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான பொருளாதார வேலைத் திட்டங்களை ஆரம்பித்தார். அதன் பிரதிபலன்களை நாடும் மக்களும் அடைந்து கொள்ளத் தொடங்கினர். இதன் விளைவாக பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக நாட்டில் ஏற்பட்டிருந்த பாதிப்புக்களும் தாக்கங்களும் கட்டம் கட்டமாக அகலத் தொடங்கின. நாடு அடைந்து கொள்ளும் பொருளாதார பிரதிபலன்கள் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படவும் செய்கின்றன.

என்றாலும் நாட்டில் பொருளாதார வீழ்ச்சி மீண்டும் ஏற்படாத வகையில் அதனை உறுதியுடன் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம் பரவலாக உணரப்பட்டிருநததது. அந்தப் பின்புலத்தில் பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் ஆரதவும் ஒத்துழைப்பும் நல்கி வருகிறது. இது ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு பக்கபலமாகியுள்ளது.

இதன் பிரதிபலனாக பொருளாதாரம் கட்டம் கட்டாக மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கிறது. ஐ.எம்.எப். உடனான பொருளாதார வேலைத் திட்டத்தின் செயல்திறன் வலுவாக உள்ளது. மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களின் பிரதிபலன்களை நாடு அடைந்து கொண்டுள்ளது. பொருளாதாரம் வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. பணவீக்கம் குறைந்து வருகிறது. அந்நியச் செலாவணிக் கையிருப்பும் அரச வருமானமும் அதிகரித்து வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பான வேலைத்திட்டத்தின் இரண்டாவது மதிப்பாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் இலங்கை சுமார் 336 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியையும் பெற்றுக் கொண்டுள்ளது.

இவ்வாறான சூழலில் தான் நாடு ஜனாதிபதி தேர்தலை எதிர்கொண்டுள்ளது. இத்தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் தேர்தல் பிரசார மேடைகளில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக தங்களது திட்டங்களை முன்வைப்பதோடு சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடுகளை திருத்தியமைப்போம், மாற்றுவோம் என்கின்றனர்.

ஆனால் சர்வதேச நாணய நிதியம் என்பது அரசியல் கட்சிகளுடன் உடன்படிக்கை செய்து உதவக்கூடிய நிறுவனமல்ல. அது நாடுகளுடன் தான் உடன்படிக்கை செய்து உதவி ஒத்துழைப்புக்களை நல்கும். அந்த உதவி, ஒத்துழைப்புக்களும் எடுத்த எடுப்பில் வழங்கப்படக்கூடியவையும் அல்ல. அதன் நிமித்தம் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட வேண்டும். இணக்கப்பாடுகளும் காணப்பட வேண்டும். இதற்கென ஆறு மாதங்களோ அல்லது ஒரு வருடமோ செல்லலாம். அவ்வாறு தான் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்று நாட்டில் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ள ஐ.எம்.எப் பொருளாதார ரீதியில் நாடு முன்னோக்கி பயணிக்கிறது என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் நாடு இன்னும் பொருளாதார ரீதியில் உறுதியான நிலையை அடையவில்லை. இந்த சூழலில் தான் ஜனாதிபதி தேர்தல் பிரசார மேடைகளில் ஐ.எம்.எப் உடன் மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை தொடர்பில் சில அபேட்கர்கள் வெவ்வேறு விதமான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

இந்த சூழலில் ஐ.எம்.எப். இன் தலைமையகத்தில் செய்தியாளர் மாநாடொன்றை நடாத்தியுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களப் பணிப்பாளர் ஜூலி கொசெக், 'நாடு இன்னும் பொருளாதார ஆபத்தில் இருந்து மீளவில்லை என்றும் சிரமங்களுக்கு மத்தியில் கிடைத்துள்ள வெற்றிகளைப் பாதுகாப்பது முக்கியம். இன்னும் குறிப்பிடத்தக்க அளவு அபாயம் உள்ளது. எனவே, மறுசீரமைப்புகளைத் தொடர வேண்டியது அவசியமாகும் என்றுள்ளார்.

பொருளாதாரத்தை உறுதியாகக் கட்டியெழுப்புவதற்கு ஆக்கபூர்வமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும். அதன் ஊடாகவே மீண்டுமொரு பொருளாதார வீழ்ச்சிக்கு நாடு உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அனைத்து மக்களின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# மனித சமூக மேம்பாட்டுக்காக உழைத்த இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்)



1400 ஆண்டுகளுக்கு முன்னர் அறியாமையில் மூழ்கி நல்லது எது, கெட்டது எதுவென்று தெரியாது கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற இருண்ட யுகத்தில் மூழ்கியிருந்த மனித சமூகத்தினை அதிலிருந்து மீட்டு அவர்களை மனிதப் புனிதர்களாக ஆக்கி இஸ்லாம் என்றால் என்ன என்பதற்கு அர்த்தம் கற்பித்த மாமனிதர் தான் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களாவார்.

இறைவனின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே காரணத்தினாலும் உன்னதமான புனித இஸ்லாத்தை உலகிற்கு கொண்டு வருவதற்கும் தன் உயிரையே துச்சமெனக் கருதி உறவுகளை இழந்தும், உடமைகளை இழந்தும் ஏன் தான் பிறந்த சொந்த மண்ணையே இழந்த ஒரு தியாகச் செம்மல்தான் நபியவர்கள். அவர்கள் வாழ்வில் பட்ட துன்ப, துயரங்கள் சொல்லில் அடங்காது.

பொறுமை, உண்மை, சகிப்புத் தன்மை, தியாக மனப்பான்மை, மற்றவரை மதிக்கும் பண்பு, கண்ணியங் கொடுத்தல், நம்பிக்கை உள்ளிட்ட சகல விடயங்களும் அவரிடம் ஒருமித்துக் காணப்பட்டன. அதனால் அவரின் தியாகம் இன்று வரை நிலைத்து நிற்பதுடன் அவரின் போதனைகளை முஸ்லிம்கள் ஏற்று நடக்கின்றனர்.

நபி (ஸல்) அவர்களை தன் இறுதித்தூதராகத் தேர்ந்தெடுத்த இறைவன், அன்னாருக்கு அளித்த மாபெரும் அருட்பொக்கிஷம் தான் அல் குர்ஆன். அல்லாஹ்வின் கட்டளைகள் மற்றும் அல்குர்ஆன் ஊடாகவே அண்ணலார் அறியாமையில் மூழ்கியிருந்த சமூகத்தை மீட்டெடுத்து நல்வழிப்படுத்தி மனிதப் புனிதர்களாக்கினார்கள்.

இந்த உலகத்தில் மட்டுமல்ல மறு உலகிலும் அல்லாஹ்வின் உண்மையான அடியானாகவும், உலகத்திலும் சரி மறுமையிலும் சரி அல்லாஹ்விற்கு மிக விருப்பமான முதல் மனிதராகவும் நபி (ஸல்) அவர்கள் விளங்குகிறார். இது இஸ்லாமியர்கள் மாத்திரமல்லாமல் முழு உலகமுமே மெய்சிலிர்த்து நிற்க செய்துள்ளது எனலாம்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு அடியான் மீதும் அபார பாசமுள்ளவராக இருந்தார்கள். தமது சமூகத்தின் மீது கொண்ட அன்பு, கருணை காரணமாக தனது மரணத் தருவாயிலும் கூட அவர் அனுபவித்த அந்த மரண வேதனையின் தாக்கத்தினையும், அதன் தன்மையையும் கண்டு எந்தவொரு மனிதனாலும் சிறிதளவேனும் சிந்தித்து பார்க்க முடியாத ஒரு காரியத்தைச் செய்துள்ளார். அதுதான் நபியவர்கள் தனது இறுதி மரண வேதனையை அனுபவித்த போது, அதன் தாக்கத்தினை தனது சமூகத்தினர் அனுபவித்துக் கொள்ள மாட்டார்கள் எனக்கருதி, அந்த வேதனையைத் தனக்கே வழங்கி விடுமாறு இறைவனிடம் இரைஞ்சி பிரார்த்தனை செய்துள்ளார்கள். அது அவர் தன் சமூகத்தின் மீது கொண்டுள்ள பாசத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

அதனால் எம்மீது அபார அன்பு, கருணை கொண்டிருந்த நபிகளார், எமது இம்மை மறுமை வாழ்வின் சுபீட்சத்திற்காக காட்டித்தந்துள்ள நல்வழி காட்டல்களை முழுமையாக எடுத்து நடப்பதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். அந்த வழிகாட்டல்கள் தான் ஈருலகிலும் விமோசனம் பெற்றுத்தரும்.

அல்லாஹ்வின் கட்டளைகளையும் முஹம்மத் (ஸல்) அவர்களின் போதனைகளையும் பின்பற்றும் எந்தவொரு மனிதனும் வழி தவறிப்போக மாட்டான். அதுவே இஸ்லாத்தின் வழிகாட்டலாகும்.

இறைவனின் கட்டளைகள் படி மனித சமூகத்தின் விமோசனத்திற்காக உழைத்த மாநபி (ஸல்) அவர்களை கௌரவிக்கும் வகையில் இலங்கை அன்னார் பிறந்த தினத்தை தேசிய மீலாதுன் நபி தினமாகப் பிரகடனப் படுத்தியுள்ளதோடு அரச பொதுவிடுமுறை தினமாகவும் ஆக்கியுள்ளது. இதன் ஊடாக இறுதித் தூதர் (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் கௌரவிக்கப்பட்டுள்ளனர். அதனால்

முஸ்லிம் சமூகம் இந்நாட்டின் அரசாங்கத்திற்கும் ஏனைய சமூகங்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. அத்தோடு ஏனைய சமூங்களுடன் புரிந்துணர்வுடனும், சமாதானமாகவும் இன நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டிய பாரிய பொறுப்பும் இந்நாட்டு முஸ்லிம்கள் முன்பாக உள்ளது. இதனை ஒவ்வொரு முஸ்லிமும் கருத்தில் கொள்வது அவசியம்.

**சத்தார் எம். ஜாவித்**
கொழும்பு தினகரன் நிருபர்

# மீண்டும் வன்முறை தலை தூக்குகிறது ஊடகவியலாளர்களின் கழுத்து வெட்டப்படுகிறது

'திவயின' ஞாயிறு பத்திரிகையின் மூத்த ஊடகவியலாளர் எரிக் காமினி ஜினப்ரியவால் எழுதப்பட்ட (NPP கதாவ JVP கிரியாவ) "NPP கதையும் JVP அதிரடியும்" புத்தகத்தை வெளியிடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வை தேர்தல் ஆணைக்குழு எவ்வாறு நிறுத்தியது என்பதை "பசுபிம" என்ற பத்தியில் முன்னர் விவாதித்தேன். இந்நாட்டின் மொழி சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரத்திற்கு தடை ஏற்படும் வகையில் அத்தகைய நடவடிக்கை எதன் அடிப்படையில் எடுக்கப்பட்டது என்பதை தேர்தல் ஆணைக்குழு விளக்கமளிக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுவிடம் சுட்டிக்காட்டி இருந்தேன்.

இலங்கை அரசியலமைப்பின் ஊடாக பொதுமக்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கும் அச்சிடுவதற்கும் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டுள்ள நிலைமையில் புத்தகமொன்றை வெளியிடுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் தடைக்கான காரணத்தை அறிய பொதுமக்களுக்கு உரிமை உள்ளது.

இப்புத்தகத்தை வெளியிட்டதன் மூலம் எந்த தேர்தல் சட்டம் மீறப்பட்டுள்ளது? எந்தவொரு நபரோ அல்லது அரசியல் கட்சியோ அல்லது அமைப்போ இந் நிகழ்வை இரத்து செய்யுமாறு தேர்தல் ஆணைக்குழுடம் கோரிக்கை விடுத்துள்ளதா?

நிகழ்ச்சியை இரத்து செய்வதற்கு முன், புத்தகத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் தேர்தல் சட்டத்தை மீறுகிறதா என்பதை எந்த அடிப்படையில் ஆணைக்குழு, புத்தகத்தைப் படிக்காமல் தீர்ப்பளித்தது? ஏற்பாட்டாளர்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளிடம் உண்மைகளை முன்வைத்ததையடுத்து, புத்தகத்தின் பல பிரதிகளை விருந்தினர்களுக்கு வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும், இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்ட சிறப்பதிதியின் உரையும் இரத்து செய்யப்பட்டதாகவும் ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தன. அந்த அழைக்கப்பட்ட விருந்தினர்களின் சொற்பொழிவுகள் தேர்தல் சட்டங்களை மீறுவதாக ஆணைக்குழு எந்த உண்மைகளின் அடிப்படையில் தீர்மானித்தது? எனது கடிதத்தில் மேற்கூறிய உண்மைகள் சுட்டிக்காட்டப்பட்டாலும், தேர்தல் ஆணைக்குழு இதுவரை எந்த விடயங்களையும் தெளிவுபடுத்தவில்லை.

தேர்தல் ஆணைக்குழுவானது அரசியலமைப்புச் சட்டத்தின்படி அரசியலமைப்புச் சபையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அதே அரசியலமைப்புச் சட்டம் உத்தரவாதம் அளித்துள்ள பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் தொடர்பான விவகாரத்தில் முடிவு எடுக்கப்பட்டால், அதற்கு தேர்தல் ஆணைக்குழு ஒப்புதல் அளிக்க வேண்டும். இந்த முடிவு தேர்தல் ஆணைக்குழுவால் எடுக்கப்பட்டதா? இல்லையெனில் ஆணைக்குழு அதிகாரியால் எடுக்கப்பட்டதா? என்பது குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும்

சிரேஷ்ட எழுத்தாளர் எரிக் ஜினப்பிரிய முகம் கொடுத்த இந்நிலை குறித்து பலர் எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும், மனித உரிமைக்காக குரல் கொடுப்பதாகக் கூறும் எந்த ஒரு அமைப்பும் இது குறித்து அறிக்கை வெளியிடவில்லை. கணிசமான எண்ணிக்கையில்

**இலங்கை அரசியலமைப்பின் ஊடாக பொதுமக்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கும் அச்சிடுவதற்கும் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டுள்ளது**

தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் இருந்தாலும் அவர்களும் இது பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை. நாட்டில் உள்ள வெகுஜன ஊடகவியலாளர்களின் உரிமைகளுக்காகவும் ஊடக சுதந்திரத்திற்காகவும் ஒரு அமைப்பும் குரல் கொடுக்க முன்வரவில்லை. சமூக ஊடகங்களில் பல்வேறு விடயங்களை முன்வைப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது, அந்த நபரை ஊடகவியலாளர் எனக் கூறி, அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது ஊடக நிறுவனங்கள் எவ்வாறு நடவடிக்கை எடுக்கின்றன என்பதை நாம் பார்த்துள்ளோம். ஆனால் எரிக்கிற்கு ஆதரவாக ஊடக தொழிற்சங்கங்களோ அல்லது சுதந்திரமான பத்திரிகை அமைப்புகளோ முன் வந்ததாகத் தெரியவில்லை.

இந்நிலையில் எரிக்கின் ஊடகப் பணியை ஊடகக் கட்டுப்பாட்டாளர்களுக்கு முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. திவயின சிரேஷ்ட ஊடகவியலாளர் எரிக் காமினி ஜினப்பிரியவை உபாலி பத்திரிகை நிறுவனம் எவ்வித காரணமும் கூறாமல் பணி இடைநீக்கம் செய்துள்ளது. இது குறித்த தகவல் சமூக வலைதளங்களில் வெளியானது. அதில் ஒரு பதிவில், 'அனுரகுமார ஊடக வேட்டையைத் தொடங்குகிறார். புத்தகத்தை எரி அல்லது கொல்லப்படுவாய். திவயின பத்திரிக்கையின் பத்திரிக்கையாளர் எரிக் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்'.

**நாட்டில் உள்ள வெகுஜன ஊடகவியலாளர்களின் உரிமைகளுக்காகவும் ஊடக சுதந்திரத்திற்காகவும் ஒரு அமைப்பும் குரல் கொடுக்க முன்வரவில்லை.**

மற்றொரு கட்டுரையில் எரிக் பத்திரிகையில் இருந்து நீக்கப்படாவிட்டால், பத்திரிகை நிறுவனம் தீ வைக்கப்படும் என மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திவயின நிர்வாகிகள் எந்த குற்றச்சாட்டையும் முன்வைக்காமல் எரிக்கை பணி இடை நீக்கம் செய்துள்ளனர். எரிக்கே மீண்டும் தலை தூக்கும் வன்முறை காரணமாக கழுத்து வெட்டப்படும் நிலைமைக்கு ஆளான முதலாவது ஊடகவியலாளர்.

அனைத்தும் மீண்டும் உருவாக்கப்படுகின்றன. ஏற்கனவே 87 - 89 காலப்பகுதியில், இந்நாட்டின் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் தாங்கள் எதிர்கொண்ட கொடுமைகளை மீண்டும் அனுபவிக்க வேண்டிய சூழல் கட்டமைக்கப்பட்டு வருகிறது. தேவிஸ் குருகே, சாகரிகா கோமஸ், பிரேமகீர்த்தி டி அல்விஸ் போன்ற மூத்த ஊடகவியலாளர்களும் கலைஞர்களும் ஜனதா விமுக்தி பெரமுனவினால் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதை பலர் மறந்திருக்க மாட்டார்கள் என நினைக்கிறேன். மேற்கூறிய கட்டுரையில், பிரபலமான இசைக்குழு மேரியன்ஸ் ஒரு நகைச்சுவைக்காக, எப்படி மன்னிப்பு கேட்க நேரிட்டது என்பதையும் சுட்டிக் காட்டினேன்.

முதலில், மேரியன்ஸுக்கு வருத்தம் தெரிவித்து தேசிய மக்கள் சக்தியிடம் மன்னிப்பு கேட்க நேரிட்டது. அப்போது அக்குழுவினர் கூறுகையில், இந்த நாட்டில் இன்னும் பேச்சு சுதந்திரம் உள்ளது. எவ்வாறாயினும், அந்தக் குழுவைச் சேர்ந்தவர்களுக்கு மரண

**87 – 89 காலப்பகுதியில், இந்நாட்டின் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் தாங்கள் எதிர்கொண்ட கொடுமைகளை மீண்டும் அனுபவிக்க வேண்டிய சூழல் கட்டமைக்கப்பட்டு வருகிறது.**

அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், மேரியன்ஸ் எதிர்கொள்ள வேண்டிய இந்த நிலைமை குறித்து கலைஞர்களின் உரிமைகளுக்காக அவர்கள் நிற்பதாகக் கூறுகின்ற எந்த அமைப்போ அல்லது நிறுவனமோ தோன்றவில்லை. பொதுமக்களின் மனித உரிமைகளுக்காக நிற்பதாகக் கூறும் எவரும் ஆஜராகவில்லை.

எவ்வாறாயினும், தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் அநுர திஸாநாயக்கவுக்கு ஆதரவளிக்க இந்த நாட்டில் கணிசமான எண்ணிக்கையிலான கலைஞர்கள் அண்மையில் திரண்டிருந்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அந்த கூட்டத்தில் மேரியன்ஸ் உறுப்பினர்களும் பங்கேற்கவில்லை என்றால் ஆச்சரியப்பட வேண்டியுள்ளது. மன்னிப்புக் கேட்க வேண்டிய சூழலிலும், கொலை மிரட்டலுக்கு ஆளான சூழ்நிலையிலும், இப்படியொரு சந்திப்பைத் தவறவிட முடியாது என்ற அச்சுறுத்தல் நாட்டில் உருவாகியுள்ளது.

ஜனதா விமுக்தி பெரமுனாவுக்காக குரல் எழுப்பும் ஆலோசனை வழங்கும் சங்கீத்களுக்கு சக கலைஞர்கள் எதிர்கொள்ள வேண்டிய அச்சுறுத்தல்கள் மற்றும் பயங்கரங்கள் பற்றி எந்த உணர்வும் இருப்பதாகத் தெரியவில்லை.

தேசிய மக்கள் சக்தி என்பது ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை நியமித்துள்ள அரசியல் கட்சியாகும். அனுரகுமார திஸாநாயக்க அந்த வேட்பாளர். அவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறவும் இல்லை. அவரது அரசும் நாட்டில் இல்லை. அவர்களுக்கு நான்கு எம்.பி.க்கள் மட்டுமே உள்ளனர். மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டுள்ள நிலையில் அவ்வாறான மக்கள் பிரதிநிதிகள் இல்லை. ஒரு சில கூட்டுறவு தலைவர்கள் மற்றும் ஒரு சில நிர்வாக உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். இவ்வாறான நிலையில் இவ்வாறான ஒரு பயங்கரம் பரவுவது சாத்தியமில்லையென்றாலும், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமானால், பொதுமக்கள் எதிர்கொள்ள வேண்டிய பெரும் வன்முறையின் அடையாளங்கள் தற்போது தோன்றி வருகின்றன.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது. அது மக்கள் விடுதலை முன்னணிக்கும், பெரட்டுகாமியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதனாலாகும். 87-89 பயங்கரவாதத்தை மறக்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. பகிடிவதையை எதிர்த்த ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவி சமந்தா வெகு காலத்திற்குப் பின்னர் படுகொலை செய்யப்பட்டார். போராட்டத்தின் போது, நாடு முழுவதும் பல்வேறு நபர்களின் 95 க்கும் மேற்பட்ட வீடுகள் தீயிட்டு கொளுத்தப்பட்டன, ஹோட்டல்கள் போன்ற வணிக இடங்கள் தீ வைத்து சூறையாடப்பட்டன. இந்த உண்மைகளிலிருந்து, நாட்டு மக்கள் சமீபகாலமாக பயங்கரவாதத்தையும், வன்செயலையும் அனுபவிக்க வேண்டியிருந்தது என்பது தெளிவாகிறது.

நீதிமன்றச் செயற்பாடுகள் பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என சுனில் ஹந்துன்நெத்தி தெளிவாகக் கூறியுள்ளார். தேர்தலின் பின்னர் மோதல் ஏற்பட்டால் தேசிய மக்கள் சக்தியின் பிரதேச அதிகார சபைகளுக்கு தலையிடும் திறன் இருப்பதாக அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அவை அனைத்திலும் நினைவிற்கு வருவது மக்கள் விடுதலை முன்னணியின் காட்டு நீதிமன்றங்கள் வாக்களித்த மக்களின் கை, கால்களை வெட்ட, கொல்ல முடிவெடுத்த விதமாகும்.

இந்த நிகழ்வுகளை பொதுமக்கள் தெளிவான புரிதலுடன் கையாளுவார்கள் என்பதை எந்த அரசியல் கட்சியாய் இருந்தாலும் புரிந்து கொள்ள வேண்டும்.

**மக்களின் நேசன்**

# வேண்டுவோர் வினை தீர்க்கும் வெருகலம்பதியான்

சைவ மஞ்சரி

திருகோணமலை மாவட்டத்தின் தெற்கெல்லையிலும் மட்டக்களப்பு மாவட்ட வடக்கு அந்தத்திலும் வருடந்தோறும்

உயிர்த்திருக்கும் மகாவலி கங்கையின் அருகே குடிகொண்டு அருள்பாலித்து வருகின்ற வரலாற்றுச் சிறப்புமிக்கதொன்மை வாய்ந்த ஆலயமே வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயமாகும்.

14ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிலுள்ள திருநெல்வேலி எனும் கிராமத்தில் வசித்து வந்த நல்லைநாதச் செட்டியார் தொழு நோயினால் துன்புற்றிருந்தவேளை அனைத்து ஆலயங்களுக்கும் சென்று வழிபாடு செய்த போதிலும் அவரது நோய் குணமடையாததால் தென்னிலங்கையிலுள்ள கதிர்காமம் சென்று வழிபட்டு தனது நோயைக் குணப்படுத்த விரும்பி இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாகக் கப்பலில் வந்து இலங்கையின் கிழக்குக்

கரையில் அமைந்துள்ள கொட்டியாபுரத்தில் வந்திறங்கிப் பல நாட்கள் கடந்து வெருகலை வந்தடைந்தார். வெருகலை அடையும்போது மாலையாகியதால் தனது கதிர்காமம் நோக்கிய பயணத்தைத் தொடரமுடியாது வெருகலெனும் இடத்தில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது, மாலையாகியதும் எங்கும் இருள்பரவத் தொடங்கியது. எதுவும் செய்ய முடியாமல் முருகப் பெருமானை வேண்டி வணங்கி படுத்துறங்கினார்.

உடற்சோர்வுகாரணமாக அவருக்குத் தூக்கம் வரவேயில்லை, ஆனாலும் நள்ளிரவு கடந்து சிறிய தூக்கத்தில் ஆழ்ந்த போது அவ்வேளை முருகப்பெருமான் அவரது கனவில் தோன்றினார், செட்டியார் மெய்சிலிர்க்க எம் பெருமானை வேண்டி

நின்றார். அப்போது அசரீரியாக ஒலித்த குரலில் 'அப்பனே நீ தொழு நோயினால் துன்புற்றிருக்கின்றாய் அதனையும் பாராமல் கதிர்காமம் வந்து என்னைப் பார்க்கத்துணிந்தாய் கதிர்காமம் வெகு தொலைவில் உள்ளதால் நீர் கஷ்டப்பட்டு அங்கு யாத்திரை வரவேண்டாம் வெருகற்பதிதான் கதிர்காமமாக அமைந்துள்ளது' எனக்கூறிமறைந்தார்.

செட்டியார் எழுந்து பார்த்தார் தனது தொழுநோய் நீங்கியமை கண்டு வியப்புற்றார். மீண்டும் மறுநாள் இரவு செட்டியாரின் கனவில் முருகப்பெருமான் தோன்றி 'இவ்விடத்தில் எனக்காக ஒரு ஆலயத்தைக் கட்டி சித்திரவேலாயுதர் என்ற பெயரில் என்னை வழிபடுவாயாக' என ஒரு அசரீரி கேட்டது, ஆலயம் அமைப்பதற்குத்

தன்னிடம் பணம், பொருள் இல்லையே என்று மனம் வருந்திய போது மீண்டும் முருகப்பெருமான் செட்டியாரின் கனவில் தோன்றி இங்கிருந்து ஏழு மைல்களுக்கப் பால் அரிப்பு என்னும் இடத்தில் குவிந்து கிடக்கும் தங்கக் கடாரங்களில் ஒன்றை எடுத்து வந்து திருப்பணியை முடிக்கக் கடவாய் எனத் திருவாய் மலர்ந்தருளினார். தாமதியாத செட்டியும் அரிப்புக்குச் சென்று தங்கக் கடாரம் ஒன்றை எடுத்து வந்து தற்காலத்தில் இருக்கும் சித்திரவேலாயுத

சுவாமி ஆலயத்தைக் கட்டி முடித்துக் குடமுழுக்கும் செய்து முடித்துக் கண்டிய மன்னனிடம் சென்று எம் பெருமானுக்கு வேண்டிய மாணிக்கற்களையும், வயற்காணிகளையும் செட்டியார் பெற்றுக் கொடுத்துள்ளார்.

என்பதையும் இவ்ஆலயம் தொடர்பான வரலாற்றுப் பதிவுகளிலிருந்து எம்மால் அறிய முடிகின்றது. வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களைவாரிவழங்கும் அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமானின் சர்வ மங்கலம் பொருந்திய குரோதி வருடத்திற்கான மஹோற்சவமானது ஆவணி உத்தர நட்சத்திரம் கூடிய 04.09.2024 ஆம ;

திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18.09.2024 ஆம் திகதி நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவுபெறவுள்ளது. கடந்த பதினெட்டு நாட்களும் எம்பெருமானின் அருட்கடாட்சத்தைப் பெற்றேகுவதற்காக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான முருகப் பெருமானின் நல்லடியார்கள் வந்து சென்று கொண்டிருந்தமை வெருகலம்பதியானின் அருளாட்சியை வெளிக்காட்டி நின்றது.

**கவியருவி**
**ஈச்சிலம்பற்று மதிபாலசிங்கம்**

## மானுடவியல்



181

முன்னே சுவாமி தரிசனஞ் செய்யும் பொருட்டுப் பிள்ளையார் உள்ளணையும் போது எதிர்செல்லாமல் ஒரு பக்கத்திலே ஒதுங்கி நின்ற பாண்டிமாதேவியார் முன்னே வர குலச்சிறைநாயனார் பிள்ளையாரை வணங்கிநின்று, "சுவாமி! இங்கே சிரசின்மேற் கைக்குவித்துக் கொண்டு வருகின்றவரே பாண்டிமாதேவியார்" என்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையார் பெருங்களிப்போடு விரைந்து எதிரே சென்றார். பாண்டிமாதேவியார் பிள்ளையாருடைய திருவடிகளை விழுந்து நமஸ்கரித்தார். பிள்ளையார் திருவருள் சுரந்து அவரைத் திருக்கரத்தினால் எடுத்தருளினார். பாண்டிமாதேவியார் தம்முடைய மனக்கருத்து முற்றியது என்று நினைந்து, கண்ணீர் சொரிய, வாய் குழறி, "அடியேனும் அடியேனுடைய பதியும் செய்த தவம் என்" என்று சொல்லி வணங்கினார். "பிள்ளையார் பரசமயத்தார்களுளிருந்தும் சைவநெறியில் வாழும் அன்பரே! உம்மைக் காணுதற்கு வந்தோம்" என்று சொல்லி அவரை விடைகொடுத்து அனுப்பிக் கொண்டு, அடியார்கள் சூழ எழுந்தருளினார். எழுந்தருளும் பொழுது, திருவாலவாயிலிலே திருத்தொண்டு செய்து கொண்டிருக்கின்ற அடியார்களெல்லாரும் வந்து, பிள்ளையாரை நமஸ்கரித்து, "ஞானாதித்தராகிய சுவாமி! சமணிருள் நீங்கும்படி தேவரீர் இங்கே எழுந்தருளி வருதற்கு அடியேங்கள் அளவிறந்த தவங்களைச் செய்திருந்தோம்" என்றார்கள். பாலறாவாயர் அவர்களுக்கு அருள்செய்து, புறத்தணைந்து, குலச்சிறைநாயனார் திருமடங்காட்ட, பரிசனங்களோடும் அதில் எழுந்தருளியிருந்தார். பாண்டிமாதேவியாருடைய ஆஞ்ஞையின்படி குலச்சிறைநாயனார் பிள்ளையாருக்கும் பரிசனங்களுக்கும் விருந்தளித்தார்.



பகலிலே பிள்ளையார் அடியார்களோடு எழுந்தருளிவரக்கண்ட சமணர்களெல்லாரும் மனங்கலங்கி, சூரியன் அஸ்தமயமான பின், ஒருங்கு கூடினார்கள். பிள்ளையார் எழுந்தருளியிருக்கின்ற திருமடத்திலே திருத்தொண்டர்கள் ஓதுகின்ற திருப்பதிகவிசையின் பேரொலி செவிப்புலப்பட, சமணர்கள் அது பொறாராகி, "பாண்டியராஜனிடத்திற் சென்று சொல்வோம்" என்று துணிந்து அப்பாண்டியராஜனை அடைந்தார்கள்.

**(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

## அக்கரைப்பற்று சின்னக்குளம் வீரம்மாகாளியம்மன் ஆலய கும்பாபிசேகம்

**வாச்சிக்குடா விஷேட நிருபர் வி. சுகிர்தகுமார்**

அக்கரைப்பற்று சின்னக்குளம் அன்னை ஸ்ரீ வீரம்மாகாளியம்மன் ஆலய புனருத்தான திருத்தாபன எண் கழிம முப்பத்தாறு தத்துவத்தூண்கள் தாங்கும் பதினேழு குண்ட பிரம்ம சூத்திர பெரும்யாக பெரும் கும்பாபிசேக குடமுழுக்கு பெருவிழா நேற்று இடம்பெற்றது.

கடந்த 08ஆம் திகதி கர்மாரம்ப கிரியைகளோடு ஆரம்பமான கும்பாபிசேகப் பெருவிழா 09ஆம் 10ஆம் 11ஆம் 12ஆம் திகதிகளில் இடம்பெறுகின்ற கும்பாபிசேக வழிபாட்டு கிரியைகளோடும் 13ஆம் 14ஆம் திகதிகளில் இடம்பெற்ற தைலாப்பியாங்கம் என சொல்லப்படும் பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வுகளோடும் 15ஆம் திகதி காலை திருவோண நட்சத்திரமும் கன்னிலக்கினமும் கூடிய 6 மணி முப்பது நிமிடம் தொடக்கம் 7 மணி ஐம்பத்தொன்பது நிமிடம் வரையிலான சுபநேரத்தில் அம்மனுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் குடமுழுக்கு இடம்பெற்றது. இங்கு தொடர்ந்து (14 நாட்களுக்கு) மண்டலாபிசேக பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

## காக்கைத்தீவு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய தேர்





கொழும்பு 15, மட்டக்குளி, காக்கைத்தீவு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தேவஸ்தானத்தின் 32வது வருஷாபிஷேக சக்திப் பெருவிழாவின் தேர்த்திருவிழாவில் அம்பாள் அலங்காரத் தேரில் வீதி வலம் வருவதை படத்தில் காணலாம்.

(படம் - வடகொழும்பு தினகரன் நிருபர்)

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

### ஆவணி அவிட்டம்

**20249) பூணூலின் வகைகள் எத்தனை? நான்கு**

**20250) பூணூலின் 4 வகைகளும் எவை?**

அவை கள்ளப்பூணூல், கிரகஸ்தர் பூணூல், பிரம்மச்சாரி பூணூல், சஷ்டியப்த பூர்த்தி பூணூல் என்பன.

**20251) பூணூல் அணியப் போகும் ஆண் சிறுவனாக இருக்கும் போது என்ன அந்தஸ்தை பெறுகிறான்?**

பிரம்மச்சாரி என்ற அந்தஸ்தை

**20252)** இந்த சமயத்தில் அவன் என்ன செய்ய வேண்டும்?

பிரம்மச்சரிய விரதம் பின்பற்றுவதுடன் வேதங்களை பயில வேண்டும்.

**20253) உபநயன விழாவில் பூணூல் அணிந்து கொண்ட பின் என்ன செய்ய வேண்டும்?**

பிரம்மச்சாரி அதன் பிறகு பூணூலை கழற்றக்கூடாது.



**20254) பிரம்மச்சாரி பூணூல் யாருக்கு அணிவிக்கப்படும்?**

கல்யாணம் ஆகாதவருக்கே

**20255) ஒருவர் எந்த பூணூலைக் கழற்றலாம்?**

உபநயன விழாவில் பூணூல் அணியாமல் ஆவணி அவிட்டம் நாளன்று சாஸ்திரமாக போட்டு விடப்படும் பூணூலைக் கழற்றலாம்.

**20256) இப்படி அவிழ்த்து கொள்ளும் பூணூலை என்னவென்று கூறுவார்கள்?**

கள்ளப் பூணூல் என்று சொல்வார்கள்.

**20257) கள்ளப்பூணூலில் எத்தனை நூல்கள் சேர்த்து கட்டுவார்கள்?**

மூன்று நூல்கள்

**20258) இந்த மூன்று நூலில் மத்தியில் என்ன முடிச்சிடப்பட்டிருக்கும்?**

பிரம்ம முடிச்சிடப்பட்டிருக்கும்.

**20259) கிரகஸ்தர் பூணூல் யாருக்கு அணிவிக்கப்படும்?**

கல்யாணம் ஆனவர்களுக்கே

**20260) இதில் எத்தனை எத்தனை நூல்கள் சேர்த்து கட்டி முடிச்சிடுவார்கள்?**

ஆறு

**20261) சஷ்டியப்த பூணூல் எப்பொழுது அணிவிக்கப்படும்?**

அறுபது வயதுக்கு பின்னர் சஷ்டியப்த பூர்த்தி என்று சொல்லப்படும் அறுபதாம் கல்யாணம் செய்தவர்களுக்கு சஷ்டியப்த பூணூல் போடப்படும்.

**20262) இதில் எத்தனை நூல்கள் சேர்த்துக் கட்டி பிரம்ம முடிச்சு போடப்பட்டிருக்கும்?**

ஒன்பது

**20263) ஆவணி அவிட்ட விரத பலன் என்ன?**

விரத நியமங்களை முறையாக பின்பற்றி பூணூல் போட்டுக் கொண்டவர்கள் எல்லா துன்பங்களும் விலகி மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.


**20264) வேறு என்ன நன்மைகள் இருக்கும்?**

இவர்களின் குடும்பத்தை துன்பங்கள் அணுகாது. இந்நாளில் பூணூல் அணிபவர்கள் பகைவர்களின் தொல்லை இன்றி காக்கப்படுவார்கள். இவர்களின் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும் என்று கூறப்படுகிறது.

**20265) ஆவணி அவிட்ட நாளில் பூணூலை மாற்றிக் கொண்ட பிறகு கொஞ்ச நேரமாவது வேதாரம்பத்தை செய்து கொள்ள வேண்டும் என்பது யாருடைய விருப்பம்?**

காஞ்சி மகா முனிவரின் விருப்பமாகும்.

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 103



பசிக்கு உணவு, உடம்பை மறைப்பதற்குத் துணி, என்று வாழ்ந்து சுகபோகங்களை துறந்தால், முக்திக்கான வாழ்க்கை நம் எதிரில் நிற்கும். ஆண்டவன் உலகை படைத்த நாள் முதல், இன்றளவும் ஒவ்வொரு மேன்மையானவரின் சரித்திரம் இதுவே. சுகபோகங்களை துறந்து, தியாக வாழ்க்கையை மேற்கொள்வது மேன்மையை அடைவதற்கான வழியாகும். ஆத்ம முன்னேற்றத்திற்கு இது ஒன்றே சிறந்த வழியாகும்.

தீர்த்தயாத்திரை மூலமோ, விரதம் இருப்பதாலோ, யோகப் பயிற்சி, மூச்சு பயிற்சி செய்வதாலோ, மனம், உடல் ஆகியவை வலுப் பெறுமே தவிர, கடவுளை அடைய முடியாது.

கடவுளை வயப்படுத்த, மன உறுதி, மனக்கட்டுப்பாடுடன் கூடிய, செயலில் வெற்றி கொள்ளத் தக்க, சாதனாவின் மூலம் மட்டுமே இயலும். தனிமனித வாழ்வில் பிறருக்கு முன் உதாரணமாக வாழ்ந்தவர்கள் போற்றத் தகுந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

அவர்கள் மூலமே உலகத்தில் மக்கள் நலம் உண்டாகியுள்ளது. எனவே நாம் மன பலம் படைத்தவர்களாகவும் ஆத்ம பலம் படைத்தவர்களாகவும் மாறுவோமாக.

இன்றைய உலகம் மூடத்தனம் மற்றும் மூட நம்பிக்கை என்னும் சங்கிலிகளால் இறுக்கப்பட்டுள்ளது.

இச்சங்கிலியில் கட்டுப்பட்டு கிடக்கும் மாந்தரை நினைத்தால் என் மனம் துடிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் துன்பத்திற்கும், சமுதாயத்தின் இந்த அவல நிலைக்கும் மக்களின் மூட நம்பிக்கை தான் காரணமென, கிழக்கில் உதிக்கும் சூரியன் போல் தெள்ளத் தெளிவாக எனக்குத் தெரிகிறது.

உலகில் எங்கிருந்து ஒளி பிறக்கும்? தியாகத்தினால் மட்டுமே இது நிறைவேறும். தியாக உள்ளம் கொண்ட வீரன் மற்றவர்க்கு முன்னுதாரணமாய்த் திகழ்கிறான்.

பின்னர் பலரும் அவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றனர். வெளிச்சத்தை உருவாக்கும் இந்த தியாக வீரர்களின் செயல், ஆதிகாலத்திலிருந்தே நடந்து வருகிறது. இப்பூவுலகில் பற்பல வீரர்கள், உத்தமர்கள், புனிதர்கள், மஹாத்மாக்கள் தோன்றியுள்ளனர்.

அவர்கள் யாவரும் தியாக வாழ்க்கை மேற்கொண்டு வாழ்ந்து காட்டினர். நாம் நம் சுகபோகங்ளை துறந்தால் தான், மற்றவர்களுக்கு சுகங்களை நாம் வழங்க முடியும். அதற்கான வழியைக் காட்ட முடியும்.

உண்மையான அன்பு எல்லையில்லா கருணை கொண்ட இதயங்கள் துணிச்சலுடன் செயலாற்றுபவர்கள், எந்தளவிற்கு இன்றைய நாளில் தேவைப் படுகிறதோ, அந்தளவிற்கு வேறு எந்த காலத்திலும் தேவைப்பட்டதில்லை.

## ஸ்ரீ ரேணுக்கா பரமேஸ்வரி இராக்குரிஷி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்









உடப்பு ஆண்டிமுனை இறால் பண்ணை அருகில் அருள் பாலித்துக் கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ ரேணுக்கா பரமேஸ்வரி இராக்குரிஷி அம்மன் ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்ட பந்தன ஏக குண்ட பக்ஷ கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா வியாழக்கிழமை(12) இடம்பெற்றது. கும்பாபிஷேக நிகழ்வில்,குமார விக்னேஷ்வரக் குருக்கள், ஆகமசீலன் சிவ ஸ்ரீ விக்னேஸ்வரக்குருக்கள், பிரம்ம ஸ்ரீ சிவானந்த வித்தியாசாகர சர்மா, சிவ ஸ்ரீ தனுஷன் சர்மா, சிவ ஸ்ரீ கிருத்திஹன் சர்மா ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் போது, கும்ப ஊர்வலம் இடம்பெற்றபின்னர் தூபிகளுக்கு கும்ப நீர் ஊற்றப்பட்டது. பெருந்திரளான பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

உடப்பு குறூப் நிருபர்

ஏனைய மக்களுக்குள்ள சகல வரப்பிரசாதங்கள் உட்பட

# பெருந்தோட்ட மக்களுக்கு சகல உரிமைகளையும் பெற்றுக்கொடுப்பேன்

## அடுத்த 05 வருடங்களில் அரசியல், சமூக புரட்சி

### நுவரெலியாவில் ஜனாதிபதி ரணில் உறுதி

நுவரெலியாவிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்

பெருந்தோட்ட மக்களுக்கு சகல சலுகைகளையும் வழங்குவதே தனது நோக்கமாகும் எனவும் தோட்ட மக்களுக்கு லயன்களுக்கு பதிலாக கிராமங்களில் வாழும் உரிமையை வழங்குவதுடன், சட்டபூர்வமான காணி உரிமையை வழங்கும் வேலைத்திட்டமும் ஏற்கனவே நடைமுறைப்படுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று (15) நடைபெற்ற 'ரணிலால் இயலும்' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனை தெரிவித்தார். பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் தலைவர்களுக்கு நாட்டின் பொருளாதாரத்தை அழிக்க இடமளிக்க வேண்டாமெனவும், மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, அடுத்த 05 வருடங்களில் இந்த நாட்டில் பாரிய பொருளாதார, அரசியல், சமூக புரட்சியை ஏற்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

சஜித்தும் அநுரவும் மாற்றங்களை செய்வதாகச் சொன்னாலும் முகங்களை மாற்றும் மாற்றம் நாட்டுக்கு அவசியமற்றதெனவும், அவர்கள் மக்களைப் பற்றி சிந்திப்பவர்களாகயிருந்தால் வரிசையில் நின்ற மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான மாற்றத்தில் அன்றே இணைந்திருப்பார்களெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். சர்வதேச நாணய நிதியத்துடன் பேசி, வரிச்சுமையை குறைப்பதாக சஜித் போலி வாக்குறுதிகளை வழங்கினாலும், இதுவரையில் எவரும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேசவில்லையென தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் மறுசீரமைப்புக்களால் ஏற்பட்டிருக்கும் வெற்றிகளைப் பாதுகாக்க வேண்டுமென ஐ.எம்.எப் வலியுறுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜீவன் தொண்டமானுடன் சம்பள அதிகரிப்புக்கு தேவையான ஏற்பாடுகளை செய்திருக்கின்றேன். தோட்டத்தில் முதியவர்களுக்கு அஸ்வெசும நிவாரணம் தருகிறோம். லயன்களை ஒழித்து கிராமங்களை உருவாக்குவோம். பிராஜவுரிமையை முழுமையாக வழங்க வழி செய்திருகிறோம். வலப்பனை சிங்கள மக்களையும் நான் மறக்கவில்லை. எஸ்.பீ.திசாநாயக்கவுடன் அப்பகுதிகளின் முன்னேற்றத்துக்கு பாடுபட்டிருக்கிறேன். இனி நான் வெல்ல வேண்டியது மட்டுமே மீதமிருக்கிறது. எவரும் நாட்டை ஏற்க வராத வேளையிலேயே நான் நாட்டை ஏற்றேன். மக்கள் கஷ்டப்பட்டபோது அநுரவும், சஜித்தும் மக்களை பற்றி சிந்திக்கவில்லை. அவர்களுக்கு மக்கள் மீது அனுதாபம் வரவில்லை. தாமாக முன்வந்து மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமெனவும் அவர்கள் நினைக்கவில்லை. உங்களுக்கு அந்த கேள்வி இல்லையா? பொறுப்புகளை ஏற்க முடியாமல் ஓடிவிட்டு இப்போது எதற்காக வந்து அதிகாரம் கேட்கிறார்கள்.

நாம் கட்சி அரசியல் வேறுபாடுகளை விடுத்தே மக்களை மீட்க வழி செய்தோம். எதிர்கட்சியினர் மக்களை வாழவைப்பது குறித்து சிந்திக்கவில்லை. தேர்தல் காலத்தில் மட்டுமே மக்களிடம் வருகிறார்கள். அவர்களுக்கு வாக்களிக்க வேண்டுமா? அவர்களை விரட்டிவிடுங்கள். நெருக்கடி காலத்தில் சில கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கடன் பெறவேண்டாம் என்று எதிர்க்கட்சி கூறியது. பணம் அச்சிடுதல்,

வங்கிகளிடம் கடன் பெறுதல் போன்ற செயற்பாடுகளுக்கும் சர்வதேச நாணய நிதியம் முட்டுக்கட்டை போட்டது. கைகளையும் கால்களையும் கட்டிப்போட்டு ஓடச் சொன்னார்கள்.

நல்லதொரு பொருளாதாரம் நாட்டுக்கு வேண்டும். ஏற்றுமதி பொருளாதாரம், தேயிலை உற்பத்தியை அதிகப்படுத்தல், விவசாயத்தை நவீனமயப்படுத்தல், லயன்களை கிராமங்களாக மாற்றியமைத்தல், நவீன விவசாயத்தை அறிமுகப்படுத்தல் போன்ற செயற்பாடுகளை மலையகத்தில் முன்னெடுப்போம் என ஜனாதிபதி தெரிவித்தார்.



## இன்றைய பலன்கள்

(16.09.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பயணங்களில் தடைகள் ஏற்பட்டாலும் எதிர்பாராத சில பயணங்கள் உங்களுக்கு லாபத்தை தேடி தரும்.

**ரிஷபம் :**
பாகப்பிரிவினையில் இழுப்பறி நிலை தொடரும். தொழில் கூட்டாளிகளால் ஏமாற்றத்தை சந்திக்க நேரிடும்.

**மிதுனம்:**
உத்தியோகத்தில் நீண்ட தூரத்திற்கான மாறுதல் கிடைக்கலாம். தொழில் வளர்ச்சியில் தொய்வு ஏற்படும்.

**கடகம்:**
எதிரிகளின் பலம் அதிகரிக்கும். இந்த நேரத்தில் உங்கள் முன்னேற்றத்தை பற்றி மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

**சிம்மம்:**
ஆரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் தேவை. மூட்டு வலி, முழங்கால் வலி ,கழுத்து வலி என்று ஏதாவது ஒரு உடல் உபாதை வந்து கொண்டே தான் இருக்கும்.

**கன்னி:**
உடல் நலத்தில் கவனம் தேவை. எலும்பு நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது.

**துலாம்:**
கடின உழைப்புக்கு பின்னரே காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:**
தொழிலுக்கான மூலதனம் கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது மாற்று இனத்தவர்கள் கை கொடுத்து உதவுவர்.

**தனுசு:**
அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்கள் வீண் பழிக்கு ஆளாக நேரிடும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக அமையாது.

**மகரம்:**
கொடுத்த கடன் வசூலாகாமல் மன அமைதியை இழக்க வைக்கலாம். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய ஒரு பெரும் தொகையை செலவிடுவீர்கள்.

**கும்பம்:**
அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளும் அருளாளர்களின் அறிவுரைகளும் கை கொடுக்கும். புதியவர்களை நம்பி எதுவும் செய்ய இயலாது.

**மீனம்:**
தொழில் வளம் சிறப்பாக இருக்கும் .இருப்பினும் சில பிரச்சினைகள் வரக்கூடும்.

ஓட்டமாவடியில் "தோப்பாகிய தனிமரம்"

## எம்.எச்.எம்.அஷ்ரப் நினைவேந்தல் நிகழ்வும் இளைஞர் மாநாடும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் நினைவு தினத்தில் "தோப்பாகிய தனிமரம் " நினைவேந்தல் நிகழ்வும் இளைஞர் மாநாடும் இன்று மட்டக்களப்பு மாவட்ட, கல்குடா தொகுதி, ஓட்டமாவடியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் ஓட்டமாவடி அமீரலி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அதிதிப் பேச்சாளர்களாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் செயற்குழு உறுப்பினரும் தேசிய முஸ்லிம் லீக்கின் மாணவரணி துணைத் தலைவருமான புளியங்குடி அல்அமீன், மனித உரிமை செயற்பாட்டாளர் சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஊக்குவிப்புப் பேச்சாளர் பாஸிர் மொஹிதீன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்களும், நாடளாவிய ரீதியில் ஏழாயிரம் இளைஞர்களும்,கட்சித் தொண்டர்களும்,ஆதரவாளர்களும் கலந்து கொள்வர்.

காலையில் போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

## இலங்கை இன்னும்...

(Julie Kozack), கடந்த ஜுன் 12 ஆம் திகதி, எங்களின் நிர்வாகக் குழுவினால் 2024 இலக்கம் IV உறுப்புரையின் கீழ் முன்னெடுக்கப்படும் ஆலோசனை மற்றும் நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் (EFF) தொடர்பான வேலைத்திட்டத்தின் இரண்டாவது மதிப்பாய்வை நிறைவு செய்துள்ளது. அதன் மூலம் இலங்கைக்கு சுமார் 336 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி விடுவிக்கப்பட்டுள்ளது.

வேலைத்திட்டத்தின் செயற்றின் வலுவாக உள்ளது. மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களின் பிரதிபலன்கள் காட்டப்பட்டுள்ளன. பொருளாதாரம் வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. பணவீக்கம் குறைந்து வருகிறது. அந்நியச் செலாவணிக் கையிருப்பு மற்றும் அரச வருமானம் அதிகரித்து வருகிறது. இருப்பினும், இன்னும் குறிப்பிடத்தக்க அளவு அபாயம் உள்ளது. எனவே, மறுசீரமைப்புகளைத் தொடர வேண்டியது அவசியமாகும் என தெரிவித்தார்.

இதனிடையே, தனியார் கடன் வழங்குநர்கள் தங்கள் கடன் மறுசீரமைப்பு முன்மொழிவு தொடர்பான அறிக்கையை சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுவது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர்,

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புகளை நிறைவு செய்தல் மற்றும் உத்தியோக பூ(ர்வ கடன் வழங்குநர்கள் குழு மற்றும் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் ஒப்பந்தங்களை எட்டுவது முக்கிய மைல் கற்களாக அமையும். அத்துடன், IMF பணிக்குழாமினால் ஒன்றிணைக்கப்பட்ட கட்டமைப்பை மதிப்பாய்வு செய்து, அதன் மதிப்பீட்டை இலங்கை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளதாகவும், அதற்கு மேலதிகமாக இலங்கை அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க, IMF பணிக்குழாமினால் இந்த மதிப்பீட்டை இலங்கை பிணைமுறி உரிமையாளர்களின் நிதி ஆலோசகர்களுக்கும் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் தங்களின் பணி அதிலிருந்து முடிவடைவதாகவும் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் சர்வதேச நாணய நிதியம் பங்கேற்பதில்லை எனவும் அவர் வலியுறுத்தினார்.

அந்த பேச்சுவார்த்தைகள் கடன் பெற்ற நாட்டுக்கும் அதன் கடன் வழங்குநர்களுக்கிடையில் நடைபெறுவதாகவும் சர்வதேச நாணய நிதியம் கடன் நிலைபேற்றுத்தன்மையின் பொதுவான மதிப்பீட்டை மாத்திரமே செய்வதாகவும் தெரிவித்த அவர், மேலதிக விபரங்களுக்கு, இலங்கை அதிகாரிகள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையைப் ஆராயுமாறு பரிந்துரைத்துள்ளார்.

## ஒரு வருடகாலம் சிறை...

கள்ள வாக்குகளை அளிக்க சிலர் முற்படக் கூடுமென பலக் கட்சிகள் தேர்தல்களை ஆணைக்குழுவிடம் குற்றச்சாட்களை முன்வைத்துள்ளன.

இதனால், வாக்குப் பெட்டிகளை வாக்கெண்ணும் தேர்தல் மத்திய நிலையங்களுக்கு கொண்டுசெல்லும் போது, அந்த வாகனத்துடன், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சார்ப்பில் இருவரை தேர்தல்கள் ஆணைக்குழுவின் வாகனத்தை பின்தொடர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கள்ள வாக்களிக்கும் நபர்களுக்கு மேல் நீதிமன்றத்தினூடாக கடுமையான தண்டனைகளை வழங்க முடியுமென ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் சிந்தக குலரத்ன தெரிவித்தார்.

அதன்படி, கள்ள வாக்கு அளிப்பவர்களுக்கு 2 இலட்சம் ரூபா தண்டப்பணத்தை விதிக்க முடியும். அல்லது 12 மாதங்கள் சிறை தண்டனையை விதிக்க முடியும். அல்லது இரண்டு இலட்சம் அபராதத்துடன், தண்டனையையும் வழங்க முடியும்.

1981ஆம் ஆண்டு 15 இலக்க சட்டத்தின் பிரகாரம் 500 ரூபா தண்டப்பணமே கள்ள வாக்களிப்பவர்களுக்கு விதிக்கப்பட்டது. ஆனால், கடந்தாண்டு மேற்கொள்ளப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் சட்டத்திருத்தத்தினூடாக இந்த தொகை 02 இலட்சமாக அதிகரிக்கப்பட்டது.

எனவே, கள்ள வாக்களித்த குற்றவாளியாக அடையாளம் காணப்படும் நபர்களுக்கு மேற்படி தண்டனைகளை விதிக்கப்படுவதுடன் அவர்களுக்கு 07 ஆண்டுகள் வாக்களிக்கவும் வாக்காளர் பதிவேட்டில் பதியவும் தடைவிதிக்கப்படும் என சிந்தக குலரத்ன மேலும் தெரிவித்தார்.

## விசாரணைகளை ஆரம்பித்துள்ள...

கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. 18 வயதுக் குட்பட்ட சிறுவர்கள், பெரியவர்களின் உதவி மற்றும் தலையீடு அல்லது வற்புறுத்தலினூடாக இவ்வாறு தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாக, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் சிறுர்கள் பங்கேற்பதால் விபத்துக்கள் அல்லது உடல் மற்றும் மன உளைச்சல்களுக்கு உள்ளாக நேரிடுமென அதிகார சபை எச்சரித்துள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தமது அதிகார சபைக்குள்ளதெனவும் இதனால், அந்த பொறுப்புகளை தாமதமின்றி நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சாசனத்தில், இலங்கை அரசாங்கம் கையொப்பமிட்டு அங்கம் வகிப்பதாகவும், அந்த சாசனத்தில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய கடமைப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களை அனைவரின் பொறுப்பாகக் கருதி தேர்தல் பிரசாரங்களில் சிறுவர்கள் பங்கேற்பதைத் தடுக்குமாறு பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளையும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வலியுறுத்தியுள்ளது.

## நகரம், கிராமம் என்ற பாகுபாடின்றி...

அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். அத்துடன், தமது வெற்றியை இனிமேல் மாற்ற முடியாதெனவும், மக்களுக்கான அரசாங்கத்தை தாம் ஸ்தாபிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்பாறையில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

எமது வெற்றியை இனிமேல் மாற்ற முடியாது. மக்களுக்கான அரசாங்கத்தை நாம் ஸ்தாபிக்கவுள்ளோம். நாட்டு மக்கள் எவ்வளவு துன்பத்தில் இருக்கிறார்கள் என்பதை நாம் அவதானித்து வருகிறோம். வறுமையிலிருந்து மக்களை முதலில் விடுபட செய்வதே எமது பிரதான கொள்கையாகும்.

ஆட்சியாளர்கள் மட்டுமன்றி, மக்களும் சுகபோகமாக வாழ வேண்டும். எம்மைப் போன்ற வறுமையான நாடுகள், முன்னேற வேண்டுமெனில் கல்வித்துறையை அபிவிருத்தி செய்யவேண்டும். இன்று எமது கல்வி முறைமையானது பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் பாரமாக மாறியுள்ளது.

ஜப்பான் போன்ற நாடுகளில் பாடசாலைக்கு நடந்தே சென்று விட முடியும். ஆனால், எமது நாடுகளில் வாகனங்களில் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இப் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் நோக்கில், 03 கிலோ மீற்றருக்குள் சிறந்த பாடசாலையை மாணவர்களுக்காக நிறுவுவோம்.

## அனைத்து முஸ்லிம்களுக்கும்...

மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, மற்றவர்களிடையே நம்பிக்கையை வளர்த்த முஹம்மது நபியவர்கள், அல்அமீன் என்று (நம்பிக்கையானவர்) அழைக்கப்பட்டார்.

அவர் தன் வாழ்நாள் முழுவதும் காத்துவந்த நற்பண்புகளுக்காகவும் மனித நேயத்திற்காகவும் செய்த தியாகங்கள் அளவிட முடியாதவை.

பரஸ்பர புரிதல், நேர்மை, நல்லிணக்கம் மற்றும் மற்றவர்களை வெறுத்து ஒதுக்காதிருத்தல் போன்றவை இறைத்தூதர் முஹம்மது நபி அவர்களின் அடிப்படை போதனைகளின் மையக்கருவாக அமைந்திருந்தன.

நேர்மையான மனிதர்களுக்கு இறைவன் உதவி புரிகிறார் என்பதையும், அத்தகையவர்கள் இறைவனால் பொருத்தமான, உயர்ந்த இடங்களுக்கு உயர்த்தப்படுவதையும் முஹம்மது நபி அவர்களுடைய வாழ்க்கை மற்றும் தத்துவத்தைப் பற்றி ஆராய்ந்தால் புரிந்துகொள்ளலாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பிறந்த நாளைக் கொண்டாடும் இத்தினத்தில் அவர்கள், எடுத்துக் காட்டிய விழுமியங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் அனைத்து வகையான அடிப்படைவாதத்தையும் முறியடித்து சிறந்த, முன்னேறிய உலகை உருவாக்குவதற்கான உறுதியுடன் உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் கைகோர்ப்பார்கள் என நான் நம்புகிறேன் என தெரிவித்துள்ளார்.

## நாட்டின் ஏமாற்று அரசியலுக்கு...

இதனை தெரிவித்த அவர், இது வாக்குறுதிப் பத்திரம் அல்ல. சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் இவ்வாறானதொரு மூலோபாய வேலைத்திட்டம் முன்வைக்கப்படுவது இதுவே முதல் தடவையென நான் நினைக்கிறேன்.

நீங்கள் எதிர்பார்க்கும் இலங்கை எவ்வாறு உருவாகும் என்பதை இந்தப் புத்தகம் விபரிக்கின்றது. எனவே, எமக்குக் கிடைத்திருக்கும் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நீங்களும் நாமும் கனவு கண்ட அபிவிருத்தியடைந்த இலங்கையை உருவாக்குவோம்.

இந்த ஏமாற்று அரசியலுக்கு எதிராக உங்கள் மனதிலுள்ள வெறுப்பையும் கோபத்தையும் முடிவுக்கு கொண்டு வரலாம். அதற்காக அன்பின் அடையாளமாக சிந்தித்து வாக்களியுங்கள் என அவர் தெரிவித்தார்.

## சமூக ஊடகங்கள் மீது...

சட்டவிரோதமான முறையில் ஜனாதிபதி வேட்பாளர்களை விளம்பரப்படுத்துவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டார். எனவே, அமைதியான காலப் பகுதியில் சமூக ஊடக பிரசாரங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து சம்பந்தப்பட்ட சர்வதேச நிறுவனங்களுடன் கலந்துரையாடியதாக தலைவர் குறிப்பிட்டார்.

## தேர்தல் முறைபாடுகள்...

பதிவாகியுள்ளன. இவற்றில், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 28 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக 3,720 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அத்துடன், இவ்வாண்டு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளில் சற்று அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

## G.C.E O/L பரீட்சை பெறுபேறுகள்...

தெரிவித்த அமைச்சர், ஒரு சில காரணங்களால் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட முடியாதுள்ளதாகவும், இன்னும் இரண்டு வாரங்களுக்குள் பெறுபேறுகளை எதிர்பார்க்கலாமெனவும் குறிப்பிட்டார். அத்துடன், மாதக்கணக்கில், வருடங்களில் பிற்போடப்பட்ட உயர்தரப் பரீட்சை இவ் வருடம் நவம்பர் மாதம் 25ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

## 21 மற்றும் 22 ஆம் திகதிகளில்...

தெரிவித்துள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கமைய, இவ்வாறு மதுபானசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மதுவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜி.குணசிறி தெரிவித்துள்ளார்.

## நாட்டை மாற்றும் திட்டம்...

இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த நாமல் ராஜபக்ஷ, இந்தச் செய்தி கிராமங்களுக்கும் செல்ல வேண்டும். நாங்கள் நாட்டுக்காக உழைத்துள்ளோம். நாட்டுக்கு எதிராக அல்ல. நம் நாட்டுக்கு பொருந்தாத எந்த சட்டத்தையும் இயற்ற முயற்சிக்க மாட்டோம் என தெரிவித்தார்.

## வாக்களிக்க விடுமுறை...

அதுபற்றி பெப்ரல் அமைப்புக்கு அறிவிக்குமாறும் அதன் தலைவர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செயற்படும் நிறுவன தலைவர், சட்டத்தின் முன் குற்றவாளியெனவும் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி இரண்டு இலட்சம் ரூபா அபராதமும் ஒரு மாத சிறைத்தண்டனையும் வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். அவ்வாறான சம்பவங்கள் பதிவானால் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுமெனவும் பெப்ரல் அமைப்பின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 2024 இரண்டாம் காலாண்டில்...

கிடைத்த பிரதிபலனே இதுவெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது X சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க,

பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக சமகால அரசாங்கம் ஏற்படுத்திய சீர்திருத்தங்களின் செயற்றிறனைப் இது பிரதிபலித்துள்ளது. நமது பொருளாதாரம் நிலையானதாக மட்டுமின்றி இது நிலையான வளர்ச்சிக்கான பாதையாகவும் அமைந்துள்ளது. இந்த பொருளாதார வளர்ச்சி வலுவான நிலையில் மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சியில் இவ்வாண்டின் இறுதியில் 4 தொடக்கம் 4.5 சதவீத அதிகரிப்பு இடம்பெறக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்ட ஆரம்ப இலக்கான 2 சதவீதத்தை விட அதிகமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பெறுபேறுகளை 40 நாட்களுள்...

கேட்டுக்கொண்டார். புலமைப்பரிசில் பரீட்சையின்போது மாணவர்கள் பிரச்சினைகளை எதிர் நோக்கியிருந்தால் பரீட்சை திணைக்களத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்க முடியுமெனவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.ம.ச. வன்முறையை...

கடந்த 13 ஆம் திகதி ஹபராதுவ நகரில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு அவர்,

இன்று மக்கள் விடுதலை முன்னணியின் வன்முறைகள் மற்றும் மிலேச்சத்தனமான செயற்பாடுகள் காரணமாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிரான பல வெகுஜன அமைப்புகளின் கூட்டத்துக்கு இடைநடுவில் புகுந்த மக்கள் விடுதலை முன்னணியினர் தடிகள் பொல்லுகளால் தாக்கியிருக்கின்றார்கள். துப்பாக்கி முனையில் வன்முறையை ஏற்படுத்தி, பேப்பர் துண்டு ஒன்றினூடாக அச்சுறுத்தல் விடுக்கின்ற யுகத்துக்கு அநுரகுமார நாட்டை இட்டுச் செல்ல முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

## 350 ரூபாவையும் நிச்சயம்...

ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு களுத்துறையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனை தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

1350 ரூபா சம்பள உயர்வை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுக்கொடுத்துள்ளது. விரைவில் 350 ரூபா கொடுப்பனவையும் பெற்றுக்கொடுப்பதற்கான பேச்சுகளை மேற்கொண்டுள்ளோம். அதனை பெற்றுக்கொடுப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

1,350 ரூபா சம்பளத்தை விமர்சிப்பவர்கள் எஞ்சியுள்ள 350 ரூபாவைப் பெற்றுக்கொடுக்க முற்பட்டால், அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தயாராகவுள்ளது.

அதனை விமர்சிப்பவர்கள் பெற்றுக் கொடுக்காமல் மௌனம் காக்கும் பட்சத்தில் அதனை நாம் பெற்றுக்கொடுப்போம் என அவர் தெரிவித்தார்.

# புதிய கடனை நாடும் பங்களாதேஷுக்கு சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் விரைவு




## அந்நியச் செலாவணி வீழ்ச்சியால் நெருக்கடி

பங்களாதேஷ் பலதரப்பட்ட கடன் வழங்குநர்களிடம் இருந்த 3 பில்லியன் டொலர்களின் புதிய கடனை நாடும் நிலையில் அந்நாட்டின் சாத்தியமான நிதித் தேவையை மதிப்பீடு செய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகள் இந்த மாத பிற்பகுதியில் பங்களாதேஷ் செல்லவுள்ளனர்.

இந்தப் பிரதிநிதிகள் எதிர்வரும் செப்டெம்பர் 24 ஆம் திகதி டாக்க வர வாய்ப்பு உள்ளதாகவும் அவர்கள் செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை இங்கு தங்கி இருப்பார்கள் என்றும் நிதி அமைச்சு அதிகாரி ஒருவர் அந்நாட்டின் 'டெய்லி ஸ்டார்' பத்திரிகைக்கு குறிப்பிட்டுள்ளார்.



'எதிர்வரும் இந்தத் திட்டத்தின் அம்சமாக வருகைதரும் குழுவினர் அனைத்து பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் ஏதேனும் சாத்தியமான நிதித் தேவைகள் குறித்து மதிப்பீடு செய்யும்' என்று சர்வதேச நாணய நிதிய தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் ஜூலி கொசக் தெரிவித்துள்ளார். வாசிங்டனில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் நிதி ஆலோசகர் சலாஹுத்தின் அஹமட் மற்றும் பங்களாதேஷ் மத்திய வங்கி ஆளுநர் அஹ்சான் எச். மன்சூர் ஆகியோர் சர்வதேச நாணய நிதியத்துடன் வெவ்வேறாக நடத்திய மெய்நிகர் சந்திப்புகளின்போது 3 பில்லியன் டொலர் கடனைக் கோரி இருந்தனர்.

சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே கடந்த ஜனவரியில் ஒப்புதல் அளித்த பங்களாதேஷுக்கான 4.7 பில்லியன் டொலர் கடன் திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பங்களாதேஷின் அந்நியச் செலாவணி கையிருப்பு சரிந்து வருவதோடு கடந்த சில மாதங்களில் இறக்குமதிக்காக செலவிடுவதில் நெருக்கடியை சந்தித்து வருகிறது.

சர்வதேச நாணயநிதியத்தின் கணக்கெடுப்பின்படி அண்மைய மாதங்களில் அந்தக் கையிருப்பு சுமார் 20 பில்லியன் டொலர்களே இருந்ததோடு செப்டெம்பர் 11இல் 19.44 பில்லியன் டொலர்களாகவே பதிவாகியுள்ளது.

மத்திய வங்கி அதிகாரிகளின் கூற்றுப்படி, எரிசக்தி மற்றும் மின்சாரத் துறையில் மட்டும், அரசாங்கம் 2 பில்லியன் டொலருக்கும் அதிகமான நிலுவைத் தொகையைக் கொண்டுள்ளது.

இதற்கு மேல், இந்தத் துறைகளுக்கான இறக்குமதி கட்டண கொடுப்பனவுகளுக்கு ஒவ்வொரு மாதத்திலும் அரசாங்கத்திற்கு சுமார் 1 பில்லியன் டொலர் தேவையாக உள்ளது.

இந்தப் பின்னணியில், பங்களாதேஷின் இடைக்கால அரசு மேம்பாட்டு பங்காளிகளிடம் இருந்து கடன் உதவியை நாடும் அதேநேரம், வெளிநாட்டில் உள்ள பங்களாதேஷ் நாட்டவர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணி மற்றும் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிக்க முயன்று வருகிறது.

பங்களாதேஷ் பிரதமர் ஷெய்க் ஹசீனா அரசு கவிழ்க்கப்பட்டது தொடக்கம் அந்த நாட்டின் பொருளாதார நெருக்கடி அதிகரித்திருப்பதோடு நியமிக்கப்பட்டிருக்கும் இடைக்கால அரசு அதனைக் கையாள்வதில் பெரும் நெருக்கடியை சந்தித்து வருகிறது.

# நீதி கேட்டு பங்களாதேஷ் இந்துக்கள் ஆர்ப்பாட்டம்

ஆயிரக்கணக்கான இந்துக்கள் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிலும் வர்த்தக மையமாக உள்ள சட்டோகிராமிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசினா பதவி விலகியதிலிருந்து தங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்த அவர்கள் போராடிவருகின்றனர்.

மழையையும் பொருட்படுத்தாமல், எட்டு அம்சக் கோரிக்கைகளுடன் அவர்கள் பதாகைகளை ஏந்திச் சென்றனர். விரைவாகச் செயல்படும் தீர்ப்பாயம் மூலம் தாக்குதல்தாரிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்பது கோரிக்கைகளில் ஒன்று.

மத நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் யாரும் எதுவும் செய்யக்கூடாது என்று தலைமை ஆலோசகர் முஹம்மது யூனுஸ் தொலைக்காட்சி உரை ஒன்றில் நாட்டு மக்களுக்குத் தெரிவித்த இரண்டு நாட்களில், ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

கடந்த மே மாதத்தில் அரச வேலை வாய்ப்பில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட ஒதுக்கிட்டுக்கு எதிரான மாணவர் ஆர்ப்பட்டம் அந்நாட்டு அரசு பதவி கவிழ காரணமானது. இதனையொட்டி குறிப்பாக இந்துக்கள் உட்பட சிறுபான்மையினர் மீதான வன்முறை அதிகரித்துள்ளது. இதேவேளை தொழுகை நேரத்தில், துர்கா பூஜை மேற்கொள்ளும் இந்துக்கள் பாட்டு போடுவது உள்ளிட்ட நடவடிக்கைகளை நிறுத்தும்படி பங்களாதேஷ் இடைக்கால அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. தொழுகை ஆரம்பிப்பதற்கு 5 நிமிடங்களுக்கு முன் துர்கா பூஜைக்காக பாட்டு போடுதல் மற்றும் இசைக்கருவி வாசிப்பதை நிறுத்தி விட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இதனை பூஜை நடத்தும் குழுக்கள் ஏற்றுக் கொண்டதாக உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜஹாங்கிர் ஆலம் கூறியுள்ளார்.





பங்களாதேஷில் துர்கா பூஜை பிரமாண்டமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தலைநர் டாக்கா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் 32,666 சிலை வைத்து பந்தல்கள் அமைக்கப்பட்டு துர்கா பூஜை கொண்டாடப்படவுள்ளதாக ஜஹாங்கிர் ஆலம் தெரிவித்தார்.

மேலும் பூஜை நடைபெறும் இடங்களுக்கு 24 மணி நேரமும் பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும், தடையின்றி விழா நடைபெற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார்.

## கிழக்கின் குரல்



# நாட்டின் பொருளாதார அழிவுக்கு பிரதான காரணம் ஜே.வி.பி.கட்சியாகும்

## இறக்காமம் கூட்டத்தில் முசாரப் எம்.பி தெரிவிப்பு

*அட்டாளைச்சேனை விசேட நிருபர்*

சர்வதேசம் அங்கீகரித்த இனவாதமில்லாத ஆளுமைமிக்க தலைமைத்துவம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவாகும். அவ்வாறான ஒரு தலைவரை மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்வது நாட்டு மக்களின் கடமையாகுமென பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முசாரப் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து ஏற்பாடு செய்த தேர்தல் பிரசாரக் கூட்டம் இறக்காமம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே முசாரப் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய முசாரப் எம்.பி,

இந்நாட்டில் அபாயகரமான ஒரு கட்சியாகவும், இயக்கமாகவும் ஜே.வி.பி கட்சி காணப்படுகின்றது. பல்கலைக்கழகம் தொடக்கம் அரச நிறுவனங்கள் வரை தொழிற்சங்கங்கள் என்ற போர்வையில் அமைப்புகளை ஏற்படுத்தி போராட்டங்களைச் செய்து காலத்தை வீணடித்து பொருளாதாரத்தை வளர்ச்சியடையாமல் தடுக்கின்றனர். ராஜபக்ஷாக்கள் திருடர்கள் என்று கத்துகின்றனர். ராஜபக்ஷாக்களை 2005ம் ஆண்டு ஆட்சிக்கு கொண்டுவர உழைத்தவர்கள் ஜே.வி'.பி.கட்சியினர்தான். மஹிந்த சிந்தனையை புகழ்ந்து பாராட்டி பேசியவர்கள், இன்று ராஜபக்ஷாக்கள் கள்வர்கள் என்று கத்துவது வேடிக்கையாக உள்ளது.

எனவேதான், சர்வதேசம் அறிந்த, இனவாதமில்லாத, இளைஞர்களை முன்னிலைப் படுத்தும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க நாம் எல்லோரும் தயாராக வேண்டும். அரசியல் அதிகாரம் இல்லாமல் எல்லோராலும் புறக்கணிக்கப்படும் இறக்காமத்திற்கு எதிர்காலத்தில் நிச்சயமாக அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பேன்.

கடந்த காலத்தில் நான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றும் எண்ணத்துடனயே இருந்து கொண்டிருக்கின்றேன்.

இறக்காமத்தின் அபிவிருத்திக்காக எனக்குக் கிடைத்த வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலும், விசேட நிதி ஒதுக்கீட்டிலும் சுமார் 16 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிவிட்டுத் தான் இந்த மேடையில் பேசிக்கொண்டிருக்கின்றேன்.



நமது அரசியல் வளர்ச்சியை தாங்கிக் கொள்ள முடியாத அரசியல் கைக்கூலிகள் முசாரப் வாக்குறுதியை மீறிவிட்டதாக அபாண்டமான பொய்யைச் சொல்லுகின்றனர்.

பொத்துவில் பள்ளிவாசலில் நான் செய்த சத்தியத்தைக் காப்பாற்றவே நான் இருக்கின்றேன். இலங்கையில் உள்ள எந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்கும் வாகன பேர்மிட் இன்று வரை வழங்கப்படவில்லை. அவ்வாறு கிடைக்கும்போது அதனை செய்யவே சித்தமாக உள்ளேன்.


## இலங்கை பைத்துல்மால் நிதியம்

**2024 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**கீழே குறிப்பிட்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்,**

- **ஸகாத் பெற தகுதியுள்ள வறிய முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள்.**
- **2022 (2023) ஆம் ஆண்டிற்கான** ஜீ.சீ.ஈ (உ/த) பரிட்சையில் தேர்ச்சி பெற்று இலங்கை அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றில் தற்போது முதலாம் ஆண்டில் கல்வி கற்பவர்கள்.

விண்ணப்பப் படிவங்களை **2024 ஒக்டோபர் 15** ஆம் திகதி வரை பைத்துல்மால் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம், அல்லது சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையை கடித உறைக்குள் வைத்து அனுப்பி தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம், அல்லது **c.baithulmal@gmail.com** என்ற மின்னஞ்சலினூடாக சிறிய கோரிக்கை ஒன்றினை இட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **2024 நவம்பர் 15** ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பல்கலைக்கழக புலமைப் பரிசில்"** எனக் குறிப்பிடவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**Ceylon Baithulmal Fund,**
**44A, Haig Road, Bambalapitiya, Colombo-04.**


# கல்முனை கல்வி வலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சை சுமுகம்

*பெரியநீலாவணை விசேட நிருபர்*

கல்முனை கல்வி வலயத்தில் தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை நேற்றைய தினம் (15) சுமுகமாக நடைபெற்றது.

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி பரீட்சை மண்டபத்துக்கு மாணவர்கள் வருகை தந்தனர். இந்த பரீட்சை நிலையத்திற்கு அல்ஹிக்மா ஜூனியர் வித்தியாலயம், அல்ஹம்றா , அல் மதீனா, அல்மினன், நாவலர் வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்காக வருகை தந்திருந்தனர்.

ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான், அல்ஹிக்மா ஜூனியர் வித்தியாலயத்தின் அதிபர் எம்.எல்.எம். மஹ்றூப் உட்பட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்களை பரீட்சை நிலையத்திற்கு அழைத்து வந்து வாழ்த்தி வழி அனுப்பி வைத்தனர்.



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனி 2024.09.14
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5596 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.27,318,896.00
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 6 4 0 5 1 0

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 171 — ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 0 5 1 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3838 — சீட்டிழுப்பு திகதி 2024.09.14 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,693,531.60
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 18 45 60 63 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 89819

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1944 — 2024.09.14 — 47144 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.446,098,478.00
ஆங்கில எழுத்து U — சுப்பர் இலக்கம் 24 — வெற்றி இலக்கங்கள் 42 53 55 56 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.09.14 — சீட்டிழுப்பு இலக்கம் 422 — ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 4 8 2 8 8 9 — L7 எழுத்து H — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.35,796,120.12

ராசி சுப பலன் — திகதி 2024.09.14 — சீட்டிழுப்பு இலக்கம் 905 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,164,404.80
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 11 23 26 53 — தனயோக இலக்கம் 61578 — நாளுக்கான விதி எண் 14

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1626 — 2024.09.14 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 111,894,978.64
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 43 46 48 78 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 30687

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளி 2024.09.13
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5595 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,172,184.00
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 9 1 6 3 0 2

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 170 — ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 6 3 0 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3837 — சீட்டிழுப்பு திகதி 2024.09.13 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,480,221.60
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 06 22 27 75 — விசேட எழுத்து C — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 47903

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1943 — 2024.09.13 — 10054 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.445,914,030.00
ஆங்கில எழுத்து I — சுப்பர் இலக்கம் 21 — வெற்றி இலக்கங்கள் 41 46 49 63 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.09.13 — சீட்டிழுப்பு இலக்கம் 421 — ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 4 2 6 3 7 2 — L7 எழுத்து H — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 35,713,446.52

ராசி சுப பலன் — திகதி 2024.09.13 — சீட்டிழுப்பு இலக்கம் 904 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,164,404.80
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 16 39 46 57 — தனயோக இலக்கம் 83063 — நாளுக்கான விதி எண் 16

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1625 — 2024.09.13 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 111,670,026.64
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 15 16 32 78 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 51764




# மனிதர்களை நெறிப்படுத்தும் மாநபியின் போதனைகள்

இஸ்லாத்தின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் உலக மக்களுக்கான அருட்கொடை என்று அல் குர்ஆன் அறிவித்திருக்கிறது. இதன் ஊடாக அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறை உலக மக்களுக்கு இன்றும் என்றும் அருளாக அமைந்துள்ளன.

அதற்கேற்ப ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்கள் மக்களிடையே வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அன்னார் மீது அவரது தோழர்கள் தமது உயிரை விடவும் அன்பு காட்டினார்கள். ஆட்சியாளராக இருந்தும் கூட அவர் மக்களுடன் மக்களாகவே வாழ்ந்தார். மக்கள் அனைவராலும் விரும்பப்படுபவராக அன்னார் திகழுகிறார்.

நபியவர்கள் மீதான மக்களின் அபிமானம் அன்னாருடன் சுருங்கிப் போவதை நபி(ஸல்) அவர்கள் விரும்பவில்லை. தனக்குப் பின்னரும் தான் கட்டியெழுப்பிய சமுதாயம் சின்னாபின்னமாகிப் போகாமல் இருப்பதற்கான வழிகாட்டலையும் அன்னார் தெளிவாக வழங்கியுள்ளார்கள். உலகுக்கான அருட்கொடை என்பது இதற்கு சிறந்த எடுSத்துக்காட்டாகும்.

அல்குர்ஆன், 'அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள். உங்களில் பொறுப்பு(ம் அதிகாரமும்) உடையோருக்கும் கீழ்படியுங்கள்' (04:59) என்று குறிப்பிட்டிருக்கிறது.

அல்லாஹுதஆலா காட்டிய வழியில் அன்னார் தமது சமூகத்தைப் பயிற்றுவித்தார்கள். எனக்குக் கீழ்ப்படிந்தவர் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்தவராவார். எனக்கு மாறு செய்தவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்தவராவார் என்று கூறி தமது மக்களை தமக்குக் கீழ்ப்படிவது அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிவதற்குச் சமமானதாகக் கூறிய நபியவர்கள், என்னால் நியமிக்கப்பட்ட தலைவருக்குக் கீழ்ப்படிந்தவர் எனக்குக் கீழ்ப்படிந்தவராவார். என்னால் நியமிக்கப்பட்ட தலைவருக்கு மாறு செய்தவர் எனக்கு மாறு செய்தவராவார் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இதன் ஊடாக தலைமைப் பொறுப்பில் தமக்கு இருக்கும் அதிகாரத்தை தனக்குப் பின்னால் வருகின்ற தலைவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்ற பழக்கத்தை தம் சமூகத்தினருக்கும் அன்னார் பயிற்றுவித்தார்கள்.

தமக்கு பின்னர் தலைவராக வருபவர் எப்படிப்பட்டவராயினும், அவர் தலைமையில் அமர்த்தப்பட்டால் அவருக்குக் கட்டுப்படுமாறு நபியவர்கள் ஏவினார்கள். உலர்ந்த திராட்சை போன்ற (சுருங்கிய) தலையுடைய அபிசீனிய (கறுப்பு நிற) அடிமையொருவர் உங்களுக்குத் தலைவராக ஆக்கப்பட்டாலும் (அவரின் சொல்லைக்) கேளுங்கள். (அவருக்குக்) கீழ்ப்படியுங்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இதனால் தான் நபியவர்களுக்குப் பின்னரான காலத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்ற கலீபா உமர் (ரழி) அவர்கள், ஜமாஅத் இல்லாமல் இஸ்லாம் இல்லை, தலைமைத்துவம் இல்லாமல் ஜமாஅத் இல்லை, கீழ்ப்படிதல் இல்லாமல் தலைமைத்துவம் இல்லை என்று கூறினார்கள்.

அந்த வகையில் தலைமைப் பொறுப்பை ஏற்பவர் யாராக இருந்தாலும் அவருக்குக் கீழ்ப்படிவது இஸ்லாத்தைப் பாதுகாத்ததற்கு ஒப்பாகிறது.

அல்லாஹ்வுக்கு மாறு செய்வதற்கு ஏவாத ஏனைய எல்லா விடயங்களிலும் தலைமைக்குக் கட்டுப்பட வேண்டும் என்பது நபி(ஸல்) அவர்கள் காட்டிச் சென்ற வழியாகும்.



நபி(ஸல்) அவர்கள் ஒரு படைப்பிரிவை அனுப்பி, அவர்களுக்கு அன்சாரிகளில் ஒருவரைத் தளபதியாக்கி, அவருக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படி படையினருக்கு உத்தரவிட்டார்கள். அந்த அன்சாரி (ஒரு கட்டத்தில்) படை வீரர்களின் மீது கோபம் கொண்டு, 'நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்' என்று நபிகளார் கட்டளையிடவில்லையா?' என்று கேட்டார். அவர்கள், 'ஆம்' என்றனர். அவர், 'விறகைச் சேகரித்து நெருப்பை மூட்டி அதில் புகுந்து விடும்படி உங்களுக்கு நான் உத்தரவிடுகிறேன்' என்றார். அவ்வாறே அவர்கள் விறகைச் சேகரித்து நெருப்பை மூட்டினர். அதில் நுழைய நினைத்தபோது ஒருவரையொருவர் பார்த்தபடி நின்று கொண்டனர். அவர்களில் ஒருவர், '(நரக) நெருப்பிலிருந்து தப்பிக்கத்தானே நாம் நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றினோம். அவ்வாறிருக்க, அதில் நாம் நுழைய வேண்டுமா?' என்று கேட்டார். இதற்கிடையே நெருப்பும் அணைந்தது. அவரின் கோபமும் தணிந்தது. பிறகு நபி(ஸல்) அவர்களிடம் இச்செய்தி தெரிவிக்கப்பட்டது. அப்போது நபி(ஸல்) அவர்கள், 'அதில் மட்டும் அவர்கள் புகுந்திருந்தால் அதிலிருந்து ஒருபோதும் வெளியேறி இருக்கமாட்டார்கள். கீழ்ப்படிதல் என்பதெல்லாம் நன்மையில் தான்' என்றார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

தலைமை அல்லாஹ்வுக்கும் ரஸுலுக்கும் மாற்றமான எதனையும் ஏவினால் அதற்குக் கட்டுப்பட வேண்டியதில்லை என்பதை மக்களுக்கு இது உணர்த்துவதோடு தலைமைகளும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

அதே போன்று தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டவர்கள் மக்களின் நலனில் அக்கறை காட்டாத போது அது அவர்களுக்கே கேடாக அமையும் என்பதையும் நபியவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். ஹஸன் அல் பஸரீ (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள். நாங்கள் மஅகில் இப்னு யஸார் (ரழி) அவர்களை நலம் விசாரிக்கச் சென்றோம். அப்போது (பஸ்ராவின் ஆட்சியாளர்) உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் உள்ளே வந்தார். அவரிடம் மஅகில்(ரழி) அவர்கள், இறைத்தூதர்(ஸல்) அவர்களிடமிருந்து நான் செவியுற்ற செய்தி ஒன்றை உமக்கு அறிவிக்கிறேன்' என்று சொல்லிவிட்டுப் பின்வருமாறு கூறினார்கள், 'முஸ்லிம் குடிமக்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் ஒருவர் அவர்களுக்கு மோசடி செய்த நிலையில் இறந்துவிடுவாரானால், சுவர்க்கத்தை அவருக்கு அல்லாஹ் தடை செய்துவிடுகிறான்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த வகையில் தலைமைப் பொறுப்புக்கு வருபவர்கள் மக்களின் நலனில் அக்கறை காட்டாத போது அந்தத் தலைமைப் பொறுப்பு அவரை நரகத்துக்கு இட்டுச் செல்வதாக எச்சரிக்கப்படுகிறது. இது தலைவர்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம் சமூகத்தில் நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்கின்ற அனைவருக்கும் பொருந்தும்.

மேலும் தலைமைப் பதவிக்காக ஆசைப்படுவதையிட்டும் நபியவர்கள் எச்சரித்திருக்கிறார்கள். நீங்கள் ஆட்சிப் பதவியை அடைய பேராசைப் படுகின்றீர்கள். ஆனால், மறுமை நாளில் அதற்காக வருத்தப்படுவீர்கள். பாலூட்டுபவை (தாம் சுகங்)களிலேயே பதவி(ப் பால்) தான் இன்பமானது. பாலை மறக்க வைப்ப(தன் துன்பத்)திலேயே பதவி(ப் பாலை நிறுத்துவது) தான் மோசமானது என இறைதூதர் (ஸல்) கூறியதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் (புஹாரி).

இந்த வகையில் பதவி ஆசை என்பது மறுமையில் துன்பத்துக்குக் காரணமாக அமைவதை நபியவர்கள் இங்கு எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். அபூ மூஸா அல்அஷ்அரீ(ரழி) அறிவிக்கிறார்கள். நானும் என் சமுதாயத்தாரில் இரண்டு பேரும் நபி(ஸல்) அவர்களிடம் சென்றோம். (என்னுடன் வந்த) அவ்விருவரில் ஒருவர், 'எங்களுக்குப் பதவி தாருங்கள், இறைத்தூதர் அவர்களே!'' என்று கேட்டார். மற்றொருவரும் அவ்வாறே கேட்டார். நபி(ஸல்) அவர்கள், 'கேட்பவருக்கும் ஆசைப்படுபவருக்கும் நாம் இதை (பதவியை) வழங்கமாட்டோம்' என்றார்கள். (நபிமொழி). இந்த ஹதீஸும் பதவிக்கு ஆசைப்பது நபியவர்கள் விரும்பாத விடயம் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

நபியவர்களின் வழிகாட்டலில் தலைமைத்துவப் பதவி என்பது ஒரு பொறுப்பாகும். இப்பொறுப்பு அல்லாஹ்விடத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

'நினைவில் கொள்ளுங்கள்! நீங்கள் ஒவ்வொரு வரும் பொறுப்பாளியே. உங்களில் ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்பிலுள்ளவை பற்றி (மறுமையில்) விசாரிக்கப்படுவீர்கள். ஆட்சித் தலைவர் மக்களின் பொறுப்பாளராவார். அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார். ஆண், தன் குடும்பத்தாருக்குப் பொறுப்பாளன் ஆவான். அவன், தன் பொறுப்புக்குட்பட்டவர்கள் குறித்து விசாரிக்கப்படுவான். பெண், தன் கணவனின் வீட்டாருக்கும், அவனுடைய குழந்தைக்கும் பொறுப்பாளி ஆவாள். அவள் அவர்கள் குறித்து விசாரிக்கப்படுவாள். ஒருவரின் பணியாள் தன் எஜமானின் செல்வத்திற்குப் பொறுப்பாளியாவான். அவன் அது குறித்து விசாரிக்கப்படுவான். நினைவில் கொள்ளுங்கள்! உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே! உங்களில் ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்புக்குட்பட்டவை குறித்து விசாரிக்கப்படுவீர்கள். (ஆதாரம்: புஹாரி)

ஆகவே நபியவர்கள் கட்டியெழுப்பிய சமுதாயம் அன்னாருக்கு பின்னர் சிதைந்து விடக்கூடாது என்பதற்காக நபியவர்கள் காட்டிச் சென்ற இவ்வழிமுறைகளைப் பின்பற்றுவது ஒவ்வொருவரதும் பொறுப்பும் கடமையும் ஆகும் என்றால் அது மிகையாகாது.

–பியாஸ் முஹம்மத்




அகிலத்தின் ஒளிக்கீற்றாய்
அவனியிலே உதித்தாரே
மகிமை பொருந்திய மாநபி
மானிடர் வழி காட்டினாரே!

அல்குர்ஆனை வாழ்க்கையாக
அவனியிலேயே போதித்தாரே
அல் அமீன் பட்டத்தை
ஆட்சியிலேயே பெற்றாரே!

நேர்மைக்கு வித்திட்டு
நேர்வழி காட்டினாரே
சோர்ந்துப் போகாமல்
சோதனைகளை வென்றாரே!

பெண்ணுரிமை பெற்று தந்த
பெருமையை சார்ந்தவரே
உண்மைக்கு உரமிட்டு
உலகத்தாருக்கு வழிகாட்டி
யவரே!

சமாதானத்தை வழியுறுத்தி
சகவாழ்வை செதுக்கியவரே
அமானிதம் பேணி நின்று
அகிம்சை வழி கண்டவரே!

நீதிக்கு குரல் கொடுத்து
நீதியாக வாழ்ந்து காட்டிய
வரே!
சதி செய்து நின்றவரோடு
சார்ந்து நின்று சாதித்தவரே!

உலகத்தாருக்கு அருட்கொடை
உத்தம நபிகளாரின்
போதனை
குலமென்றோ கோத்திரமென்றோ
கூறு போடாத வழிகாட்
டல்!

இறுதிவரை இஸ்லாத்திற்காய்
இறையருளை சுமந்தவரே
மறுமை சுவனத்துக்காய்
மாண்புறவே வாழ்ந்து காட்டி
யவரே!

**பாரா தாஹீர் மாவனல்லை**

# அண்ணல் நபியின் அழகிய பண்புகள்

இஸ்லாத்தின் இறுதி தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் இம்மார்க்கத்தை தனது வாழ்வில் கடைப்பிடித்தது டன் இதை பின்பற்றும் ஒரு சிறந்த சமுதாயத்தையும் உருவாக்கி காண்பித்தார்கள் அதனால் முஸ்லிம் சமுதாயம் முழு உலகுக்கும் முன்மாதிரி சமுதாயமாக விளங்கியது.

ஒழுக்கத்தின் சிகரமாய் வாழ்ந்த அண்ணலும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நமக்கு அழகிய முன் மாதிரியாக ஆக்கி தந்தான் இறைவன்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'நல்ல ஒழுக்கங்கங்களை பரிபூரணமாக்குவதற்கே நான் அனுப்பப்பட்டுள்ளேன்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: முஅத்தா)

ஓர் இறை நம்பிக்கையாளன் சிறந்த ஒழுக்கமுள்ளவனாக திகழ வேண்டும். ஒழுக்கம் இல்லாதவன் சமூகத்தில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்களிடம் "எந்த முஸ்லிமின் நம்பிக்கை முழுமையானது எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் யாரிடம் சிறந்த ஒழுக்க பண்பு இருக்கிறதோ அவர் தான்' என பதில் அளித்தார்கள். (ஆதாரம்: தபரானி)

மற்றொரு தடவை நபி (ஸல்) அவர்கள், "நியாயத் தீர்ப்பு நாளில் ஒரு முஃமினின் தராசில் சிறந்த ஒழுக்கத்தை விட கனமானது எதுவும் இருக்கப் போவதில்லை. அல்லாஹ் ஆபாசமாகவும், கடினமாகவும் பேசுகின்றவனை வெறுக்கின்றான். நல்ல ஒழுக்கத்தை உடைய ஒருவர், தொழுகை, நோன்பு ஆகியவற்றை உடைய வரது நிலைக்கு வந்து விடுகின்றார்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம் : இப்னு அஹ்மத்)

இதன் அடிப்படையிலேயே அண்ணலாரின் பண்புகளும் அமைந்திருந்தன. அன்னார் ஒரு போதும் இங்கிதம் தவறி நடந்ததுமில்லை. யாரிடமும் கடினமாக நடந்து கொள்ளவில்லை. தனக்குப் பணிவிடை செய்யும் தோழர்களிடம் அவர்கள் அதிருப்தியை வெளிப்படுத்தும் சொற்களைக் கூட உதிர்த்ததுமில்லை.

நபிகளாரைக் கண்ட எவரும் அவர்களிடம் கரம் பற்றி ஸலாம் கொடுத்தால் அவர் தன் கரத்தை எடுக்கும் வரை நபிகளார் தங்கள் கைகளை விலக்கிக் கொள்ளாதவராவே இருந்துள்ளார்கள். மற்றவர் தனது முகத்தைத் திருப்பிக் கொள்ளும் வரை நபிகளார் தங்கள் முகத்தைத் திருப்பிக் கொள்ளக் கூடியவராகவும் இருந்ததில்லை. கஞ்சத்தனம் கிஞ்சிற்றும் அன்னாரிடம் காணப்படவில்லை. நபிகளார் எப்போழுதும் தாராளத் தன்மையுடன் நடந்து கொண்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நேர்மையானவராகவும் தைரியம் மிக்கவராகவும் திகழந்துள்ளார்கள். எவராவது கேட்டது எதையும் இல்லை என்று அவர்கள் சொன்னதில்லை. இருந்தால் கொடுப்பார்கள். இல்லையெனில் மனநிறைவோடு கேட்டவர் திரும்பிடுமாறு செய்வார்கள்.

எப்பொழுதும் கண்ணியம் காத்தார்கள். அடக்கமானவர்களாகத் திகழ்ந்தார்கள். குறுகிய மனப்பான்மையைக் குழி தோண்டிப் புதைத்து விட்டு, பரந்த மனப்பான்மையோடு அனைவரிடமும் பழகினார்கள்.

தர்க்கம் செய்வது அவர்களது சுபாவத்தில் இல்லை. அருவருப்பான வார்த்தைகளை அவர்கள் உபயோகித்ததில்லை. அவர்கள் அளவுக்கு மீறி ஒருவரைக் கண்டித்ததும் கிடையாது; அளவுக்கு அதிகமாக ஒருவரைப் புகழ்ந்ததும் கிடையாது. எப்பொழுதும் யாரைப் பார்த்தாலும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் புன்னகைக்கக்கூடியவராக இருந்தார்கள்.

தம் தோழர்களோடு மிருதுவாகப் பேசுவார்கள். தாராளமாகக் கலந்து பழகுவார்கள். குழந்தைகளோடு மிருதுவாகப் பேசுவார்கள். அவர்களை மடியில் வைத்துக் கொஞ்சுவார்கள். காதுகளில் ரகசியமாக யாரும் பேசினால், அவர் வாயை எடுக்கும் வரை தனது காதை எடுக்க மாட்டார்கள்.

யாரிடமும் முதன் முதலில் ஸலாம் எனும் முகமன் கூறுவது நபிபெருமானார் (ஸல்) அவர்களாகத்தான் இருக்கும்.

அண்ணலார் (ஸல்) அவர்களை யார் காண வந்தாலும் தங்களது மேலாடையை விரித்து அதில் அவரை அமரச் செய்வார்கள். தோழர்களைக் கண்ணியப்படுத்தும் விதத்தில் அழகிய பெயர் சொல்லி அழைத்தார்கள்.

யாராவது அவர்களிடம் பேசினால் பேசி முடிக்கும் வரை பொறுமையாகக் கேட்பார்கள். இடைமறிக்க மாட்டார்கள். விருந்தினர்களுக்கு நபிகளாரே எழுந்து உணவு பரிமாறுவார்கள். அண்ணலார் (ஸல்) அவர்கள் வரும்போது தோழர்கள் எழுந்து நிற்பதைத் தடுத்தார்கள். யாரிடமும் அவசியமின்றி பேசமாட்டார்கள். குறுநகையே அவர்களது சிரிப்பு. நடக்கும் போது அவர்களது காலடிகள் நிதானமாக இருக்கும். வேகமோ, நடுக்கமோ இருக்காது.



பேச்சுக்கள் நிதானமாக இருக்கும். அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

"பெருமானார் (ஸல்) அவர்களின் பேச்சுக்கள் எவ்வளவு நிதானமாக இருந்தன என்றால் ஒருவர் அவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகளை எண்ணிட விரும்பினால் தாராளமாக எண்ணி விடலாம்." நறுமணத்தை விரும்பினார்கள். அதிக நேரங்களில் நறுமணத்தோடு இருந்தார்கள். ஆடம்பரத்தை வெறுத்தார்கள். எளிய வாழ்க்கையை விரும்பினார்கள்.

கோழைத்தனமில்லாமல் வாழ்ந்து காட்டினார்கள். கோழைத்தனத்தை விட்டும் பாதுகாத்தருளும்படி அல்லாஹ்விடம் பிரார்த்திக்க நமக்கும் கற்றுத் தந்தார்கள்.

இவ்வளவு நல்ல பண்புகளைக் கொண்டிருந்ததனால்தான் அவர்கள் இவ்வுலகில் வெற்றி வாகை சூடினார்கள். பூமி முழுவதும் அல்லாஹ்வின் நாமம் ஒலிக்கச் செய்தார்கள். அண்ணலாரது நபித்தோழர்கள் புடம் போட்ட தங்கங்களாக மின்னினார்கள்.

அல்லாஹ்வின் ஆட்சியை நபி (ஸல்) அவர்கள் அகிலமெங்கும் நிலை நாட்டினார்கள்.

– யாழ் அஸீம்




# உத்தம நபியின் இறுதிநாட்கள்

நபி (ஸல்) அவர்களுக்கு ஹஜ் பிறை 12ல் அல் குர்ஆனின் ஸூரதுந் நஸ்ர் அருளப்பட்டது. இவற்றிலிருந்து நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகை விட்டு விடைபெறப் போகிறார்கள். அவர்களது மரணச் செய்தி அவர்களுக்கு வந்துவிட்டதென உணரப்பட்டது. துல்ஹஜ் மாதம் முடிந்து முஹர்ரம் மாதமும் முடிந்தது. ஸபர் மாதமும் பிறந்தது. ஹிஜ்ரி 11 ஸபர் மாத ஆரம்பத்தில் நபி (ஸல்) அவர்கள் உஹதுக்குச் சென்றார்கள்.

அங்கு ஷஹீதானவர்களுக்காக அல்லாஹ்விடம் இறைஞ்சித் தொழுதார்கள். இருப்பவர்களுக்கும், இறந்தோருக்கும் விடை கூறுவதுபோல் நபி (ஸல்) அவர்களின் இச்செயல் அமைந்தது.

ஒருநாள் நடுநிசியில் ஜன்னத்துல் பகீஃ மண்ணறைக்குச் சென்று அங்கு அடக்கம் செய்யப்பட்டவர்களுக்காக பாவமன்னிப்புத் தேடிவிட்டு நிச்சயமாக நாமும் உங்களிடம் வந்துசேருவோம் என்ற நற்செய்தியையும் அவர்களுக்குக் கூறினார்கள்.

ஹிஜ்ரி 11 ஸபர் திங்கட்கிழமை பிறை 28 ஜனாஸா ஒன்றில் கலந்துகொள்ளபகீஃ சென்றார்கள். நல்லடக்கம் செய்துவிட்டுதிரும்பும் வழியில் நபி (ஸல்) அவர்களுக்கு கடும் தலைவலி ஏற்பட்டது. உடல் உஷ்ணம் அதிகமானது. இந்நிலையிலேயே 11 நாட்கள் மக்களுக்கு தொழுகை நடாத்தினார்கள். 13 அல்லது 14 நாட்கள் கடினமான நோயில் கழித்தார்கள்.

இறுதிவாரம் நபி(ஸல்) அவர்களுக்கு நோய் கடுமையாகவே நாளை நான் எங்கிருப்பேன்? நாளை நான் எங்கிருப்பேன்? என துணைவியரிடம் விசாரிக்க தொடங்கினார்கள். நபி (ஸல்) அவர்கள் விரும்பிய வீட்டில் தங்குவதற்கு அவர்களின் துணைவியர் அனுமதித்தனர். ஒருபுறம் பழ்ல் இப்னு அப்பாஸ் (ரழி), மறுபுறம் அலீ (ரழி) தாங்கலாக கால்கள் தரையில் உரசிக் கோடுபோட்ட நிலையில் அன்னை ஆயிஷா (ரழி) வீட்டுக்கு சென்றார்கள்.

நபி (ஸல்) அவர்களின் தலை துணியால் கட்டப்பட்டிருந்தது. ஆயிஷா (ரழி) அவர்களின் வீட்டிலேயே தங்களது வாழ்வின் இறுதி வாரத்தை நபி (ஸல்) அவர்கள் கழித்தார்கள். ஆயிஷா (ரழி) அவர்கள் ஸூரா பலக், நாஸ் மற்றும் நபி (ஸல்) அவர்களிடம் தான் கற்ற துஆக்களை ஓதி ஊதிவந்தார்கள். பரக்கத்தை நாடி நபி (ஸல்) அவர்களின் கரத்தாலேயே அவர்களைத் தடவி விட்டார்கள்.

மரணத்துக்கு 5 நாட்களுக்கு முன்பு புதன்கிழமை உடல் உஷ்ணம் மேலும் அதிகரித்தது. வலியும் அதிகமானது. அவ்வப்போது நபி (ஸல்) அவர்களுக்கு மயக்கமும் ஏற்பட்டது. அப்போது பல கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுத்துவந்து என் மீது ஊற்றுங்கள் என்கிறார்கள்.

தோழர்கள் நபி (ஸல்) அவர்களை ஒரு பெரிய பாத்திரத்தில் அமர வைத்து நீர் ஊற்றினார்கள். நபி (ஸல்) அவர்கள் 'போதும் போதும்' என்று கூறினார்கள். அப்போது தான் நபி (ஸல்) அவர்களின் சூடு தணியக்கண்டார்கள். தலையில் தடித்ததுணியைக் கட்டிக் கொண்டு போர்வையை போர்த்தியவர்களாக மிம்பரில் வந்துஅமர்ந்தார்கள். அதுதான் நபி (ஸல்) அவர்களின் கடைசி சபையாகும்.

அல்லாஹ்வை போற்றிப் புகழ்ந்து விட்டு மக்களை விழித்து உருக்கமான சில உபதேசங்களைச் செய்தார்கள். எனது கப்ரை வணங்கும் இடமாக ஆக்காதீர்கள் எனக் கூறினார்கள். மேலும் யாராவது நான்முதுகில்அடித்திருந்தால்இதோ எனது முதுகை தந்து விட்டேன். பழித்தீர்த்துக் கொள்ளட்டும் யாரை யாவது கண்ணியம் குறையதிட்டி இருந்தால் இதோ நான் முன்வந்துள்ளேன். அவர் பழிதீர்த்துக் கொள்ளட்டும்.

பின்பு மிம்பரில் இருந்து இறங்கி ளுஹரைத் தொழ வைத்தார்கள். மரணத்துக்கு நான்கு நாட்களுக்கு முன்பு வியாழக்கிழமை நபி (ஸல்) அவர்களுக்கு வலி மேலும் கடுமையானது. மக்களை நோக்கி வாருங்கள் எனக்கூறி மூன்று விடயங்களைச் சொன்னார்கள்.

' இங்கு வருகைதரும் மக்களை நான் கவனித்து உபசரித்தவாறே நீங்களும் உபசரித்து விருந்தோம்பல் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் வேதத்தையும் நபிவழியையும் நன்றாகபிடித்துக் கொள்ளுங்கள் உள்ளிட்ட மூன்று விடயங்களை எடுத்தியம்பினார்கள்.

தனக்கு நோய் கடினமாக இருந்தும் அன்றையதினம் (வியாழக்கிழமை) தொழுகை அனைத்தையும் நபி (ஸல்) அவர்களே தொழ வைத்தார்கள். அன்றையதினம் மஃரிப் தொழுகையில் 'வல்முர்ஸ லாத்து உர்பா' என்ற சூராவை ஓதி தொழ வைத்தார்கள். (ஆதாரம்: புஹாரி) அன்றையதினம் இஷா நேரத்தில் மேலும் நோய் தீவிர நிலையை அடைந்தது.

நபி (ஸல்) அவர்களுக்கு பள்ளிக்கு வர முடியவில்லை. அப்போதிலிருந்து பதினேழு நேர தொழுகைகளை நபி (ஸல்) அவர்கள் நோயுடன் இருக்கும் போது அபூபக்கர் (ரழி) அவர்களை தொழ வைக்கும்படி கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

மரணத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்பு கூறக் கேட்டதாக ஜாபிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்,' அறிந்துகொள்ளுங்கள் உங்களில் எவரும் அல்லாஹ் மீது நல்லெண்ணம் கொணடவராகவே தவிர மரணிக்க வேண்டாம்.' (ஆதாரம்: அபூதாவூத்)

இரண்டு அல்லது ஒரு நாளுக்கு முன் அது சனி அல்லது ஞாயிறு தினம். நபி(ஸல்) அவர்களின் உடல் நலனில் முன்னேற்றத்தை உணர்ந்தார்கள். இரண்டு பேரின் உதவியுடன் தங்களது அறையிலிருந்து பள்ளிக்கு வந்தார்கள். அப்போது அபூபக்கர் (ரழி) ளுஹர் தொழவைத்துக் கொண்டிருந்தார்கள். என்னை அபூபக்கர் (ரழி) அருகில் அமர வையுங்கள் என்று கூற அவர்களை அபூபக்கர் (ரழி) அவர்களின் இடப் பக்கத்தில் உட்கார வைத்தார்கள்.

மேலும் தங்களிடமுள்ள அடிமைகளை அனைத்தையும் உரிமையிட்டார்கள். மேலும் தங்களிடம் உள்ள ஏழு தங்கக் காசுகளையும் தருமம் செய்தார்கள். தங்களது ஆயுதங்களை முஸ்லிம்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். (ஆதாரம்: புஹாரி)

திங்கட்கிழமையன்று முஸ்லிம்கள் அபூபக்கர் (ரழி) அவர்களைப் பின்தொடர்ந்து 'பஜ்ர்' தொழுது கொண்டிருக்கும் போது திடீரென ஆயிஷாவுடைய அறையின் திரையை நபி (ஸல்) அவர்கள் நீக்கி மக்கள் அணிஅணியாக தொழுகையில் நிற்பதைப் பார்த்து ஆனந்தமாகச் சிரித்தார்கள்.

தொழ வைப்பதற்கு நபி (ஸல்) அவர்கள் வருகிறார்கள் என்று எண்ணி அபூபக்கர் (ரழி) அவர்கள் தொழவைக்கும் இடத்திலிருந்து சற்று பின்னே வரிசையை நோக்கி நகர்ந்தார்கள்.

நபி(ஸல்) அவர்களின் வருகையைப் பார்த்த மகிழ்ச்சியினால் முஸ்லிம்கள் தொழுகையில் நிலைகுலைய ஆரம்பித்தனர். நபி(ஸல்) அவர்கள் 'உங்களது தொழுகையை முழுமைபடுத்திக் கொள்ளுங்கள்.' என்று கூறிவிட்டு அறையில் நுழைந்து திரையிட்டுக் கொண்டார்கள். (ஆதாரம்: புஹாரி)

முற்பகல் நேரம் வந்தவுடன் நபி (ஸல்) அவர்கள் பாத்திமாவை வரவழைத்து அவரிடம் சிலவற்றை இரகசியமாகப் பேசினார்கள். அதைக் கேட்டவுடன் பாத்திமா (ரழி) அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். மீண்டும் அழைத்து சிலவற்றை இரகசியமாகக் கூறவே பாத்திமா (ரழி) அவர்கள் சிரித்தார்கள்.

இது பற்றி பாத்திமாவிடம் விசாரித்த போது எனக்கு ஏற்பட்டுள்ள இவ்வலியினால் நான் இறந்து விடுவேன் எனக்கூற நான் அழுதேன். அவர்களது குடும்பத்தில் நான் தான் முதலில் அவர்களை சென்றடைவேன் எனக் கூற நான் சிரித்தேன் என்கிறார்கள். (ஆதாரம்: புஹாரி)

நபி (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட கடுமையான நிலைமையைக் கண்ட பாத்திமா (ரழி) அவர்கள் எனது தந்தைக்கு ஏற்பட்ட கஷ்டமே என வேதனைப் பட்டார்கள். உன் தந்தைக்கு இன்றைக்குப் பிறகு என்றுமே சிரமம் இருக்காது என்று நபி (ஸல்) அவர்கள் ஆறுதல் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)



ஹஸன், ஹூஸைன் ஆகியோரை வரவழைத்து அவர்களை முத்தமிட்டு அவர்களுடன் நல்லமுறையில் நடந்துகொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

மனைவிமார்களையும் அழைத்து அவர்களுக்கும் உபதேசமும் அறிவுரையும் நல்கினார்கள். முன்பைவிட வேதனை அதிகமானது.

மரணத் தருவாயில் இறுதிநேரம் நெருங்கவே ஆயிஷா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களைத் தனது நெஞ்சோடு அனைத்துக் கொண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் என் அறையில் எனக்குரிய தினத்தில் எனது கழுத்துக்கும், நெஞ்சுக்கும் இடையில் மரணமானார்கள்,அவரது மரண நேரத்தில் எனது எச்சிலையும் அவர்களது எச்சிலையும் ஒன்று சேர்த்தேன்.

அவர்களுக்கு அருகில் நீர் நிரம்பிய குவளை இருந்தது. அதில் கைகளை விட்டு முகத்தில் தடவிக்கொண்டார்கள்.'லாஇலாக இல்லல்லாஹ் இன்னலில் மவ்தி சகராத்' என்றார்கள். (ஆதாரம்: புஹாரி)

அவர்களது பார்வை முகட்டை நோக்கியது. அவர்களது உதடுகள் அசைந்தன. அவர்கள் என்ன கூறுகிறார்கள் என ஆயிஷா (ரழி) செவி தாழ்த்திக் கேட்டார்கள். என்னை மன்னிப்பாயாக.

என் மீது கருணை காட்டுவாயாக, உயர்ந்த நண்பனுடன் என்னைச் சேர்த்து வைப்பாயாக. (ஆதாரம்: புஹாரி) கடைசி வார்த்தையை மட்டும் மூன்றுமுறை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். உயர்த்திய அவரது கை சாய்ந்தது. உயர்ந்தோனிடம் சென்றார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

ஹிஜ்ரி 11 ரபிஉல் அவ்வல் 12 திங்கட்கிழமை முற்பகல் முடியும் நேரத்தில் அவர்களுக்கு மரணம் ஏற்பட்டது. அப்போது நபி (ஸல்) அவர்களுக்கு 63 வயதும் 4 நாட்கள் ஆயிருந்தன. நபி (ஸல்) அவர்களின் ஜனாஸா 'ஹிபரா'ஆடையால் போர்த்தப்பட்டது. நபி ஸல்) அவர்களின் முகத்தில் இருந்து போர்வையை அகற்றி முகத்தைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு ஸஹாபாக்கள் அழலானார்கள். அபூபக்கர் (ரழி) அவர்கள் இவ்வேளையில் திங்கட்கிழமை பகல் முழுவதும் முடிந்து இரவு முழுமையாக முடிந்தது. அதுவரை நபி (ஸல்) அவர்களின் புனித உடல் 'ஹிபரா' போர்வையுடன் இருந்தது.

செவ்வாய் பகல் அன்று நபி (ஸல்) அவர்களின் ஆடையை களையாமல் அப்படியே குளிப்பாட்டினர். இப்பணியில் பல மூத்த தோழர்கள் ஈடுபட்டார்கள். உஸாமாவும், ஷுக்ரானும் நீர் உற்ற அலி (ரழி) அவர்கள் குளிப்பாட்டினார்கள். இவ்வாறு இலந்தை இலை கலந்த நீரால் மும்முறை குளிப்பாட்டினார்கள். நபி (ஸல்) அவர்களைக் குளிப்பாட்ட ஸஃது இப்னு கைஸமுவுக்குச் சொந்தமான 'கரஸ்' என்ற கிணற்றிலிருந்து நீர் கொண்டு வரப்பட்டது.

மேலும் நபி(ஸல்) அவர்களை வெள்ளை நிற யெமன் நாட்டு பருத்தி ஆடையினால் 'கபன்' இடப்பட்டார்கள். 'இறைத்தூதர்(ஸல்) அவர்களது உயிர் எங்கு பிரிகிறதோ அங்கு அடக்கம் செய்யப்படுவார்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன் என்றார்கள் அபூபக்கர் (ரழி) அவர்கள்.

உடனடியாக நபி (ஸல்)அவர்கள் மரணித்த இடத்திலுள்ள விரிப்பை அகற்றி அங்கே அபூதல்ஹா (ரழி) அவர்கள் கப்ர் தோண்டினார்கள். மக்கள் பத்து பத்து பேர் கொண்ட கூட்டம் கூட்டமாக நபி (ஸல்) அவர்களின் அறைக்குள் சென்று ஜனாஸா தொழுதார்கள். இதேநிலையில் செவ்வாய் கழித்து புதன் இரவு நடுநிசியில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.(ஆதாரம்: முஸ்னத் அஹ்மது)

மௌலவி
எம்.யூ.எம்.வாலிஹ்...
(அல்அஸ்ஹரி) வெலிகம

# என்றும் போற்றப்படும் மாமனிதர்

உலகம் இருக்கும் வரையும் நினைவுகூறப்படக் கூடியவராகவும் முன்மாதிரியாகக் கொள்ளப்பட வேண்டியவராகவும் என்றும் போற்றப்படுபவராகவும் திகழ்பவர் தான் இஸ்லாத்தின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆவார். அதற்கான ஏற்பாட்டை சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்தஆலா ஏற்படுத்தி வைத்துள்ளான். ரசூல் (ஸல்) அவர்கள் மிகவும் உயரிடத்தில் வைத்து நோக்கப்படும் மாபெரும் தீர்க்கதரிசி ஆவார்.

முன்னணி சிரேஷ்ட ஆய்வாளரான மைக்கல் எச். ஹார்ட் உலகில் வாழ்ந்த நூறு பேரை தேர்ந்தெடுத்து ஆய்வு செய்து எழுதியுள்ள நூலில் முஹம்மது நபி (ஸல்) அவர்களையே முதலாவதாக உள்ளடக்கியுள்ளார். அவர் ஒரு முஸ்லிமல்லாத ஆய்வாளரான போதிலும் முஹம்மத் (ஸல்) அவர்களை முதலில் சேர்த்தத்தற்கான காரணத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக தாம் மேற்கொண்ட ஆய்வின் படி, அன்னாரை முதலில் சேர்ப்பதற்கான அனைத்து தகுதியையும் நியாயங்களையும் அவர் கொண்டுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் மகாத்மா காந்தி, அறிஞர் அண்ணாதுரை, டாக்டர் பெர்னார்ட் ஷா உள்ளிட்ட முஸ்லிமல்லாத அறிஞர்கள் மற்றும் தலைவர்கள் பலரும் முஹம்மத் (ஸல்) அவர்கள் குறித்து தம் மதிப்புரைகளை சிறப்பான முறையில் முன்வைத்துள்ளார்கள்.



அல்லாஹ்தஆலா முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அதிக அன்பு வைத்திருக்கிறான். இதனை அல் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறது.

'நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது வானவர்களும் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து கூறுகிறார்கள். இறைநம்பிக்கையாளர்களே... நபி (ஸல்) அவர்கள் மீது நீங்களும் ஸலவாத்தும் ஸலாமும் கூறிக் கொண்டிருங்கள்' (அல் குர்ஆன் 33:56)

மேலும் அப்துல்லாஹ் பின் அம்ரிப்னுல் ஆஸ் (ரழி) அவர்கள் ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'யார் என் மீது ஒரு முறை ஸலவாத் கூறுகிறாரோ அவர் மீது, அல்லாஹ்வும் பத்துமுறை ஸலவாத்துக் கூறுகின்றான்' என்று என அறிவித்ததை செவியேற்றுள்ளேன் என்றுள்ளார்கள்'. (ஆதாரம்: முஸ்லிம்)

இவ்வாறு ரசூல் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து சொல்வது குறித்து ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. எனவே நாம் ஸலவாத்துச் சொல்வதை அதிகமதிகமாக்கிக் கொள்வோம். பெருமானார் (ஸல்) அவர்களின் பெருவாழ்வு, அவர்களின் சொல், செயல், அங்கீகாரங்கள் என்பன தெளிவாக எடுத்தியம்பப்பட்டுள்ளன.

நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வழிகாட்டுதல்கள், போதனைகள், நற்குண, நற்பண்புகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் எடுத்து நடப்பதில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக திக்ர், தஸ்பீஹ், ஸலவாத்து சொல்லுதல் போன்ற செயற்பாடுகளில் அதிகமதிகம் ஈடுபட வேண்டும்.

எனவே ரசூல் (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிமுறைகளை பின்பற்றி அல்லாஹ், நபி (ஸல்) அவர்களின் விருப்பத்துக்குரியவர்களாக மாறுவோம். அதற்காக உறுதி கொள்வோம்.

பீ.எம் முக்தார்
பேருவளை விஷேட நிருபர்

# நகர்வலம்



# ஜனாதிபதி ரணில் வெற்றிபெறுவது உறுதி; சிறுபான்மை மக்களும் பங்காளராக வேண்டும்

## இரத்தினபுரி ஐ.தே.க அமைப்பாளர் ஆனந்தகுமார்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சுயாதீன வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவது உறுதியாகியுள்ளது. எனவே, தமிழ் பேசும் மக்களும் இந்த வெற்றியின் பங்காளிகளாக வேண்டும். அப்போதுதான் உரிமைகளையும், அபிவிருத்திகளையும் இலகுவாக வென்றெடுக்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

வாக்குரிமையே மக்களின் ஜனநாயக ஆயுதம். அந்த ஆயுதத்தை நாட்டின் முன்னேற்றத்துக்காகவும், நமது முன்னேற்றத்துக்காகவும் பயன்படுத்துவோம் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

இரத்தினபுரி பகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே சுப்பையா ஆனந்தகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அவர்,

ஜனாதிபதி தேர்தலுக்கான நாள் நெருங்கிவிட்டது. இன்னும் 6 நாட்களுக்கு பிறகு வாக்குரிமையை மக்கள் பயன்படுத்தப் போகின்றனர். இம்முறை வாக்காளர்கள் அனைவரும் தமது வாக்கை கட்டாயம் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் இது நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகின்ற தேர்தலாகும்.

அதுவும் அனுபவமற்ற, முதிர்ச்சியற்ற அரசியல்வாதிகளுக்கு வாக்களிப்பதை தவிர்த்துக் கொள்வதே நல்லது. அப்படியானால் அனுபவமுள்ள, முதிர்ச்சியுள்ள, நாட்டை மீட்டெடுத்த தலைவரே உங்கள் தேர்வாக இருக்க வேண்டும். அந்த தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை நான் கூறிதான் உங்களுக்கு தெரியவேண்டும் என்றில்லை.

வரிசை யுகத்தில் நின்று வலி சுமந்த நாட்களை நாம் மறந்துவிடக் கூடாது. இன்று இயல்புநிலை உள்ளதெனில் அதற்கு ஜனாதிபதியே காரணம்.

எதிரணி வேட்பாளர்கள் சுதந்திரமாக அரசியல் செய்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்கிக்கொடுத்தவரும் அவரே.

நெருக்கடியான சூழ்நிலையிலும் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, உறுமய திட்டம், அஸ்வெசும மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் பல பல விடயங்களை அவர் செய்துள்ளார். சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பும் அதிகரித்துள்ளது.

எனவே, தற்போதுள்ள இந்த சூழ்நிலையை மாற்றியமைத்தால் நாட்டின் பொருளதாரம் மீண்டும் படுகுழிக்குள் விழும். வரிசை யுகம் ஏற்படும் என்பதை மறந்துவிட வேண்டும். எனவே, உங்கள் வாக்கை சரிவர பயன்படுத்துங்கள் என கேட்டுக்கொண்டார்.

# தரீக்கதுல் பாஸிய்யாவின் மௌலீத் தமாம் இன்று



பேருவளை, சீனன்கோட்டை தரீக்கதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா அமைப்பின் ஏற்பாட்டில் நபி (ஸல்) அவர்கள் பிறந்த தினமான ரபிய்யுல் அவ்வல் மாதத்தை சிறப்பிக்குமுகமாக 12 தினங்கள் மௌலீத் ஓதும் நிகழ்வு பத்தை ஸாவியா லேனில் வெகுவிமர்சையாக நடைபெற்று வருகிறது. இந்நிகழ்வில் சுப்ஹான மௌலீத் ஓதப்படுவதுடன் தமாம் மஜ்லிஸ் இன்று (16) இரவு வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

### கைத்துப்பாக்கியை காண்பித்து

# எரிபொருள் நிலையத்தில் ரூ. 207,500 கொள்ளை

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மஹாவெவ பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் கைத்துப்பாக்கியை காண்பித்து நேற்று (15) அதிகாலை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தொடுவாவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வருகை தந்த நபர் ஒருவர், எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளரிடம் கைத்துப்பாக்கியை காண்பித்து சுமார் 207,500 ரூபாவை கொள்ளைடித்துச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் தொடுவாவ பொலிஸில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டினை அடுத்து, கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள வர்த்த நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சீ.சீ.டி.வி கமராக்களை பரிசோதனை செய்து, சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தொடுவாவ பொலிஸார் தெரிவித்தனர்.

# ரணில் வெற்றிபெறுவதன் மூலமே நாடு ஒளிமயமாக முடியும்

## வெலிகம முன்னாள் நகர பிதா மொஹமட்

**(வெலிகம தினகரன் நிருபர்)**



எதிர்வரும் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் வெற்றி பெறச் செய்வதன் மூலம் நாட்டின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க முடியுமென வெலிகம நகர சபை முன்னாள் தலைவர் எச்.எச். மொஹமட் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து வெலிகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் நாடு பெரும் நெருக்கடியில் சிக்கியிருந்தது.

பெற்றோல், டீசல், கேஸ், மண்ணெண்ணெய் போன்றவைக்கு தட்டுப்பாடு காணப்பட்டன. நீண்ட வரிசைகளில் பல மணித்தியாலங்கள் காத்திருந்து அவைகளை பெற்றுக் கொள்ள வேண்டிய அவலநிலை காணப்பட்டது. இந் நிலையில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்க எவரும் முன்வராததால்

"தன்னால் இயலும்" என்ற ஒரே நம்பிக்கையோடு நாட்டைப் பொறுப்பேற்றார் ஜனாதிபதி ரணில். வெற்றியும் கண்டார்.

நாடு தற்போது மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளதை காணமுடிகிறது. தொடர்ந்து இதேநிலையில், நாட்டை பாதுகாக்க வேண்டுமாயின் ரணில் விக்கிரம சிங்கவை வெற்றிபெறச் செய்வதினூடாகவே அது சாத்தியமாகும். இதனை நன்கு யோசித்து மக்கள் வாக்களிக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க ஒரு தலைசிறந்த அரசியல் தலைவர். தூர நோக்கு கொண்டவர். அரசியல் அனுபவம் கொண்டவர். இலங்கைக்கு சுபீட்சமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப ஆற்றலும், அனுபவமும் கொண்டவர். அதனை கடந்த இரண்டு வருடங்களுக்குள் அனுபவபூர்வமாக நிரூபித்தும் காட்டியுள்ளார்.

எனவே, நாட்டின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு அவருக்கு கட்சி பேதமின்றி அனைவரும் வாக்களிப்போம்.

# ஜாமிஉல் அன்வர் பெரிய பள்ளிவாசலில் மீலாத் நிகழ்வு

**கொழும்பு தினகரன் நிருபர்**

பறகஹதெனிய, ஜாமிஉல் அன்வர் பெரிய பள்ளிவாசலின் வருடாந்த மீலாதுன் நபி தின போட்டி நிகழ்ச்சி மற்றும் பரிசளிப்பு விழா இன்று 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8:00 மணி முதல் பறகஹதெனிய ஜாமிஉல் அன்வர் பெரிய பள்ளிவாசலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பள்ளிவாசலின் செயலாளர் தெரிவித்தார்.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் கலந்து கொள்ளவுள்ளார்

இதன்போது பறகஹதெனிய மத்ரஸதுல் ஜாமிஉல் அன்வர், சிங்ஹபுர மத்ரஸதுர் ரஹ்மானியா, பண்டாரகல மஸ்ஜிதுன் நூர் ஆகிய குர்ஆன் மத்ரஸா மாணவர்களின் போட்டி நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



ஹஜ் உம்ரா முகவர் நிலையமான ஹாஜரா டிரவல்ஸ் அனுசரணையில் பேருவளையைச் சேர்ந்த சாதனை வீரர் சஹ்மி ஸஹீத் தனது தாயார் சகிதம் புனித உம்ரா கடமையை மேற்கொள்ள கடந்த 10ம் திகதி மாலை மக்காவுக்கு பயணமானார். இவரை விமான நிலையத்தில் வைத்து மௌலவி அஸ்ஸெய்யித் பலூலுத்தின் மௌலானா (நூரி) அல் காதிரி உட்பட உலமாக்கள், இரத்தினக்கல் வர்த்தகர்கள் பலரும் வழியனுப்பி வைத்த போது எடுத்த படம். (படம்: பேருவளை விசேட நிருபர்)

### அநுராதபுரம் மாவட்டம்

# 7 இலட்சத்து 41,862 பேர் இம்முறை வாக்களிக்க தகுதி

**அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அநுராதபுரம் தேர்தல் மாவட்டத்திலிருந்து 7,41,862 பேர் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

இதனடிப்படையில் ஹொரவப் பொத்தானை தொகுதியில் 94,739 வாக்காளர்களும் அநுராதபுரம் மேற்கு 1,20,050 வாக்காளர்களும் அநுராதபுரம் கிழக்கு 1,14,924 வாக்காளர்களும் மதவாச்சி தொகுதியில் 99,897 வாக்காளர்களும் கெக்கிராவ தொகுதியில் 95,517 வாக்காளர்களும் கலாவெவ தொகுதியில் 1,41,456 வாக்காளர்களும் மிஹிந்தலை தொகுதியில் 75,292 வாக்காளர்களும் தகுதி பெற்றுள்ளனர்.

வாக்களிப்புக்காக 636 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அஞ்சல் மூல வாக்குகளை எண்ணும் பணிக்காக 35 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் பொது வாக்குகளை எண்ணும் பணிக்காக 60 மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் பணிகள் மத்திய வித்தியாலயத்தில் நடைபெறும். இதற்காக 10,287 பேர் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

# 'பென் கிளப்பின்' சிறுகதை போட்டியில் வெற்றிபெற்றோர்

அகில இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை உள்ளடக்கிய பெண்கள் அமைப்பான 'ஸ்ரீலங்கா பென் கிளப்பின்' ஏற்பாட்டில், நாடளாவிய ரீதியில் நடைப்பெற்ற சிறுகதைப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் தெரிவிக்குழுவின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முதலிடம் "தியாகத்தீபம்" ஐனுன் கதீஜா அன்சார் - திருகோணமலை, இரண்டாம் இடம் "சொல்லாத கதைகள்" ஐ.எஸ். ஹினாயா - ஏறாவூர், மூன்றாம் இடங்கள் "பாதை மாறிய பயணங்கள்" லரீபா பதுர்தீன் - கலேவெல, "குருவிக்கூடு" பஸ்லா பர்ஸான் -காத்தான்குடி ஆகியோர்களாவர்.

இவர்களுக்கான பரிசளிப்பு, திருகோணமலையில் நடைப்பெறவுள்ள அமைப்பின் மகாநாட்டில் வழங்கி வைக்கப்படும் என அதன் தலைவி சம்மாந்துறை மஷூரா சுகுர்தீன் தெரிவித்தார்.

# உம்மு ஸாவியாவில் 'சமாயிலுத் திர்மிதி' தமாம் மஜ்லிஸ்

ஷாதுலியாத் தரீக்காவின் தலைமையகமான கொழும்பு உம்மு ஸாவியாவில் 122ஆவது வருட புனித 'சமாயிலுத் திர்மிதி பாராயண மஜ்லிஸ்' தமாம் வைபவம் இன்று (16) திங்கள் கிழமை காலை நடைபெறும்.

உம்மு ஸாவியா பிரதம இமாம் அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி முதல்வர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எஸ். அஹ்மத் சூபி (மஹ்ழரி) தலைமையில் கடந்த 5ஆம் திகதி பாராயண மாஜ்லிஸ் ஆரம்பமாகி தினமும் நடைபெற்று வருகிறது. இலங்கை வானொலி முஸ்லிம் சேவை ஹதீஸ் பராயண தமாம் நிகழ்சிகளை மு.ப.7:30 மணி முதல் 8:00 மணி வரை நேரடியாக அஞ்சல் செய்யும். கலீபதுஷ்ஷாதுலி மௌலவி அஹமத் சூபி (மஹ்ழரி) ஹதீஸ் விளக்கவுரை நிகழ்துவார். உம்மு ஸாவியா நிர்வாக சபை தலைவர் தேசபந்து மக்கி ஹாஷிம் தலைமையிலான நிர்வாக சபையின் வழிகாட்டலின் கீழ் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. **(ருசைக் பாருக்)**

# பேருவளையில் மீலாத் மௌலித் மஜ்லிஸ்

**(பேருவளை விசேட நிருபர்)**

பேருவளை முஸ்லிம் வியாபாரிகள் ஒன்றிணைந்து வருடாந்தம் நடாத்தும் மீலாத் விழா மற்றும் மௌலித் மஜ்லிஸ் இன்று 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7:00 மணிக்கு பேருவளை நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மேல் மாடியில் நடைபெறும். முகத்தமுஷ் ஷாதுலி முர்தாஜ் ஸமீம் பொறுப்பாக இருந்து நடாத்தும் நிகழ்வில் உலமாக்கள், வர்த்தகர்கள், மத்ரஸா மாணவர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன உறவை கட்டியெழுப்பும் வகையில் ஏனைம சமூகங்களையும் அழைத்து இவ்விழாவை சிறப்பாக நடாத்த வர்த்தகர்கள் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக முர்தாஜ் ஸமீம் தெரிவித்தார்.

# YMMA பேரவை மீலாத் தின நிகழ்வு

**ருஸைக் பாரூக்**

அகில இலங்கை YMMA பேரவையின் வருடாந்த மீலாத் நபி வைபவம் இன்று மாலை 4.30 மணிக்கு டாக்டர் ஏ.எம்.ஏ. அகில கேட்போர் கூடத்தில் YMMAயின் தேசியத் தலைவர் சட்டத்தரணி அம்ஹர் ஷரீப் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம பேச்சாளராக மௌலவி ஹாபிஸ் இஹ்ஸான் காதிரி கலந்து கொள்வார் என YMMA சமயக் குழுத் தலைவர் பௌஸான் அன்வர் தெரிவித்தார்.

### அகில இலங்கை முஸ்லிம் கலாசார போட்டிகளில்

# தென் மாகாண பாடசாலைகள் சாதனை; சமூகம் பாராட்டு

**ஹம்பாந்தோட்டை குறூப், வெலிகம தினகரன் நிருபர்கள்**



கல்வியமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி பிரிவினால் தேசிய ரீதியில் முதல் தடவையாக ஏற்பாடு செய்திருந்த அகில இலங்கை முஸ்லிம் கலாசார போட்டியில் தென் மாகாண பாடசாலைகளில் இருந்து கலந்துகொண்ட மாணவர்கள் இரண்டு முதலாம் இடங்கள், நான்கு இரண்டாம் இடங்கள் மற்றும் இரண்டு மூன்றாம் இடங்களைப் பெற்று தென் மாகாண பாடசாலைகளுக்கு பெருமை சேர்த்துள்ளதாக தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ. எம். மஷாஹிர் (10) தெரிவித்தார்.

இடைநிலைப் பிரிவு நஷீதா போட்டியில் திக்வல்லை மின்ஹாத் தேசிய பாடசாலையின் மாணவி பீ. ஹலீமா முதலாம் இடத்தினையும் அதே பாடசாலை களிகம்பாட்டம் அணி திறந்தபோட்டியிலும் தேசிய ரீதியில் முதலாம் இடத்தினைப் பெற்று சாதனைப் படைத்துள்ளது.

பிரிவு இரண்டு கஸீதா போட்டியில் காலி உஸ்வதுன் ஹஸனா மகா வித்தியாலயம், மலாயர் நிகழ்ச்சியில் ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலை, கனிஷ்ட பிரிவு நஷீதா போட்டியில் திக்வல்லை மின்ஹாத் தேசிய பாடசாலையின் மாணவி கே. ஏ. ஹனாதி,பிரிவு மூன்று கிராத் போட்டியில் வெலிகம அரபா தேசிய பாடசாலையின் மாணவன் எம். ஜே. ஸலமா ஆகியோர் இரண்டாம் இடங்களினையும், கிராத் பிரிவு ஒன்றில் காலி உஸ்வதுன் ஹஸனா மகா வித்தியால மாணவன் எம். ஐ. எப். ரஹ்மான், கிராத் பிரிவு இரண்டில் காலி ஸாஹிரா தேசிய பாடசாலையின் மாணவன் எம். ஐ. எம் ஆதிம் ஆகியோர் மூன்றாம் இடத்தினையும் பெற்று தேசியரீதியில் தென் மாகாணத்திற்கு புகழ் சேர்த்துள்ளனர்.

வடக்கின் பொருளாதாரத்துக்கு உந்து சக்தியாக

# யாழ். – KKS, கிளிநொச்சி – பரந்தன் பகுதிகளில் ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் ஆரம்பம்

வடமாகாணத்தில் ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ள மூன்று ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் இரண்டு வலயங்களின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை மற்றும் கிளிநொச்சி, பரந்தன் ஆகிய ஏற்றுமதி செயலாக்க வலயங்களின் நடவடிக்கைகள் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டதாகவும் இவ்விரண்டு வலயங்களும் 13 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக பெயரிடப்பட்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம ஆகியோரால் ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் நடவடிக்கைகள் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வட மாகாணத்தில் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தும் நோக்குடன் மேன்மை தங்கிய ஜனாதிபதியினால் இதற்கான பத்திரம் அமைச்சரவைக்கு சமர்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஏற்றுமதி செயலாக்க வலயத்துக்கு கனேடிய இலங்கை வர்த்தக தொழிற்துறையினர் (Canada Sri Lanka Business Conversation) முதலீட்டை மேற்கொள்ள முன்வந்துள்ளனர். இந்த வலயத்துக்கான ஆரம்பக் கட்ட காணி பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நூறு மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்படுகிறது.




அத்துடன் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் பாரிய செயற்றிட்டங்களையும் முன்னெடுக்க கனேடிய இலங்கை வர்த்தக தொழிற்துறையினர் தீர்மானித்துள்ளனர். இந்த திட்டத்தின் கீழ் சுகாதார மேம்பாடு, முதியோர் இல்ல அபிவிருத்தி, தொழிற்துறை, தொழில்நுட்பவியல், சிறு வர்த்தகத் துறை மேம்பாடு, வரிவிலக்களிக்கப்பட்ட அங்காடி தொகுதி, சுற்றுலாத்துறை அபிவிருத்தி போன்ற பாரிய திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள முழுமைப்படுத்தப்பட்ட அரச தனியார் முதலீட்டு திட்டமாக இது அமையவுள்ளது. இந்த திட்டத்தில் கனேடிய இலங்கை வர்த்தக தொழிற்துறையினருடன் (Canada Sri Lanka Business Conversation) இலங்கை முதலீட்டு சபையும் கைகோர்த்துள்ளது .

இதேவேளை, கிளிநொச்சி, பரந்தனில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் அனைத்து செயற்பாடுகளும் இலங்கை முதலீட்டு சபையினால் உள்ளூர் ஏற்றுமதி, உற்பத்தி துறையினரை கொண்டு நடைமுறைப்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. இந்த வலயத்திலும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி செயலாக்க வலயங்களின் ஊடாக வடக்கு மாகாணத்தில் காணப்படும் தொழில் இன்மை பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனவும், பொருளாதார மேம்பாட்டுக்கு உந்து சக்தியாக இது அமையும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வடக்குக்கான விஜயத்தின் போது வேலையில்லாத பட்டதாரிகள், இளைஞர், யுவதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள ஆளணி வெற்றிடங்களை பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகளைக் கொண்டு நிரப்புவதற்கான அனுமதி கிடைத்துள்ள போதிலும், தேர்தல் சட்ட விதிமுறைகளுக்கமைய ஆட்சேர்ப்பு நடவடிக்கை தாமதமாகியுள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வடக்கின் உதயம்

## துர்க்கை அம்மன் தேர்



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவ தேர்த்திருவிழா, நேற்று முன்தினம் (14) சனிக்கிழமை இடம் பெற்றது. காலை இடம்பெற்ற பூஜை வழிபாடுகளை தொடர்ந்து, வசந்த மண்டப பூஜை இடம்பெற்று உள் வீதியுலா வந்த துர்க்கை அம்மன், தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

## சந்நிதியான் ஆச்சிரமத்தின் 320 வது ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீடும் உதவித் திட்டங்களும்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் 320வது இதழ் வெளியீடும், பல்வேறு உதவிகள் வழங்கும் நிகழ்வும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர் சிவநாதன் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் திருமுன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இங்கு முதல் நிகழ்வாக பஞ்சபுராணம் ஓதப்பட்டது. அதனை தொடர்ந்து வெளியீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் உறுப்பினரும் ஓய்வு பெற்ற அதிபருமான இரா.சிறிநடராசா நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன் உதவித் திட்டங்களாக, யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, மாணவர்களின் பரீட்சை தேவைகளுக்காக எழுதுபொருள் வகைகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு முல்லை இசைக் கலாலயத்துக்கு பிள்ளையார் சிலைக்கான நிதியாக 25,000 ரூபா வழங்கப்பட்டது. அதேவேளை மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்திற்கு,

மூளாய் பிரதேச பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென 500 கிலோ கிராம் அரிசியும் வழங்கிவைக்கப்பட்டது.

மலையகம் பண்டாரவளை பிரதேசத்தை சேர்ந்த ப/ சௌதம் தமிழ் மகா வித்தியாலயத்தினுடைய மாணவி ஒருவரின் மேற்படிப்புக்காக 50,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டது .

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## யாழ்ப்பாணத்தில் மீலாத் விழா

மீலாத் தின நிகழ்வுகள் இன்று 16.09.2024 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

மாணவச் செல்வங்களின் கிராஅத், இஸ்லாமிய கீதங்கள், சந்தர்ப்ப துஆக்கள், கஷீதா, பேச்சு, கவிதைகள் போன்ற நிகழ்வுகளோடு கண்ணியமிக்க உலமாக்களின் சொற்பொழிவும். மாணவர்கள் மத்தியில் அறிவுக் களஞ்சியமும் இடம்பெற இருக்கிறது.

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பரீட் இக்பால்**

## பூநகரி உதைபந்தாட்ட தொடரை கைப்பற்றிய வலைப்பாடு ஜெகமீட்பர் அணி

**ஓமந்தை விஷேட நிருபர்**

உதைபந்தாட்ட சம்மேளனம், அங்கத்துவ கழகங்கள் பங்குபற்றும் பூநகரி லீக் கிண்ணம்2024 உதைபந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் (14/09) பூநகரி கிராஞ்சி செந்தாரகை விளையாட்டு மைதானத்தில் கிருபா பிரைவேட் லிமிட்டட் நிதி அனுசரணையுடன் மிகவும் விறுவிறுப்பான போட்டியாக இடம்பெற்றிருந்தது.

பூநகரி உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ராஜ்குமார் தலைமையில் ஆரம்பமாகிய குறித்த போட்டியின், இறுதி ஆட்டத்தில் வலைப்பாடு மெசியா, வலைப்பாடு ஜெகமீட்பர் அணியினர் மோதிக்கொண்டனர்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் ஆட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல்கள் எதுவும் பெறாத நிலையில் சமநிலை தவிர்ப்பிற்காக சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டு 04 : 03 என்ற கோல்கள் கணக்கில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணி வெற்றிபெற்று, பூநகரி லீக் கிண்ணம் 2024இன் Champion ஆகியிருந்தது.

குறித்த உதைபந்தாட்ட நிகழ்வில் பிரதமவிருந்தினராக மன்னார் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரும் முன்னாள் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவருமான ஞானப்பிரகாசம் அன்ரனி டெவின்சன் (ஜெரால்ட்) கலந்துகொண்டார்.



## மலைச்சாரல்

## அமைச்சர் அலி சப்ரி தலைமையில் "இயலும் ஸ்ரீலங்கா" மாபெரும் கூட்டம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியினை உறுதிப்படுத்தும் நோக்கத்தில் இயலும் ஸ்ரீலங்கா மாபெரும் பொதுக்கூட்டம் இம்மாதம் 17ஆம் தேதி காலை 9 மணிக்கு பலாங்கொடை மிரிஸ்வத்த பகுதியில் அமைந்துள்ள ரோயல் பெலஸ் வைபவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த பொதுக்கூட்டம், நீதி மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியின் பங்களிப்பில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவள, பலாங்கொடை ஐக்கிய தேசியக் கட்சி தொகுதி அமைப்பாளர் லசந்த, சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க, மாகாண சபை உள்ளூராட்சி சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, வனப்பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாரச்சி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் வெற்றியை உறுதி செய்ய அனைவரும் தங்களது பங்களிப்பினை இக்கூட்டத்திற்கு வருகை தந்து வழங்குமாறு ஏற்பாட்டு குழுவினர் வேண்டியுள்ளனர்.

## கண்டியில் இளம் அரசியல்வாதி வஸீர் முக்தார் தலைமையில் முக்கியமான பிரபலங்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவு

**மாவத்தகம நிருபர்**

கண்டியில் பிரபல்யமான இளம் அரசியல்வாதி வஸீர் முக்தார் தலைமையில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் கண்டியிலுள்ள முக்கிய பிரமுகர்கள் இணைந்துள்ளமை குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம் எனவும் அதற்காக நாம் சஜித் பிரேமதாச அவர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனவும் கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டி ஒக்ரோ ஹோட்டலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி இலங்கையின் எல்லா மக்களுடைய தேவைகளையும் அங்கீகரிக்கின்ற கட்சியாகும். சிங்கள பௌத்த சமய கலாசார உரிமைகளைப் பாதுகாப்பது போன்று எல்லா இனத்தவர்களையும் சமமான முறையில் முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவ மக்களுடைய உரிமைகளையும் மதித்து பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் கட்சியாகும்.





சஜித் பிரேமதாச அவர்கள் கடந்த கொரோனா காலத்தில் உயிரிழந்த முஸ்லிம்களுடைய உடல்களை தகனம் செய்யும் விடயத்தில் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் பரந்த மட்டத்தில் அவர்களுடைய உடல்கள் அடக்கம் செய்ய வேண்டும் என்று உரையாற்றியவர். இதுதான் கண்டி அரசர்களுடைய முன்மாதிரியான விடயங்களும் ஆகும். கண்டியை ஆட்சி செய்த சகல மன்னர்களுடைய செயற்பாடுகள் இவைகளே. சகல இனங்களையும் சமமான முறையில் கௌரவித்து வழி நடத்தினார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். யட்டிநுவர பிரதேச முன்னாள் உறுப்பினர் வஸீர் கருத்து தெரிவிக்கும் போது

ஐக்கிய மக்கள் சக்தியினை ஆதரிப்பதற்கான முக்கிய காரணம் எமது நாட்டையும் மக்களையும் மையமாக வைத்துதே இணைந்து கொண்டேன் ஒரு சுபீட்சமான நாடாக மாற்றியமைக்கக் கூடிய உறுதியான சிறந்த கொள்கைத் திட்டங்கள் ஐக்கிய மக்கள் சக்தியிடமே அமைந்துள்ளன.

ஆதனால்தான் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச அவர்களின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக நாங்கள் இணைந்துள்ளோம் என்று தெரிவித்தார்.

இதில், கண்டியிலுள்ள வர்த்தகப் பிரமுகர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சமூகப் பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

**இக்பால் அலி**





எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவின் இயலும் ஸ்ரீலங்கா தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் (14) மாத்தளை அம்பஹு பஸ் தரிப்பு நிலையத்தருகில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம் **(மாத்தளை சுழற்சி நிருபர்)**

## கனிஷ்ட பிரிவு ரக்பி சுற்றுப்போட்டியில் மடவளை மதீனா 'ஷீல்ட் சாம்பியன்'

**அக்குறணை குறூப் நிருபர்**

மத்திய மாகாண ரக்பி சம்மேளனம் நடாத்திய கனிஷ்ட பிரிவு ரக்பி சுற்றுப்போட்டியில் மடவளை மதீனா தேசிய பாடசாலை அணி, கேடயத்திற்கான போட்டியில் 'ஷீல்ட் சாம்பியன்' ஆகத் தெரிவானது. கண்டி பல்லேகல திரித்துவக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி இடம் பெற்றது.

கிண்ணம், பதக்கம், கேடயம் (ஷீல்ட்), தட்டம் ஆகிய நான்கு பிரிவுகளில் இப்போட்டியின் இறுதிப் போட்டிகள் இடம் பெற்றன. இச் சுற்றுப் போட்டியில் ஷீல்ட் பிரிவு அரை இறுதிப் போட்டியில் மடவளை மதீனா தேசிய பாடசாலை அணி கண்டி, தலாதுஓய மத்திய கல்லூரியுடன் மோதி 31-7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இறுதிப்போட்டியில் கண்டி, நுகவெல மத்திய கல்லூரியுடன் மோதிய மடவளை மதீனா மத்திய கல்லூரி கனிஷ்ட அணி 29-7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இச்சுற்றுப்போட்டியின் ஷீல்ட் சாம்பியனாக தெரிவானது.

மதீனா ரக்பி அணிக்கு, கண்டி விளையாட்டுக்கழக முன்னாள் ரக்பி வீரரான, மடவளையை சேர்ந்த நஸ்ரி முகம்மத் பயிற்சியாளராக இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மலையக மக்கள் முன்னணி, மலையக இளைஞர் முன்னணி இணைந்து ஏற்பாடு செய்த இளைஞர் மாநாடு





மலையக மக்கள் முன்னணி மலையக இளைஞர் முன்னணி இணைந்து ஏற்பாடு செய்த இளைஞர் மாநாடு நேற்று முன்தினம் சனிக்கிழமை (14.09.2024) ஹட்டன் டி.கே.டபிள்யு மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் மலையக இளைஞர் முன்னணியின் தலைவருமான இராதாகிருஸ்ணன் ராஜாராம் தலைமையில், சிறப்பு விருந்தினராக டாக்டர் அப்துல் கலாம் பேரனும் சர்வதேச அப்துல் கலாம் அறக்கட்டளையின் ஸ்தாபக இணைத்தலைவருமான டாக்டர் ஏ.பி.ஜே.எம். ஜே சேக் சலீம், விசேட அதிதியாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன், தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் இதயக்கனி சஞ்சிகையின் வெளியீட்டாளரும் பிரதம ஆசிரியருமான எஸ்.விஜயன், மற்றும் மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் பேராசிரியர் சங்கரன் விஜயசந்திரன் மலையக தொழிலாளர் முன்னணியின் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் பொருளாளர் தாழமுத்து சுதாகரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், பெருந்திரளான இளைஞர் யுவதிகளும் கலந்து கொண்டனர்.

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட வைத்தியசாலை மாத்தளை

### மருத்துவ உபகரணங்கங்களை கொள்வனவு செய்தல்

மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் வார்ட்டுகள் மற்றும் அலகுகளுக்கு தேவையான கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்து கொள்வதற்காக தகைமையுள்ள முகவர் நிறுவனங்களிடமிருந்து பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் 2024.10.09 அன்று மு.ப.10.30 வரை கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | உருப்படி | தேவையான எண்ணிக்கை | ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | ECT Machine | 01 | MT/DGH/F/9/41 | 2,000.00 |

02. 2024.09.19 முதல் 2024.10.08 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 - பி.ப.2.00 இற்கிடைப்பட்ட காலத்தில் மற்றும் 2024.10.09 அன்று மு.ப.10.00 வரை மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப்பிரிவில் இதற்கான கேள்விப்படிவத்தொகுதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக தகைமைகளை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள், மற்றும் மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தை மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப்பிரிவில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. முத்திரையிடப்பட்டு இரண்டு பிரதிகளில் (02) தயாரிக்கப்பட்ட கேள்விகள், 2024.10.09 அன்று மு.ப.10.30 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகளை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "QUOTATION FOR ECT MACHINE" எனக் குறிப்பிடல் வேண்டும்.

04. கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அதாவது, 2024.10.09 அன்று மு.ப.10.30 இற்கு வைத்தியசாலையின் அலுவலகத்தில் அவை திறக்கப்படுவதுடன், கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளித்திருக்கலாம்.

06. கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் இலவசமாக பரிசீலனை செய்து கொள்ளலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிராந்திய பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மாத்தளை**
**2024.09.13**

# விலைமனுக்கான அழைப்பு

**சுகாதார அமைச்சு**

**மாவட்ட பொது வைத்தியசாலை - சிலாபம்**

### சிலாபம் - மாவட்ட பொது வைத்தியசாலையில் HHIMS இற்காக வலையமைப்பு மற்றும் கணினி வன்பொருளின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் உருவமைப்பு

**IFB NO: DGH/CHI/F11/HHIMS/2024**

1. கீழ் விபரிக்கப்பட்ட மேலுள்ள வேலைக்காக பொருத்தமாக மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து பிராந்திய பெறுகைக் குழு – தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| | Item No | Goods/Services | Quantity | Bid Validity days |
|---|---|---|---|---|
| LOT 01 | 1.1 | LAYER 2 NETWORK **POE** SWITCH - 16 PORT WITH SFP (2 X 1 Gbps / 1 populated) | 1 | 91 Days |
| | 1.2 | FOUR-CORE INDOOR FIBER OPTIC CABLE WITH CONNECTION ACCESSORIES(M) | 70 | |
| | 1.3 | RACK-MOUNTABLE FIBER PATCH PANEL IU WITH KEYSTONE | 2 | |
| | 1.4 | FIBER PATCH CORD | 2 | |
| | 1.5 | LC- FIBER CABLE MANAGEMENT PANEL 1U | 2 | |
| | 1.6 | DATA POINTS (INCLUDING CAT6 FACEPLATE SURFACE MOUNTING BOXES, KEYSTONES) | 8 | |
| | 1.7 | 16 PORT UTP PATCH PANEL WITH KEYSTONE JACKS CAT 6 1U | 2 | |
| | 1.8 | CAT6 UTP PATCH CORD 0.5M | 32 | |
| | 1.9 | CAT6 UTP PATCH CORD 3.0M | 7 | |
| | 1.10 | UTP CABLE MANAGEMENT PANEL 1U | 2 | |
| | 1.11 | CAT6 UTP INSTALLATION CABLE (LENGTH INCLUDES CABLING FOR 8 DP+4 AP) | 600M (APPROX) | |
| | 1.12 | 9 U WALL MOUNTABLE CABINETS | 1 | |
| | 1.13 | 1.2 KVA LINE INTERACTIVE UPS | 1 | |
| | 1.14 | DATA CABLING & CASING WITH FITTING | LOT | |
| | 1.15 | INDOOR WI-FI ACCESS POINT | 4 | |
| | 1.16 | LAYER 3 MANAGED NETWORK POE SWITCH- 16 PORT WITH SFP (4 X 1 Gbps / 2 populated) | 1 | |
| LOT 02 | 2.1 | LAPTOP | 14 | 91 Days |
| | 2.2 | DESKTOP | 2 | |
| | 2.3 | OMNIDIRECTIONAL BARCODE READER ID | 5 | |
| | 2.4 | MONOCROME INK TANK PRINTER | 5 | |
| LOT 03 | 3.1 | RACK SERVER | 1 | 91 Days |
| | 3.2 | RACK MOUNT ONLINE UPS-6KVA | 1 | |
| | 3.3 | 25U FREE STANDING SERVER RACK | 1 | |
| LOT 04 | 4.1 | **80 MM x 80 MM THERMAL PAPER ROLL** | 20 | 91 Days |
| | 4.2 | 75 MM x 50 MM, IUP THERMAL TRANSFER BARCODE STICKER LABEL ROLL (1000 PCS, WHITE) | 10 | |
| | 4.3 | 80 MM x 300 M WAX INK OUTSIDE RIBBON ROLL 1 CORE (BLACK) | 5 | |
| | 4.4 | **80 GSM, A4 PAPER BUNDLES (500 SHEETS PER REAM)** | 20 | |
| | 4.5 | 50MM X 25MM, BARCODE LABEL STICKER ROLL | 6 | |
| | 4.6 | 60 MM x 300 M WAX INK OUTSIDE RIBBON ROLL | 4 | |

விலைமனுதாரர் தேவையான LOT இற்கு வெவ்வேறாக விலை மற்றும் விலைமனு பிணையுடன் கூறுவிலையிடல் வேண்டும்.

2. விசேட தேவைகள்: உற்பத்தியாளர் அல்லது வழங்குநர் உற்பத்தியாளர் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தயாரிப்பின் விலைமனு மற்றும் வழங்கலுக்கு உற்பத்தியாளரின் அங்கீகாரத்தை பெறுதல் வேண்டும்.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. தகுதி பெற்ற ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் சிலாபம், மாவட்ட பொது வைத்தியசாலை, கணக்காளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ.பே.-032-2222261)(மின்னஞ்சல்: dhcac321@mail.com) என்பதோடு வேலை நாட்களில் சிலாபம், மாவட்ட பொது வைத்தியசாலை கணக்குப் பிரிவில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.30 வரை அலுவலக நேரத்தில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
5. நிறுவனமானது 1987 இன் (13) ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
6. தேவையான தகைமையில் உள்ளடங்குவது: விலைமனுதாரர் கடந்த ஐந்து (5) ஆண்டுகளுக்காக கணினிகளை வழங்கல், விநியோகம், நிறுவுதல், உருவமைப்பு, நன்னிலைப்படுத்தல் மற்றும் பராமரிப்பு வர்த்தகத்தில் இருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் உற்பத்தியாளரினால் உற்பத்தி செய்யப்பட்ட தயாரிப்பின் விலைமனு மற்றும் வழங்கலுக்கு உற்பத்தியாளரின் அங்கீகாரத்தைப் பெற்ற உற்பத்தியாளர் அல்லது வழங்குநராக இருத்தல் வேண்டும். வழங்கப்படும் தகுதியான உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கு முன்னுரிமை வரம்பு ஒன்று பயன்படுத்தப்படமாட்டாது.
7. மீளளிக்கப்படாத கட்டணமான இலங்கை ரூபா இரண்டாயிரத்தை (ரூபா 2,000.00) செலுத்தி வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.30 வரை 2024.09.16 ஆம் திகதி தொடக்கம் 2024.10.07 ஆம் திகதி வரை சிலாபம், மா.பொ.வை., பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணமானது சிலாபம், மாவட்ட பொது வைத்தியசாலை, பணிப்பாளரின் பெயரில் ரொக்கப்பணம் மூலம் செலுத்தப்படுதல் வேண்டும். விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு சிலாபம், மா.பொ.வை. கேட்போர்கூடத்தில் 2024.10.01 ஆம் திகதி மு.ப. 10.30க்கு இடம்பெறும்.
8. விலைமனுக்களை 2024.10.08 ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம் என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2024.10.08 ஆம் திகதி சிலாபம், மா.பொ. வை., கணக்காளரின் அலுவலகத்தில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து மொத்த விலைமனு பெறுமதியின் 2% இன் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். மேலுள்ள அட்டவணையில் விலைமனு செல்லுபடிக் காலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பெறுகைக் குழு தலைவர்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம்.**

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண சபை

### ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம்

ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வீதி அபிவிருத்தி அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் 2024ம் ஆண்டிற்காக மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் தார் கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து போட்டி கேள்விகோரல் மூலம் வழங்குநர்களை தேர்ந்தெடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் தார் வகைகள், கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் இடங்களுக்கு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் தார் வகைகள், கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் இடங்களுக்கு வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இணைப்பு இலக்கம் | கொள்வனவு செய்யும் மூலப் பொருட்கள் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு (காசாக) (ரூ) | கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) | அளவு (திண்ம தார் பெரல் 180L) |
|---|---|---|---|---|
| 2024/Bitumen/ 03 | 80/100 Straight Run Bitumen விசேட திண்மத்தார் (180L) | 150,000 | 5,000.00 | 1000 |

**கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் - 2024.09.18 முதல் 2024.10.09 பி.ப. 2.30 வரை**
**கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம் - 2024.10.10ம் திகதி பி.ப. 2.30 வரை**
**கேள்விப் பத்திரங்கள் திறத்தல் - 2024.10.10 பி.ப. 2.30**

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு குறித்த கேள்விப் படிவக் கட்டணத்தை செலுத்தி கேள்விப் படிவங்களை வீதி அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன் அதனோடு சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் அறிவுருத்தல்களை கீழ்க்காணும் தொ.பே இலக்கங்களை அழைத்து பெற்றுக்கொள்ளலாம். ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் http://roaddept.up.gov.lk குறித்த பெறுகை அறிவித்தல் பரிசுரிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறிவிக்கிறேன்.

**தொ.பே. இலக்கம் - 055-2229626 / 055-2225570 / வீதி அபிவிருத்தி திணைக்களம்**
**இணையதளம் - roaddept.up.gov.lk**

**தலைவர்,**
**அமைச்சு / திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம்,**
**இரண்டாம் மாடி**
**ஊவா மாகாண சபைக் கட்டிடத்தொகுதி,**
**பதுளை.**
**2024.09.12**

**THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA**

## MINISTRY OF IRRIGATION

## INVITATION FOR BIDS (IFB)

**Climate Resilience Multi-Phase Programmatic Approach (L.N.: 8996-LK)**

## NATIONAL COMPETITIVE BIDDING

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received financing from the International Bank for Reconstruction and Development (IBRD – World Bank) to meet the cost of Climate Resilience Multi-Phase Programmatic Approach (CResMPA) which is implemented under the Ministry of Irrigation. The Project Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the works as detailed in the table below and intends to apply part of the proceeds for the payments of contracts awarded under the CResMPA as detailed in the table below.
2. Qualification requirements: The Bidder shall furnish documentary evidence to demonstrate that following requirements are met by the bidders.
   - General Experience - Experience under civil work contracts in the role of contractor, sub contractor, or civil work contract supervision consultant at least for the last six (06) years starting from 2019 to 2024.
   - Specific Experience - Participation as a contractor, management contractor, or subcontractor, in at least one (01) civil work contract similar to the description of the package given below within the last six (06) years, that has been successfully and substantially completed.
3. Bidding will be conducted through the NATIONAL COMPETITIVE BIDDING procedure as specified in the *World Bank's Procurement Regulation for IPF Borrowers: Procurement of Goods, Works, Non-Consulting and Consulting Services, 4th Edition, November 2020,* and is open to all eligible bidders as defined in the Procurement Guidelines. In addition, please refer to paragraphs 1.6 and 1.7 setting forth the World Bank's policy on conflict of interest.
4. A complete set of Bidding Documents in English (two copies) may be purchased during office hours (from 9.30hrs to 14.30hrs) *from* **16th September 2024 to 07th October 2024** from the Project Coordinating Team (PCT), No.11, Jawatta Road, Colombo 05 for all packages listed in the table.

| Contract No: | Description of Work | CIDA (Minimum Grade) under Building Construction | Pre-Bid Meeting Schedule | Non-Refundable Fee (Rs.) | Amount of Bid Security (Rs.) |
|---|---|---|---|---|---|
| SLMOI/CRES/ ID/W/NCB/31 | Renovation of Room No. 417 at 4th Floor in the Irrigation Department - Head Office, Colombo 05. | C8 or above | 26th September 2024 at 10.30 a.m. | 3,000.00 | 48,000.00 |
| SLMOI/CRES/ PCT/W/NCB/37 | Improvements to the existing office building of CResMPA-PCT and Rehabilitation works of Ministry of Irrigation, Colombo 05. | C5 or above | 27th September 2024 at 10.30 a.m. | 10,000.00 | 351,000.00 |

5. Interested eligible bidders may inspect the Bidding Document free of charge before collection if desired and obtain further information from the **Project Director, T.P: 011-2507855/ 0112058452.**
6. The pre-bid meeting will be held in the Conference Room, Climate Resilience Multi-Phase Programmatic Approach, No.11, Jawatta Road, Colombo 05, and invite all bidders who intend to attend the pre-bid meeting on the scheduled date & time as per the above table.

   If bidders wish to inspect the site before the pre-bid meeting, bidders may get the permission from relevant PCT and Irrigation Department to inspect the proposed site. The date & time for the site visit are given in the relevant bidding documents.
7. Bids must be delivered to the Tender Box kept in the room of the Procurement Branch (CResMPA) or sent via Registered Post on or before the submission date and time to the following address. The schedule of submission deadlines for each package is shown in the table above. The late submitted bids will be rejected.Bids will be opened immediately after the bid closing in the presence of the bidders or their representatives who chose to attend.

   Please write **"Bid for [Contract Number]"**on top of the left-hand corner of the envelope.
8. Bidders are free to submit bids for two packages or selected one package in the list. However, in the event of qualifying for multiple packages, the Employer will decide the number of packages awarded to a single bidder considering the most economical benefits to the Employer.

**Chairman,**
**Project Procurement Committee**
**Climate Resilience Multi-Phase Programmatic Approach**
**No. 11, Jawatta Road,**
**Colombo 05.**
**T.P.: 011 2507855 / 011 2058452**

Date:16/09/2024

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz it's what you want Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(4) ஆம் பிரிவிற்கிணங்க கம்பனியின் நிலபரத்தின் மாற்றத்தின் பிரகாரம் கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் பிரகாரம் நாம் இவ்வறிவித்தலை வழங்குகின்றோம்.

| | |
|---|---|
| கம்பனியின் முன்னைய பெயர் | : கிறீன் கோட் அர்க்கிட்டேக்ட்ஸ் எல்டிடி |
| கம்பனியின் பதிவிலக்கம் | : பிவி00271985 |
| பதிவு முகவரி | : இல.33-6/4 (யூனிட் 5A), பலபொகுண வீதி, கொழும்பு - 05. |
| கம்பனியின் புதிய பெயர் | : கிறீன் கோட் அர்க்கிட்டேக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் |

கல்ரூப்கோ மேனேஜ்மென்ட் செர்விக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

16 ஆகஸ்ட் 2024

## திருத்தம் பற்றிய அறவித்தல்

### இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

2024.09.05ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் (13ஆம் பக்கத்தில்) பிரசுரமான மேற்படி தலைப்பிலான விளம்பரத்தின் 4ஆம் பந்தியில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும் திகதி 2024.09.29ஆம் திகதி எனத் தவறுதலாக பிரசுரமாகியுள்ளது. எனவே இது 2024.09.26ஆம் திகதியென திருத்தப்படல் வேண்டும்.
விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை.**
2024.09.07

## சனாதிபதி தேர்தல் – 21.09.2024

### தனியார் துறையைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களுக்கும் வாக்குகளை வழங்க உதவும் வகையில் விசேட விடுமுறையை வழங்குதல்

தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் இல. PRE/2024/65 மற்றும் 2024.09.04 ஆந் திகதிய ஊடகச் செய்தியின் பிரகாரம், அனைத்து தனியார் துறையைச் சேர்ந்த சகல ஊழியர்களுக்கும் அவர்கள் தொழில் புரியும் இடத்திலிருந்து சனாதிபதி தேர்தலின் வாக்கு வழங்கும் நிலையத்திற்கு தங்கள் வாக்குகளை வழங்க சென்று மீண்டும் தொழில் புரியும் இடத்திற்கு வருவதற்கு உதவும் வகையில், தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் சிபாரிசுகளுடன் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்ட தூரம் மற்றும் காலத்திற்கு அமைய அவர்கள் தொழில் புரியும் இடத்திலிருந்து அவர்களது வாக்கு வழங்கும் நிலையத்திற்குமிடையில் உள்ள தூரத்தைக் கருத்தில் கொண்டு சம்பளத்துடனான விசேட விடுமுறையை வழங்குமாறு நாட்டிலுள்ள சகல தனியார் துறையைச் சேர்ந்த தொழில் தருநர்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| தொழில் புரியுமிடத்திற்கும் வாக்கு வழங்கும் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம். | தொழில் புரியுமிடத்திற்கும் வாக்கு வழங்கும் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம். |
|---|---|
| 40 கி. மீ. அல்லது அதிலும் குறைவான தூரம் ஆயின் | அரை நாள் (1/2) |
| 40 கி. மீ. இற்கும் 100 கி.மீ.இற்கும் இடைப்பட்ட தூரம் ஆயின் | ஒரு நாள் (1) |
| 100 கி. மீ இற்கும் 150 கி.மீ இற்கும் இடைப்பட்ட தூரம் ஆயின் | ஒன்றரை நாள் ($1\frac{1}{2}$) |
| 150 கி. மீ. இற்கு மேற்பட்ட தூரம் ஆயின் | இரண்டு நாட்கள் (2) |

மேலே குறிப்பிடப்பட்ட கால அளவு ஆகக்குறைந்தது ஆகும் என்பதுடன் நாட்டின் சில தொழில் புரியும் இடத்திலிருந்து வாக்குகளை வழங்கும் நிலையத்திற்குச் சென்று திரும்பவும் தொழில் புரியுமிடத்திற்கு வந்து சேரவேண்டிய கால அளவு மேற்குறிப்பிட்ட கால அளவுடன் போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் மூன்று நாட்கள் (03) தேவைப்படுமாயின் தொழில்தருநர்கள் அவ் ஊழியர்களுக்கு மூன்று நாட்கள் (03) விடுமுறை வழங்குதல் வேண்டும்.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் மேலுள்ள சிபாரிசுகளுக்கு அமைய, தனியார் துறை ஊழியர்கள் தமது வாக்குகளை சனாதிபதி தேர்தலில் வழங்குவதற்கு விசேட விடுமுறை வழங்குமாறு அனைத்து தொழில்தருநர்களையும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆர். பி. ஏ. விமலவீர**
**செயலாளர்**
**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**

**“மெஹெவரபியச”**
**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**
**கொழும்பு 05.**
**2024 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 13 ஆம் திகதி**

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2024ஆம் ஆண்டு யூலை மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**எச்.கே.கே.ஏ.ஜயசுந்தர**
**தொழில் ஆணையாளர் நாயகம்**

தொழில் திணைக்களம்
கொழும்பு - 05

2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி

**கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தி தொழில்** } **வேலையாள் ஒரு நாளுக்கு ரூ.1882.69**

✷ இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு, செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு, செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில்தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

## வரையறுக்கப்பட்ட பிங்கிரிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### போவத்த – பிங்கிரிய

### அங்கத்தவர் பெயர் பட்டியலைக் காட்சிப்படுத்தல்

வரையறுக்கப்பட்ட பிங்கிரிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 2024.06.30ம் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்ட அங்கத்தவர் பெயர் பட்டியல் 2024.09.30ம் திகதி வரை வ/ப பிங்கிரிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கோப்சிட்டி / பிரதேச வர்த்தக அலகுகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என அறியத்தருகிறோம்.

அங்கு அங்கத்துவத்தில் ஏதேனும் திருத்தங்கள் இரப்பின் அவற்றை 2024.09.30ம் திகதி அல்லது அதற்கு முன்பு செயலாளர், வரையறுக்கப்பட்ட பிங்கிரிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். போவத்த, பிங்கிரிய என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

**செயலாளர்**

**தொ.பே இல.: 077-2707021**

## விண்ணப்ப அறிவிப்பு

### கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள வேல்ஸ் மாவட்ட சார்பதிவாளர் நாரத விஜயதிலக்கவுக்கு உயர்நீதிமன்ற நீதியரசர் வழங்கிய நன்னடத்தைக்கு மறு சீல் வைப்பதற்காக சிவில் நடைமுறைச் சட்டத்தின் (Cap 101) பிரிவு 554 (U) இன் கீழ் விண்ணப்பம் செய்த விவகாரத்தில் எண். 212, கிரீன்ஹெவன் டிரைவ் லண்டன் SE 28FX யுனைடெட் கிங்டம் லீலா சாவித்திரி பிராடியின் கடைசி உயில் மற்றும் டெஸ்டெமென்ட் பிளாட் 39 De பியூவோயர் பிளேஸ் 3 டோட்டன்ஹாம் ரோடு ஹேக்னி லண்டன் NI 4EP யுனைடெட் கிங்டம்.

**வழக்கு எண். DDS - 304/24**
**இயற்கை சாசனம்** **இறந்தவர்**

சந்திரகுப்த விஜயதிலகே மாற்றுப்பெயர் சந்திர விஜயதிலக
இல. 79-2/3, ஹைட் பார்க், கோனர் கொழும்பு - 02

**மனுதாரர்**

இது வெளியிடப்பட்ட நாளிலிருந்து இருபத்தி எட்டு (28) நாட்கள் காலாவதியான பிறகு, சீல் வைப்பதற்காக சிவில் நடைமுறைச் சட்டத்தின் (Cap 101) பிரிவு 554 (U) இன் கீழ் விண்ணப்பம் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. லீலா சாவித்ரி பிராடியின் கடைசி உயில் மற்றும் சாட்சியத்தின் சான்றளிக்கப்பட்ட நகல், பிளாட் 39 டி பியூவாயர் பிளேஸ் 3 டோட்டன்ஹாம் ரோடு ஹேக்னி லண்டன் NI 4EP யுனைடெட் கிங்டம் இறந்தவர், உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது - யுனைடெட் கிங்டமில் உள்ள வேல்ஸின் மாவட்ட ஆய்வுப் பதிவேடு 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் தேதி 212 இன் நாரதா விஜயதிலக்க, கிரீன்ஹேவன் டிரைவ் லண்டன் SE28X யுனைடெட் கிங்டம்

**செப்டம்பர் மாதம் 6ம் திகதி 2024ம் ஆண்டு**
**கொழும்பில்**

**ஏ.ஏ.ஆர்.நாலக சில்வா**
**வழக்கறிஞர் மற்றும் நோட்டரி பொது**
**34 - 1/169, வழக்கறிஞர்கள் அலுவலக வளாகம்**
**கொழும்பு -12,**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் | இடைநிகழ்வுகள் நீங்கலாக பொறியியலாளரின் மதிப்பீடு (மில் ரூபா) | CIDA தரம் | கேள்விப் பிணை (ரூ) | காலப்பகுதி (மாதங்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/CE(J)/ RMTF/2024/06 | Asphalt (wearing) laying works for Valukkaiyaru Punguduthivu Kurikadduwan Road 16+000-19+000 km | 7.546 | சி7 மற்றும் சி6 | 130,000.00 | 91 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024 செப்டெம்பர் 16 ஆம் திகதியிலிருந்து 2024 ஒக்டோபர் 03 ஆம் திகதி வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### தேசிய வைத்தியசாலை – காலி

கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண/பழுதுபார்த்தல் வேலைக்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை காலி தேசிய வைத்தியசாலை பணிப்பாளர் அழைக்கின்றார்.

| கேள்வி இல. | வேலை அம்சம் | கேள்விதாரரின் தகைமை தேவைப்பாடு | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | செல்லுபடியாகும் கேள்விப் பிணை | ஆடிப்படை ஆகுசெலவு மதிப்பீடு (மில்லியனில்) |
|---|---|---|---|---|---|
| 1. | 15/36 விடுதிகளின் புதுப்பித்தல் | சி-6 மற்றும் சி7 | 3,500.00 | 67,000.00 | 6.7 |
| 2. | 24/36 விடுதிகளின் புதுப்பித்தல் | சி-6 மற்றும் சி7 | 3,500.00 | 78,000.00 | 7.8 |
| 3. | 02/35 விடுதிகளின் புதுப்பித்தல் | சி-6 மற்றும் சி7 | 3,500.00 | 82,000.00 | 8.2 |
| 4. | 11/36 விடுதிகளின் புதுப்பித்தல் | சி-6 மற்றும் சி7 | 3,500.00 | 80,000.00 | 8.0 |
| 5. | மெலிபன் வைத்தியசாலையின் முதலாம் மாடியின் மெருகூட்டல் வேலை | சி-5 மற்றும் சி6 | 3,500.00 | 250,000.00 | 25.0 |
| 6. | மெலிபன் வைத்தியசாலையின் இரண்டாம் மாடியின் மெருகூட்டல் வேலை | சி-5 மற்றும் சி6 | 3,500.00 | 243,000.00 | 24.3 |
| 7. | Renovation work of Theater A & B | சி-5 மற்றும் சி6 | 3,500.00 | 202,000.00 | 20.2 |

1. காலி வைத்தியசாலை அலுவலகத்தினால் வழங்கப்பட்ட படிவங்களில் மாத்திரமே விலைமனுவானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. 2024.10.16 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கபடாத கேள்விக் கட்டணத்தை செலுத்திய பின்னர் வைத்தியசாலை அலுவலகத்திலிருந்து விமைனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
3. 2024.10.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு காலி தேசிய வைத்தியசாலை பணிப்பாளரின் அலுவலகத்தில் விமைனுக்கள் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் பணிப்பாளர், தேசிய வைத்தியசாலை, காலி என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் திறத்தலின் போது பங்குபற்றலாம்.
4. உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் பெயர் மற்றும் கேள்வி இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து கேள்விகளையும் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் அல்லது கேள்வியை கையளித்தல் ஆகியன தொடர்பான பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
**தொடர்பு இல.: 091-2232250, 091-2232176**

**பணிப்பாளர்,**
**தேசிய வைத்தியசாலை,**
**காலி.**
**16.09.2024**

www.adz.lk
it's what you want

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### பெறுகை அறிவித்தல்

### தேசிய மனநல நிறுவனம் - முல்லேரியா புதிய நகரம்

### விலைக்கோரலுக்கான அழைப்பு

01. தேசிய மனநல நிறுவனத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவரினால் பின்வரும் உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக முன் தகைமைகளைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | உருப்படி | அலகு | அளவு |
|---|---|---|---|
| 01 | காரிக்கன் துணி (60 அங்குலம் அகலம்) | மீற்றர் | 5740 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைக்கோரல் இடம்பெறும்.
03. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணங்களை 2024.10.08ஆம் திகதி வரையான அரச அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை முல்லேரியா புதிய நகரம், தேசிய மனநல நிறுவனத்தின் கணக்கிடல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களை 2024.10.08ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரைக்கிடையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, தேசிய மனநல நிறுவனம் எனும் பெயரில் **குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் செய்யப்படும் எழுத்து மூலமான வேண்டுகோள்** மற்றும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை (ரூ. 1,000.00) திணைக்களத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.
05. விலைக்கோரல் பிணை முறியை விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் திகதி வரையில் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் “காரிக்கன் துணி கொள்வனவு செய்தல்'' எனவும் மற்றும் பெறுகை இலக்கத்தையும் குறிப்பிட்டு 2024.10.09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அன்றைய தினமே (2024.10.09) பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படும் என்பதுடன் இதில் நீங்கள் அல்லது உங்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
07. விலைக்கோரல் படிவங்கள் தொடர்பிலான மேலதிக தகவல்களை 0112-578234 (நீடிப்பு 406 / 404) எனும் தொலைபேசி இலக்கத்தில் தேசிய மனநல நிறுவனத்தின் கணக்காளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் படிவங்கள் தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது விலைக்கோரல் மாதிரிகளில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத இந்தப் பெறுகை விடயங்களுக்கு இயைபான எந்தவொரு விடயம் தொடர்பில் தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தை தேசிய மனநல நிறுவனத்தின் பணிப்பாளர் கொண்டுள்ளார்.
08. விலைமனுக்களைத் தயாரித்தல் தொடர்பில் ஏற்படும் எந்தவொரு செலவுகளுக்காகவும் பெறுகைக் குழுவின் தலைவர் பொறுப்புகூற மாட்டார்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய மனநல நிறுவனம்,**
**முல்லேரியா புதிய நகரம்.**

OBSERVER adz
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# பெறுகை அறிவித்தல்

## பூஜாப்பிட்டிய பிரதேச சபை

### கடை அறைகளைக் குத்தகைக்கு விடல்

பூஜாப்பிட்டிய பிரதேச சபைக்குச் சொந்தமான, வர்த்தக கட்டிடத்தொகுதிகளில் கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. இதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் கேள்விதாரர்கள் பூஜாப்பிட்டிய பிரதேச சபைக்கு ரூ. 500.00 தொகையைச் செலுத்தி நிபந்தனையுடனான கேள்விப் பத்திரமொன்றை 2024.09.18 முதல் 2024.10.18 மு.ப. 10.00 வரை வேலை நாட்களில் சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

02. கீழ்க்காணும் தொடர் இலக்கத்தின் கீழ் உள்ள கடை அறைகளுக்காக விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது அக்கடை அறைகள் ஒன்றிற்கு மேல் விலைமனுக்களை சமர்ப்பிப்பதாயின் வேறுவேறான விண்ணப்பத்தின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்கள் உள்ளிடும் மேற்பக்க உறையில் இடதுபக்க மேல் மூலையில் சமர்ப்பிக்கும் கடை அறையின் தொடர் இலக்கம் மற்றும் குறித்த கடை அறையினை குறிப்பிட்டு விலைமனுக்களை 2024.10.18 பி.ப. 12.15 இற்கு முன் செயலாளர், பூஜாப்பிட்டிய பிரதேச சபைக்கு மீளளிக்கப்படும் ரூ. 3000.00 வைப்புத் தொகையை அலுவலகத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுடன் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அல்லது 2024.10.18 பி.ப. 12.30 இற்கு முன் கையோடு கொண்டுவந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்காக ஒப்படைத்தல் வேண்டும்.

03. கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன், அதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு சமுகமளிக்கலாம். கேள்விகளை ஏற்றுக் கொள்ளல், நிராகரித்தல் மற்றும் இரத்துச் செய்யும் அதிகாரம் பூஜாப்பிட்டிய பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

மேலதிக விசாரணைகள் : 081 - 2302682

| தொடர் இலக்கம் | சொத்து விபரம் | குறைந்தபட்ச கேள்வி (மாதாந்த வாடகை தொகை ரூ.) |
|---|---|---|
| 01 | பூஜாப்பிட்டிய வர்த்தக கட்டிடத் தொகுதி புதிய கடை அறைகள் கீழ் மாடி | 1500.00 |
| 02 | பூஜாப்பிட்டிய வர்த்தக கட்டிடத் தொகுதி புதிய கடை அறைகள் மேல் மாடி | 2100.00 |

2024.09.10ம் திகதி பூஜாப்பிட்டிய பிரதேச சபை அலுவலகத்தில்,

**செயலாளர்,**
**பூஜாப்பிட்டிய பிரதேச சபை,**
**பூஜாப்பிட்டிய**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams



ඕනෑම දෙයක්
පහසුවෙන් හා විශ්වාසයෙන්
මිලදී ගැනීමට
දැන්ම පිවිසෙන්න...
adz.lk it's what you want
It's Simple, Trusted & Fast...
adz.lk වෙතින් දැන්
වීඩියෝ වෙළඳ දැන්වීම්
ප්‍රචාරය කිරීමේ අවස්ථාව
WE ACCEPT
Contact Us:-
- 011 2 429 369 | - 077 7 270 067
- 077 7 270 845 | - support@adz.lk



# அறிவித்தல்

## வருடாந்த பொதுக் கூட்டம் 2023/2024

### டிஸ்டிலரீஸ் கம்பனி சிறீலங்கா பிஎல்சி

### பதிவு இல.: PQ 112

டிஸ்டிலரீஸ் கம்பனி சிறீலங்கா பிஎல்சி இன் வருடாந்த பொதுக் கூட்டமானது 2024 செப்டம்பர் 19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-10 நொரிஸ் கெனல் வீதி 110 ஆம் இலக்கத்தில் DCSL PLC இன் இடப்பரப்பிலுள்ள 'சிறிய கேட்போர்கூடத்திலிருந்து மெய்நிகராக்கல் கூட்டமாக நடைபெறும்.

இந்த வருடாந்த பொதுக்கூட்டமானது மெய்நிகராக்கல் பொதுக் கூட்டமாக கொழும்பு பங்கு பரிவர்த்தனையினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு இசைவாக நடைபெறும். பூர்த்தி செய்யப்பட்ட பதிலாள் பத்திரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் 2024 செப்டம்பர் 18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு முன்னராக உட்சேர்க்கப்படல் வேண்டும் அல்லது vyiayanthi.corp@melsta.com என்ற மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படல் வேண்டும் அல்லது +94 112 698 718 என்ற தொலைநகல் வழியாகஅனுப்பப்படல் வேண்டும் (கூட்டம் நடைபெறுவதற்கு ஆயத்தம் செய்யப்பட்ட நேரத்திற்கு இருபத்திநான்கு (24) மணித்தியாலங்களுக்கு குறையாமல்).

**பங்குதாரர்களின் ஒன்லையின் பங்குபற்றுதல்:**

கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு ஆர்வமுள்ள பங்குதாரர்கள் செவிப்புலன் அல்லது செவிப்புலகட்புல வழிவகைகளூடாக கூட்டத்தில் பங்குபற்றலாம். இந்த செயற்பாட்டிற்கு உதவி செய்வதற்காக பங்குதாரர்கள் விபரங்களை பதிவு செய்யப்பட்டுள்ளதும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புமாறு அல்லது vyjayanthi.corp@melsta.com என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது +94 112 698 718 என்ற தொலைநகல் மூலம் கூட்டத்திற்கு ஐந்து (5) நாட்களுக்கு முன்னராக கம்பனியை வந்தடையும் வகையில் அனுப்புவதனால் வழங்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு கூட்டத்தின் வலையமைப்புத் தகவலை வழங்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிகளுக்கு உட்சேர்க்கப்படலாம்.

**பங்குதாரர்களின் ஐயவினாக்கள்:**

பங்குதாரர்கள் ஏதாவது ஐயவினாக்களை கூட்டத்தில் தொடுக்க விரும்பினால் கீழே வழங்கப்பட்டுள்ள பதிவு அலுவலக முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது vyjayanthi.corp@melsta.com என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது +94 112 698 718 என்ற தொலைநகல் மூலம் கூட்டத்திற்கு ஐந்து (5) நாட்களுக்கு முன்னராக அனுப்புமாறு மதியுரை வழங்கப்படுகின்றனர். தனியான அறிவித்தல்கள் பங்குதாரர்களுக்கு தபாலில் அனுப்பப்பட்டுள்ளன. 2023/2024 இற்கான வருடாந்த அறிக்கை மற்றும் அறிவித்தல்களின் மென்பிரதிகள் www.dcslgroup.com என்ற கம்பனியின் இணையதளத்திலும் www.cse/lk என்ற கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**டிஸ்டிலரீஸ் கம்பனி சிறீலங்கா பிஎல்சி**
**இல. 110, நொரிஸ் கெனல் வீதி,**
**கொழும்பு - 10.**

**தொலைபேசி: 011 550 7000**
**2024 செப்டம்பர் 16 ஆம் திகதி.**

**சபையின் கட்டளையின் பிரகாரம்**
**Ms. V.J. Senaratne**
**கம்பனிச் செயலாளர்**

# பெறுகை அறிவித்தல்

## தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சு

### தென் மாகாண சபை

அருகிலுள்ள பாடசாலையே சிறந்த பாடசாலை தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கீழ்க்காணும் வேலைத்திட்டங்களுக்காக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, தென் மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | செயற்றிட்ட இலக்கம் | பாடசாலை | வேலை விபரம் | தேவைப் படும் CIDA பதிவு | மீளளிக்கப் படாத பிணை வைப்பு (ரூ) | கேள்விப் பிணை முறி பெறுமதி (ரூ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | M/C/ NSBS/24/02 | மாற/ ஸ்ரீ மத் அநகாரிக தர்மபால ம.வி | 90 x 25 மூன்று மாடி கட்டிடத்தின் ii மற்றும் iiiம் கட்டம் (மிகுதி வேலை) | C7,C6 | 2000.00 | 78000.00 | 7.8 |
| 02 | G/C/ NSBS/24/03 | கா/ ராஜபக்ஷ ம.வி | கட்டிட சிறிய பழுதுபார்த்தல் (மிகுதி வேலை) | C8,C7 | 1500.00 | 26000.00 | 2.6 |
| 03 | G/C/ NSBS/24/04 | கா/ மாதம்பாகம ம.வி | 90 x 25 மூன்று மாடி கட்டிடத்தின் ii மற்றும் iiiம் கட்டம் (மிகுதி வேலை) | C8,C7 | 1500.00 | 22000.00 | 2.2 |
| 04 | G/C/ NSBS/24/05 | கா/ அளுத்வல ம.வி | 90 x 25 மூன்று மாடி கட்டிடத்தின் ii மற்றும் iiiம் கட்டம் (மிகுதி வேலை) | C8,C7 | 1500.00 | 32000.00 | 3.2 |

02. தேசிய போட்டி கேள்வி முறைமையின் அடிப்படையில் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தங்களை வழங்கும் போது தகைமைகள் பெறும் சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்படி வகுதிகளின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. அரச நிதிச் சுற்றுநிரூப இல. 03/2020 மற்றும் 2020.10.09ம் திகதிய, 03/2020(1) மற்றும் 2021.01.11ம் திகதிய மற்றும் 50 மில்லியனுக்குக் குறைந்த செயற்றிட்டங்களுக்கான அரச நிதிச் சுற்றுநிரூப இல. 04/2016(ii) மற்றும் 2019.05.08ம் திகதிய மற்றும் இல. 04/2016(iii) மற்றும் 2021.02.18ம் திகதிய சுற்று நிருபங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் செல்லுபடியாவதுடன் மாகாண முன்னுரிமை மற்றும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பற்றி கேள்வி மதிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்படும்.

04. கேள்வி விண்ணப்பங்கள் 2024.09.15 முதல் 2024.10.07 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை லபுதுவ, தக்ஷினபாய கல்வியமைச்சின் (தரைமாடி)யில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு அமைச்சின் இவ் இலக்கத்திற்கு வேலை நாட்களில் அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம். 091 - 2030700

05. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.10.08 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு செயலாளர், தென் மாகாண கல்வி அமைச்சு, தக்ஷினபாய, லபுதுவ, காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து பிரதான கணக்காளரின் உத்தியோகபூர்வ, அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

06. கேள்விகளை திறத்தல் 2024.10.08 மு.ப. 10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் தென் மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக் குழு தலைவரின் தலைமையில் அமைச்சில் இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

07. கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைமுறி இலங்கை வணிக வங்கியிலிருந்து தென் மாகாண கல்வியமைச்சின் செயலாளரின் பெயருக்கு பெற்றுக் கொண்ட 2024.10.08 முதல் 2025.01.22 வரை செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றை அல்லது கணக்குப் பிரிவிற்கு காசு செலுத்திய பின்னர் வழங்கப்படும் காசுப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கிப் பிணைமுறியாக சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைமுறி நிராகரிக்கப்படும்.

08. கேள்வி செல்லுபடியாகும் காலம் 77 நாட்களாகும்.

09. சமர்ப்பிக்கப்படும் வேலையுடன் சம்பந்தப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் உள்ளடக்கப்படுமாறு "செலோடேப்" ஒட்டி இருத்தல் வேண்டும். அதன் மூலப்பிரதியில் "மூலப்பிரதி" என்று குறிப்பிடப்பட வேண்டியதுடன் நகல்பிரதியில் "நகல்பிரதி" என குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அவ் உறையைப் பொறியிட்டு, உறையின் இடதுபக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

10. கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிப்பதற்கு முன்பு குறித்த வேலைத்தளத்தை பரீட்சித்துப் பார்த்து இருத்தல் கட்டாயமாவதுடன் வேலைத்தளத்தை பரீட்சித்து கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ரஞ்சித் யாப்பா,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**தென் மாகாண கல்வியமைச்சு,**
**முதலாம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி**
**2024.09.15**

**தொ.பே.இல. 0912030700**
**மின்னஞ்சல் - acc.moesp@gamil.com**

Repeat
Your ad
For
Better
Offers

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கண்டி மாநகர சபை

### Portable Thermal Fogger ஐ வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்

**IFB No.: CPC/KMC/FD/S/PC01-NCB/2024/05**

01. கீழே விபரிக்கப்பட்டவாறு **Portable Thermal Fogger** ஐ வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கண்டி மாநகர சபையானது இப்போது அழைக்கின்றது.

| உருப்படி இல. | பண்ட இனத்தின் சுருக்கமான விளக்கம் | எண்ணிக்கை | 2025.02.07 வரையும் செல்லுபடியாகும் விலைமனு பிணை | ஒப்படைக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1. | Portable Thermal Fogger | 4 எண்ணிக்கைகள் | விலைமனுத் தொகை - ரூபா 15,000.00 | ஒப்படைத்தல் அட்டவணையை பார்வையிடவும் |

02. Portable Thermal Fogger ஐ வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட அனுபவத்துடன் வியாபார பதிவையும் விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரர் உற்பத்தியாளர் இல்லாவிடின் விலைமனுதாரர் Portable Thermal Fogger ஐ ஒப்படைப்பதற்கான உற்பத்தியாளரின் சட்டபூர்வ அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கண்டி, கண்டி மாநகர சபை, வழங்கலுக்கான கணக்காளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 0812 232071) (மின்னஞ்சல்: **supplieskmc@gmail.com)** 2024.09.13 ஆம் திகதியிலிருந்து 2024.10.08 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3.45 மணிக்குமிடையில் வழங்கலுக்கான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

04. 2024.09.13 ஆம் திகதியிலிருந்து 2024.10.08 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.45 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரத்து முன்னூற்றி அறுபது இலங்கை ரூபாவை (2360 இ.ரூ.) பெசேவ உடன் செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது கண்டி மாநகர சபையின் சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும் அல்லது
    - ரொக்கப் பண வைப்பில் கண்டி இலங்கை வங்கியின் 0000032764 என்ற கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் பெயரில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

05. விலைமனுக்கள் பதிவுத் தபாலில் இரு பிரதிகளில் கீழேயுள்ள முகவரிக்கு 2024.10.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மாநகரசபை பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் தொடர்பு இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும்.

06. விலைமனுக்கள் 2025.01.08 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் விலைமனுப் பிணையான பதினைந்தாயிரம் ரூபாவானது 2025.02.07 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியில் பதிவு பெற்றதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் சமாப்பிக்கப்படல் வேண்டும்.

07. விலைமனுப்பிணையானது கண்டி, கண்டி மாநகர சபை, மாநகர சபை ஆணையாளரின் பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது இலங்கை ரூபாவில் இருப்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தின் IV ஆம் பிரிவிற்கு ஒத்திசையாகவுமிருத்தல் வேண்டும்.

08. பெற்றுக் கொண்ட எந்தவொரு விலைமனுவையும் எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை கண்டி மாநகர சபையானது கொண்டுள்ளது.

**கொள்வனவு செய்பவரின் முகவரியானது பின்வருமாறு:**

**மாநகர சபை ஆணையாளர்,**
**கண்டி மாநகர சபை,**
**கண்டி.**
**12.09.2024**

**தொலைபேசி: 0812-222275**
**தொலைநகல்: 0812-222275**

it's what you want www.adz.lk

Replies to Classifieds
&
Casual Advertisements published C/o the Daily News
should only be sent by ordinary post.
Replies sent under registered cover will not be accepted.

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified



For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

**2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.**

## அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு குறிப்பிட்ட நபருக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை மேம்படுத்த உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின்நிலையம்/ வசதியின் பெயர் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|
| E/AL/N/24/15 | வெலிபெல் பவர் எரத்ன பி.எல்.சி | வரணகல (எரத்ன) மினி நீர் மின்நிலையம் | 9.9 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 2024.09.14

# பெறுகை அறிவித்தல்

## சிலாபம் நகர சபை

## சபையின் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல் – 2025

01. 2025-01-01ம் திகதி முதல் 2025-12-31ம் திகதி வரையான காலத்துக்கு சிலாபம் நகர சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களின் வியாபார உரிமையை குத்தகைக்கு விடுவதற்காக விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

02. சபையின் ஆதனங்களை குத்தகைக்கு விடுவதற்கான விண்ணப்பங்களை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டணங்களைச் செலுத்தி 2024-09-18ஆம் திகதி முதல் 2024-10-09ஆம் திகதி வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் சிலாபம் நகர சபையின் வருமானப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விண்ணப்பங்கள் 2024-10-11ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு அவை திறக்கப்படும்.

04. விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும்போது விண்ணப்பதாரர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும். தற்போதைய ஒப்பந்ததாரர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படுதல் அவர்கள் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தை நிலுவையின்றி செலுத்தியிருந்தால் மாத்திரமேயாகும். தகுதி நீக்கம் செய்யப்பட்ட பட்டியலுக்குள்ளானவர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

05. அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளபடி குறித்த பிணைப் பணம் மற்றும் கேள்விப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்த இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும்.

06. விண்ணப்பப் படிவங்களை இரு பிரதிகளில் தயாரித்து முதலாம் பிரதியை உறையொன்றில் இட்டு ''**செயலாளர், நகர சபை, சிலாபம்**'' எனும் முகவரிக்கு குறித்த திகதி, நேரத்திற்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையேல் குறித்த திகதி, நேரத்திற்கு முன்னதாக இக்காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடலாம். இரண்டாம் பிரதியை உறையொன்றினுள் இட்டு உள்ளூராட்சி ஆணையாளர் (வடமேல்), உள்ளூராட்சித் திணைக்களம், பீ நுழைவாயில், இரண்டாம் மாடி, குருநாகல் எனும் முகவரிக்கு குறித்த திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

07. ஆகக்குறைந்த கேள்வியை விட குறைவாக விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்கள் செல்லுபடியற்றதாக்கப்படுவதுடன் அவர்களின் மற்றும் விண்ணப்பப்பத்திரம் பெற்று விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்காதவர்களின் பிணை வைப்பு சபைக்குரித்தாக்கப்படும்.

08. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் குத்தகைக்கு எடுக்க உத்தேசிக்கும் ஆதனத்தின் பெயரை குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு ஆதனம் சம்பந்தமாகவும் வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும்.

09. விண்ணப்பப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் போது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட படிவக் கட்டணம் மற்றும் அரச சட்டவாக்க வரியைச் செலுத்துதல் வேண்டும். இணைப்பில் குறிப்பிடப்பட்ட பொது கேள்வி நிபந்தனைகளுக்கு இணங்குதல் வேண்டும்.

10. வெற்றிகரமான விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகைத் தொகைக்குச் சமனான மாதாந்த தவணையை 10 தவணைகளில் செலுத்தி முடிக்கப்பட வேண்டும் என்பதுடன் அத்தொகைக்கு அரச சட்டவாக்க வரியும் 1000.00 ரூபாவுக்கு 10.00 ரூபா வீதம் முத்திரைக் கட்டணத்துடன் செலுத்துதல் வேண்டும். (அரசாங்க வரி திருத்தங்களின் பிரகாரம் மாற்றமடையும்)

11. விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் போது வைப்புச் செய்யும் மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகையை விடுவித்துக் கொள்வதானது வெற்றிகரமான கேள்விதாரரால் நகர சபையுடன் ஒப்பந்தமொன்றுக்கு உடன்பட்ட பின்னரேயாகும்.

12. வெற்றிகரமான கேள்வியாளரைத் தெரிவு செய்ததன் பின், அறிவிக்கப்பட்ட 07 நாட்களுக்குள் 04 மாதத் தவணைக்குச் சமனான பாதுகாப்பு பிணை வைப்புத் தொகையை நகர சபைக்கு வைப்புச் செய்து, ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதுடன் 10,000.00 ரூபா வரையான சகல வெற்றியாளர்களும் கேள்வித் தொகையை ஒரே தடவையில் செலுத்த வேண்டியதுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

13. விண்ணப்பங்களைத் திறக்கும் வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரத்தைப் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதற்கு அனுமதி அளிக்கப்படும்.

14. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

15. இந்த அட்டவணையில் உள்ள ஆதனமொன்றை கேள்விச் செயற்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்வதற்கான அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

16. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 032-2222275 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு வருமான மேம்பாட்டு அதிகாரியிடம் விசாரித்தறிந்துகொள்ளலாம்.

**அட்டவணை**

| தொ. இல. | உருப்படிகள் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா) | கேள்விப் பிணை முறி (ரூபா) மீளளிக்கப் படும்) | படிவக் கட்டணம் (ரூபா) (மீளளிக்கப் படாதது) | குத்தகைக் காலம் (வருடங்கள்) |
|---|---|---|---|---|---|
| | **இறைச்சிக் கடை** | | | | |
| 01 | புதிய மரக்கறிச் சந்தையின் 01ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை | 284,528.20 | 22,762.26 | 700.00 | 01 |
| 02 | புதிய மரக்கறிச் சந்தையின் 02ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை | 143,990.00 | 11,519.20 | 700.00 | 01 |
| 03 | புதிய மரக்கறிச் சந்தையின் ஆட்டிறைச்சிக் கடை | 58,740.00 | 5,874.00 | 500.00 | 01 |
| 04 | நகர பன்றியிறைச்சிக் கடை | 1,018,248.00 | 50,912.40 | 1000.00 | 01 |
| 05 | கடற்கரை கொலனி பன்றியிறைச்சிக் கடை | 91,300.00 | 9,130.00 | 500.00 | 01 |
| 06 | கடற்கரை தாய்மார் சிகிச்சைக் கட்டிடத்திற்குப் பின்னாலுள்ள பன்றியிறைச்சிக் கடை | 69,850.00 | 6,985.00 | 500.00 | 01 |
| | **காணித் துண்டுகள்** | | | | |
| 07 | கொழும்பு வீதியில் 04ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள 0.63 பர்ச் இடப்பரப்பு | 264,110.00 | 21,128.80 | 1000.00 | 01 |
| | **வாகனத் தரிப்பிடங்கள்** | | | | |
| 08 | பேர்ள் இடப்பரப்பின் வாகனத் தரிப்பிடம் | 441,710.50 | 35,336.84 | 700.00 | 01 |
| | **தேங்காய் விளைச்சல்** | | | | |
| 09 | விலியம் சில்வா காணியிலுள்ள தென்னை விளைச்சல் | 2,310.00 | 231.00 | 100.00 | 01 |
| 10 | டீ.எம். த சில்வா மாவத்தையிலுள்ள (ஜாயாவத்த) தென்னை விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 4,620.00 | 462.00 | 100.00 | 01 |
| 11 | ரிதிவெல்ல செயலக உத்தியோகபூர்வ விடுதியின் தென்னை விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 14,289.00 | 1,428.90 | 100.00 | 01 |
| 12 | சத்துட்டு உயன தென்னை விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 12,089.00 | 1,208.90 | 100.00 | 01 |
| | **சந்தை** | | | | |
| 13 | இரவுச் சந்தை | 954,800.00 | 47,740.00 | 1000.00 | 01 |
| | **மலசலகூட சேவைகள்** | | | | |
| 14 | ரிதிவெல்ல பொது மலசலகூடம் | 1,119,745.00 | 55,987.25 | 1000.00 | 01 |
| 15 | மீன் சந்தையின் பொது மலசலகூடம் | 633,270.00 | 31,663.50 | 1000.00 | 01 |

**எம்.எஸ்.எஸ். மாரசிங்க,**
**செயலாளர்,**
**நகர சபை, சிலாபம்.**
2024-09-13.

**தொலைபேசி: 032-2222275**
**தொலைநகல்: 032-2223708**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## புத்தளம் நகர சபை

# ஏல அழைப்பிதழ்

புத்தளம் நகர சபை டெண்டர் குழுவின் நிபந்தனைகளுக்கு இணங்க புத்தளம் நகர சபை பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள பழைய புத்தளம் நகர சபை கட்டிட வளாகத்தில் சுற்றாடல் நட்புறவான வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு புத்தளம் மாவட்டத்தின் நிரந்தர குடியிருப்பாளர்கள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர்களுக்கான அழைப்பாகும்.

| | | |
|---|---|---|
| 01. | பொருளின் விபரம் | புத்தளம் நகர சபையின் கொள்வனவு சபையின் நிபந்தனைகளுக்கு அமைய பழைய புத்தளம் நகர சபை கட்டிட வளாகத்தில் சுற்றாடல் நட்புறவான வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| 02. | ஏல சமரப்பிப்பு முடிவடையும் திகதி மற்றும் நேரம் | 2024.09.27 அன்று காலை 10.30 மணிக்கு |
| 03 | விலைமனு ஆவணங்கள் மற்றும் தொலைபேசி இலக்கம் | புத்தளம் நகர சபை, புத்தளம் தொ.இல – 032 2265275 |
| 04 | திருப்பிச் செலுத்த இயலாத கட்டணம் விண்ணப்பக் கட்டணம் | ரூபாய். 1,000.00 |
| 05 | விலைமனு பாதுகாப்பின் பெறுமதி | ரூபாய். 50,000.00 |

01. கேள்வி கேட்க விரும்புவோர் புத்தளம் நகர சபை அலுவலகத்தில் 2024.09.26 ஆம் திகதி வரை வேலை நேரத்தில் (காலை 9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை) ரூபா.1,000 என்ற மீளப்பெற முடியாத கட்டணத்தை செலுத்தி முழுமையான ஏல ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

02. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட ஏல மனுக்களை மேற்படி அட்டவணையின் 03 ஆம் வரியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் இடுவதன் மூலமாகவோ எமக்கு கிடைக்கப் பெற முடியும். ஏல விலைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன், மேலே உள்ள அட்டவணையின் 02 ஆம் வரியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்தில் கேள்வி மனுதாரர்களுக்கு அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு முன்னால் ஏல மனுக்கள் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**டெண்டர் குழு,**
**புத்தளம் நகர சபை**

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

## வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு

## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் வேலைகளுக்காக முன் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| விலைமனு இல. | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியல் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் இன்றி) (ரூ. மில்லியன்) | ICTAD நிறுவனப் பதிவு | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20/ B/06/2024 | உடவளவை தேசிய பூங்காவின் ஹந்தகிரிய மலசலகூட முறைமையை நிர்மாணித்தல் | 8.7 | C8/C7/C6 (கட்டிடங்கள்) | 3000.00 | 131,000.00 2024-12-02ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். |

02. கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

03. கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டவர்களாக இருத்தல் கூடாது.

04. இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களை 2024-10-07ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பத்தரமுல்லை, வனசீவராசிகள் திணைக்களத்தின் கணக்கிடல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் குறித்த செயற்றிட்ட வளவை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்காக பின்வரும் தகைமைகள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
    - ட கடந்த 05 வருட காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் வருடாந்த அளவானது ஆகக் குறைந்தது 42.0 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
    - ட ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளக்கூடிய எந்தவொரு முற்பணத் தொகை தவிர்ந்த ஏனைய உடன்படிக்கை கடப்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டதன் பின் ஆகக்குறைந்த திரவச் சொத்து அல்லது / மற்றும் கடன் வசதிகளின் அளவு 7 மில்லியன் ரூபாவிற்கும் குறையாமல் இருத்தல் வேண்டும்.

07. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் சகல கேள்விதாரர்களும் கடந்த ஆறு மாதங்களுக்கான வங்கி அறிக்கைகள் மற்றும் கடந்த 05 வருடங்களினுள் நிறைவு செய்யப்பட்ட இதற்குச் சமமான 02 வேலைகளை முற்படுத்துதல் வேண்டும் என்பதுடன் 10 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விகளுக்கு கேள்வி ஆவணங்களில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிக்கைகளை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை 2024-10-07ஆம் திகதி வரையில் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் எனும் பெயருக்கு எழுத்து மூலமான கோரிக்கை மற்றும் ICTAD பதிவுப் புத்தகம் மற்றும் திணைக்களத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத வைப்பைச் செலுத்தியதன் பின் வழங்கப்படும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததன் பின் குறித்த விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

09. மேற்கூறிய கேள்விப் பிணை முறியை வங்கியின் மூலம் செலுத்துவதானால் தரப்பட்டுள்ள பெறுமதி மற்றும் தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் வகையில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணை முறியைச் சமர்ப்பிக்காத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் கம்பனி பதிவாளர் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட PCA 03 சான்றிதழ் கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறல்லாத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024-10-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அன்றைய தினமே (2024-10-08) பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

11. கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்படாத இந்தப் பெறுகைச் செயற்பாட்டிற்குரித்தான ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்வொன்றை வழங்கும் அதிகாரத்தை வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.

12. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

நியூசிலாந்து டெஸ்ட் தொடர்:

# கமிந்து துடுப்பாட்ட வரிசையில் முன்னேற்றம்: குசல் விக்கெட் காப்பாளராக மாத்திரம் தேர்வு





நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் குசல் மெண்டிஸ் விக்கெட் காப்பாளராக மாத்திரமே இலங்கை அணியில் இடம்பெறுவார் என்று இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுத் தலைவர் உபுல் தரங்க குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்து சுற்றுப்பயணத்தின்போது அனுபவ துடுப்பாட்ட வீரரும் விக்கெட் காப்பாளராகவும் செயற்படும் தினேஷ் சந்திமால் உபாதைத்துக்கு உள்ளன நிலையிலேயே அந்தத் தொடரில் சோபிக்காத குசல் மெண்டிஸை விக்கெட் காப்பாளராக மாத்திரம் அணியில் தக்க வைக்க தேர்வுக் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

குசல் மெண்டிஸ் இங்கிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டு போட்டிகளில் ஆடிய நிலையில் நான்கு இன்னிஸ்களிலும் மொத்தமாக 77 ஓட்டங்களையே பெற்றார். இதன் ஓட்ட சராசரி 19.25 ஆகும்.

மெண்டிஸ் நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் ஆடினால் அவர் ஒரு விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரராக 7 ஆவது வரிசையிலேயே துடுப்பெடுத்தாட களமிறங்குவார் என்று செய்தி இணையதளம் ஒன்றுக்கு உபுல் தரங்க குறிப்பிட்டுள்ளார்.

'சந்திமாலினால் விக்கெட் காப்பில் ஈடுபட முடியாத பிரச்சினையை நாம் எதிர்கொண்டுள்ளோம். எனவே, சதீர அல்லது குசல் பதினோரு பேரில் தேர்வு செய்யப்பட்டால் அந்த இருவரில் ஒருவர் விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரராக 7ஆவது வரிசையிலேயே களமிறக்கப்படுவார்' என்று உபுல் தரங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் சோபித்த கமிந்து மெண்டிஸ் துடுப்பாட்டத்தில் முன் வரிசையில் களமிறக்கப்படவிருப்பதாக தரங்க உறுதி செய்துள்ளார். தற்போது ஏழாவது வரிசையில் களமிறங்கி வரும் கமிந்து தொடர்ந்து தனது திறமையை வெளிப்படுத்தி வருகிறார்.

இங்கிலாந்து தொடரில் இலங்கை சார்பில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவராக இடம்பிடித்த கமிந்து மெண்டிஸ் மூன்று போட்டிகளிலும் 5 இன்னிங்ஸ்களில் ஒரு சதம், இரண்டு அரைச்சதங்களுடன் 267 ஓட்டங்களைப் பெற்றதோடு இதன் ஓட்ட சராசரி 53.40 ஆகும்.

எனினும் நியூசிலாந்து தொடரில் மூன்றாவது வரிசையில் களமிறக்கப்படும் வீரர் குறித்து தரங்க எந்த தகவலையும் வெளியிடவில்லை.

இந்நிலையில் தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை ஏ அணியில் துடுப்பாட்டத்தில் சோபித்த ஓஷாத பெர்னாண்டோ நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்காக இலங்கைக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே ஆரம்ப துடுப்பாட்ட வீரராக பத்தும் நிசங்க சிறப்பாக செயற்படுவதோடு முன்னாள் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன ஆரம்ப வீரராக களமிறங்கி வருகிறார். இந்நிலையில் மூன்றாவது வரிசையில் களமிறங்கும் குசல் மெண்டிஸை மத்திய பின் வரிசைக்குத் தள்ள தேர்வுக் குழு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பமாகவிருப்பதோடு இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி செப்டெம்பர் 26 தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறும். இந்த இரு டெஸ்ட் போட்டிகளும் காலி சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொடரைப் பறிகொடுத்தது இலங்கை மகளிர் ஏ அணி



பங்களாதேஷ் மகளிர் ஏ அணிக்கு எதிரான மூன்றாவது டி20 போட்டியிலும் 10 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்த இலங்கை மகளிர் ஏ அணி ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடரில் மேலும் இரண்டு போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில் தொடரை 0–3 என பறிகொடுத்தது.

கொழும்பு, எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நேற்று (15) நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களுக்குள் 9 விக்கெட்டுகளை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை மகளிர் சார்பில் மல்ஷா செஹானி 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய இலங்கை மகளிர் ஏ அணி வேகமாக ஓட்டங்களைச் சேர்க்கத் தவறியது. இதனால் அந்த அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 87 ஓட்டங்களையே பெற்றது. நிலக்ஷனா சந்தமினி அதிகபட்சமாக 22 ஓட்டங்களைப் பெற்றார்.



டயலொக் பாடசாலை ரக்பி நொக் அவுட் சுற்றில் பிரீமியர் கிண்ணத்தை வென்ற மஹாநாம கல்லூரி மற்றும் தலைவர் கிண்ணத்தை சுவீகரித்த லலித் அதுலத்முதலி கல்லூரி அணித் தலைவர்கள் வெற்றிக் கிண்ணங்களை பெறுவதை படங்களில் காணலாம். இதில் நுகவல மத்திய கல்லூரியை வீழ்த்தியே லலித் அதுலத்முதலி கல்லூரி தலைவர் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியதோடு ஹவலொக் பார்க் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (13) நடந்த பிரீமியர் கிண்ண இறுதிப் போட்டியில் ஆனந்த கல்லூரியை மஹாநாம கல்லூரி 24–21 என்ற புள்ளிகளால் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## யாகி சூறாவளி தாக்கி மியன்மாரில் 74 பேர் பலி



மியன்மாரில் யாகி சூறாவளியால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 74 ஆக அதிகரித்துள்ளது. 89 பேரின் நிலை என்னவென்று இன்னமும் தெரியவில்லை.

யாகி சூறாவளியால் கடும் மழை பெய்ததோடு மியன்மார் முழுதும் ஆறுகளின் ஐந்து அணைக்கட்டுகள் உடைந்தன. 235,000க்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

நேப்பிடாவ் உட்பட மத்திய பகுதிகள் பலவற்றில் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின.மாந்தளை, பாகோ போன்றவற்றைச் சுற்றியுள்ள தாழ்வான பகுதிகளில் கடுஞ்சேதம் ஏற்பட்டுள்ளது.வெள்ளத்தாலும் நிலச்சரிவுகளாலும் வீதிகளும் பாலங்களும் உடைந்தன. இணையம், தொலைத் தொடர்பு போன்ற சேவைகள் தடைபட்டன. சுமார் 65,000 வீடுகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 180க்கும் அதிகமான நிவராண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வழக்கத்துக்கு மாறாக மியன்மார் இராணுவம் வெளிநாடுகளிடம் உதவிக்கான அழைப்பை விடுத்துள்ளது.

## பாடப்புத்தக தட்டுப்பாடு: மேல் நீதிமன்றில் மனு



பாகிஸ்தானின் சிந்து மாகாணத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் பாடப்புத்தகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமைக்கு எதிராக சிந்து மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கல்வித் திணைக்களத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் சிந்து பாடப்புத்தகங்கள் சபைத் தலைவர், கல்வி அமைச்சின் செயலாளர்இ ஆரம்ப மற்றும் இடைநிலை கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இம்மனு தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகும் சட்டத்தரணிகள், சிந்துவில் உள்ள பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் கல்வித் திணைக்களத்தில் இருந்து பாடப்புத்தகங்களை எதிர்பார்த்த வண்ணமுள்ளனர். கல்வியாண்டு ஆரம்பித்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள போதிலும், மாணவர்களுக்கு இன்னும் பாடப் புத்தகங்கள் கிடைக்கப்பெறாவில்லை என்றனர்.

இதேவேளை சிந்து உயர் நீதிமன்ற நீதிபதி சலாவுதீன் மாகாணத்தில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளின் நிலைமையை எடுத்துக்காட்டும் விரிவான அறிக்கையொன்றையும் ஏற்கனவே மன்றில் சமர்ப்பித்துள்ளார்.

# சர்வதேச செய்திகள்

# வடக்கு காசாவில் இஸ்ரேல் புதிய வெளியேற்ற உத்தரவு: பலஸ்தீனர் பலி 41,206 ஆக உயர்வு



வடக்கு காசாவில் புதிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராகும் வகையில் பயித் லஹியா பகுதியில் இருந்து மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது. மறுபுறம் கிழக்கு காசாவில் இஸ்ரேலியப் படை வாபஸ் பெற்ற பகுதி முற்றாக சின்னபின்னமாக்கப்பட்டுள்ளதை அங்கு திரும்பிய மக்கள் கண்டுள்ளனர்.

காசாவில் பதினொரு மாதங்களுக்கு மேலாக மோதல் நீடிப்பதோடு இஸ்ரேல் அங்கு நடத்தும் இடைவிடாத தாக்குதல்களில் மேலும் பலர் பலியாகியுள்ளனர். நுஸைரத் மற்றும் ஜபலியா அகதி முகாம்களில் நேற்றுக் காலை இடம்பெற்ற தாக்குதல்களில் நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

நுஸைரத் அகதி முகாமில் அபூ சரர் பகுதிக்கு அருகில் இமாத் அல் தீன் குடும்பத்திற்குச் சொந்தமான வீட்டை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் குறைந்தது மூவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது. மறுபுறம் ஜபலியா அகதி முகாமில் சுவைதான் குடும்பத்திற்குச் சொந்தமான வீட்டின் மீது நடத்திய வான் தாக்குதலில் மேலும் ஒரு பலஸ்தீனர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேல் கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 24 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 57 பேர் காயமடைந்ததாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,206 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 95,337 பேர் காயமடைந்துள்ளனர். இதில் பெண்கள் மற்றும் சிறுவர்களே பெரும்பான்மையினராகும்.

இதேவேளை இஸ்ரேலை நோக்கி பலஸ்தீன போராளிகள் ரொக்கெட் தாக்குதலை நடத்திய நிலையில் இஸ்ரேலிய இராணுவம் பயித் லஹியா பகுதியில் இருந்து மக்களை வெளியேற நேற்று உத்தரவு பிறப்பித்தது.

“வடக்கு காசாவில் அல் மன்சியா, ஷெய்ன் செயித் மற்றும் பயித் லஹியா பகுதிகளில் தற்போது தங்கியுள்ள அனைவரும் தமது வீடுகளை விட்டு வெளியேறுங்கள்” என்று இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் அவிசய் அட்ராயீ, எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு காசாவில் இருந்து இரு ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதாகவும் அதில் ஒன்று கடலில் விழுந்ததோடு மற்றது தெற்கு இஸ்ரேலின் அஷ்கலோனுக்கு அருகில் இடைமறிக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் இராணுவம் முன்னதாக குறிப்பிட்டது.

இந்நிலையில் வடக்கு காசாவில் இஸ்ரேல் பிறப்பித்திருக்கும் புதிய வெளியேற்ற உத்தவு காசாவில் இஸ்ரேலிய குடியேற்றங்களை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுவதாக பலஸ்தீன வெளியுறவு அமைச்சு எச்சரித்துள்ளது.

இதேவேளை கிழக்கு காசாவில் இஸ்ரேலிய தரைப்படை நடத்திய பாரிய தாக்குதல்களுக்குப் பின் அங்கிருந்து படையினர் வாபஸ் பெற்றுள்ளனர். இதனையடுத்து அந்த நகருக்கு திரும்பிய மக்கள் பாரிய அழிவுகளை ஏற்படுத்திருப்பதை அவதானித்துள்ளனர்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் முயற்சியில் தொடர்ந்து இழுபறி நீடிக்கும் நிலையில் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு ஹமாஸ{டன் போர் நிறுத்தம் ஒன்றை செய்துகொள்ள இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசுக்கு அழுத்தம் கொடுத்து இஸ்ரேலிலும் தொடர்ந்து பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

டெல் அவிவ் நகரில் சனிக்கிழமையும் ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுதிரண்டனர்.

இராணுவத் தலைமையகம் மற்றும் ஏனைய அரச கட்டடங்களுக்கு முன்னால் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் நெதன்யாகுவுக்கு எதிராக கோசங்களை எழுப்பியதோடு ஹமாஸுடன் உடன்படிக்கை ஒன்றை எட்டும்படியும் வலியுறுத்தினர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலின்போது சுமார் 250 பணயக்கைதிகள் பிடிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து 100க்கும் அதிகமான பணயக்கைதிகள் உயிருடன் அல்லது மரணித்த நிலையில் பலஸ்தீன போராளிகளின் பிடியில் உள்ளனர்.

# யெமனிலிருந்து வந்த ஏவுகணை மத்திய இஸ்ரேலை தாக்கியது

யெமனில் இருந்து வீசப்பட்ட நீண்டதூர பலிஸ்டிக் ஏவுகணை ஒன்று மத்திய இஸ்ரேலைத் தாக்கி இருப்பதோடு இதனால் சைரன் அபாய ஒலியும் எழுப்பப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஏவுகணையால் டெல் அவிவ் மற்றும் பென்கூரியன் சர்வதேச விமானநிலையம் உட்பட மத்திய இஸ்ரேலில் சைரன் எழுப்பப்பட்டிருப்பதோடு குடியிருப்பாளர்கள் பாதுகாப்பு முகாம்களை நோக்கி ஓட்டம்



பிடித்துள்ளனர். எனினும் இதனால் யாருக்கும் பதிப்பு ஏற்படவில்லை என்பதோடு பொருட்சேதங்களும் ஏற்படவில்லை. விரைவிலேயே விமான செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பியது என்று விமானநிலைய நிர்வாகம் குறிப்பிட்டது. மத்திய நகரான மடினிலுள்ள ரயில் நிலையம் ஒன்றின் மின்தூக்கி ஒன்றில் ஏவுகணையின் பாகங்கள் விழுந்த படங்கள் வெளியாகியுள்ளன.

'மத்திய இஸ்ரேலில் சிறிது நேரத்திற்கு முன்னர் சைரன் ஒலி எழுப்பப்பட்ட நிலையில் கிழக்கில் இருந்து மத்திய இஸ்ரேலுக்குள் தரையில் இருந்து தரையைத் தாக்கும் ஏவுகணை ஒன்று கடந்து செல்வது அவதானிக்கப்பட்டதோடு அது திறந்த வெளியில் விழுந்தது. எவருக்கும் காயம் ஏற்படவில்லை' என்று இஸ்ரேல் இராணுவம் கூறியது.

இதன்போது பாதுகாப்பான இடத்தை நோக்கி செல்ல முயன்ற நிலையில் ஒன்பது பேருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டிருப்பதாக இஸ்ரேலிய அவசர சேவை பிரிவு எக்ஸ் சமூக தளத்தில் குறிப்பிட்டுள்ளது. பிராந்தியத்தில் பாரிய ஒலி ஒன்று கேட்டதோடு அது இஸ்ரேலிய இடைமறிப்பு ஏவுகணையால் வந்தது என்று இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைப்பால் சுட்டு வீழ்த்தத் தவறிய யெமன் ஏவுகணையால் தீ ஏற்பட்டுள்ளது என்று யெமன் ஹூத்திக்களின் சபா செய்தி நிறுவனம் கூறியது. '20 ஏவுகணைகளால் இடைமறிக்க முடியாத நிலையில் யெமன் ஏவுகணை ஒன்று இஸ்ரேலை அடைந்தது' என்று ஹூத்தி ஊடக அதிகாரி ஒருவரான நஸ்ருத்தீன் ஆமிர், எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யெமன் தலைநகர் சானா உட்பட பெரும் பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் காசாவில் போர் வெடித்தது தொடக்கம் பலஸ்தீனர்களுக்கு அதரவாகஇஸ்ரேலிய இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இதற்கு முன்னர் ஹூத்திக்கள் வீசிய ஏவுகணை ஒன்று இஸ்ரேலுக்குள் ஆழ ஊடுருவி தாக்க தவறியது. கடந்த மார்ச்சில் விசிய ஏவுகணை ஒன்று மாத்திரம் எலிட் நகரில் செங்கடல் துறைமுகத்திற்கு அருகில் திறந்த வெளியில் விழுந்தது.

ஏவுகணைகள் தவிர ஹூத்திக்கள் ஆளில்லா விமானங்கள் மூலமும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துகிறது. கடந்த ஜூலையில் முதல் முறையாக டெல் அவிவை தாக்கிய ஆளில்லா விமானத்தால் ஒருவர் கொல்லப்பட்டு நால்வர் காயமடைந்தனர். இதனையடுத்து யெமனின் ஹுதைதா துறைமுகத்தின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் ஆறு பேர் கொல்லப்பட்டதோடு மேலும் 80 பேர் காயமடைந்தனர். காசா தாக்குதலின் முதல் ஆண்டு நிறைவு ஒக்டோபர் 7 ஆம் திகதியில் இடம்பெறவுள்ள நிலையில் எதிர்காலத்தில் இஸ்ரேல் மேலும் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்று ஹூத்திக்கள் எச்சரித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 16ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.